
# கல்கி

KALKI 13.11.88 ரூ. 2.



ராபர்ட்-ராஜசேகர்:

மசாலா சேர்க்கிறார்கள்!


அறிமுகம்
International
LUX
International
Lux
BEAUTY SOAP
LUX
"70 நாடுகளிலே பெரிதும் விரும்பப்படும் மேனியெழில் பராமரிப்பு சோப்புதான் எனக்கும் பெருவிருப்பம்!" ஸ்ரீதேவி
70 நாடுகளிலுள்ள மிக அழகான சினிமா நட்சத்திரங்கள் தேர்ந்தெடுக்கும் ஒரே மேனியெழில் பராமரிப்பு சோப்—இன்டர்நேஷனல் லக்ஸ்.
ஏனெனில், செழுமையான, செறிவான நுரையும், உலகே விரும்பும் நறுமணமும் உள்ளது இன்டர்நேஷனல் லக்ஸ் மட்டுமே.
இப்போது, இந்த சர்வதேச தரமேன்மையுள்ள மேனியெழில் பராமரிப்பு உங்களுக்கும் கிடைக்கிறது, இந்தியாவில்.
International
Lux
உலகெங்கும் சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப்.
HTA 1953
இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமிக்க தயாரிப்பு.



# “நான் இருப்பது எம்.ஜி.ஆர். அணி”

—பொன்னையன்

நிருபர்: என்ன! நீங்கள் அரசியலில் இருக்கிறீர்களா? எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் உங்கள் பெயர் பத்திரிகைகளில் அடிபடக் காணோமே! அரசியலை விட்டே விலகி விட்டீர்களா என்று கூட எண்ணத் தோன்றுகிறது?

பொன்னையன்: நான் அன்னை ஜானகி அணியில்தான் இருக்கிறேன். நீங்கள் எங்கள் கட்சிப் பத்திரிகையான ‘அண்ணா’வைப் படித்தால், என் செயல்பாடுகள் உங்களுக்குத் தெரியும்.

நிருபர்: எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அ.தி.மு.க.வில் கணிசமான பகுதியினர் ஜெயலலிதாவின் பின்னால் போன போது நீங்கள் ஜானகியின் பின்னால் சென்றது ஏன்?

பொன்னையன்: எங்கள் அணியை ‘ஜானகி அணி’ என்று குறிப்பிடுவதே தவறு. நாங்கள் எம்.ஜி.ஆர். அணியில் இருக்கிறோம். பதவியை ருசிக்க இடையில் வந்தவர்கள் வந்த பணி முடிந்தவுடன் பிரிந்து போனார்கள். ராமாவரம் தோட்டம் கழகத்தவருக்குத் தாய் வீடு. அன்னை ஜானகியின் தாயுள்ளம், தொண்டு மனப்பான்மை, பிறரிடம் அவர் காட்டும் பாசம், பண்பு இவற்றை உணர்ந்தவர்கள் நிச்சயமாக ஜானகி எம்.ஜி.ஆர். பின்னால் தான் செல்வார்கள். நாங்கள் அரசியல் பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் ராமாவரம் தோட்டத்தோடு ஒன்றிப் போனவர்கள்.

நிருபர்: வரும் தேர்தலில் ஜானகி அணி — காங்கிரஸோடு தேர்தல் உடன்பாடு கொள்ளுமா?

பொன்னையன்: அண்ணா தி.மு.க. இரண்டாகப் பிளவுபட்டதற்குக் காரணமே காங்கிரஸ் சூழ்ச்சிதான். திராவிட இயக்கங்களை ஒழித்து விட வேண்டுமென்பதுதான் காங்கிரஸின் சதித் திட்டம். தமிழர் நலனில் அக்கறை உள்ள எந்த அரசியல் கட்சியும், காங்கிரஸுடன் கூட்டுச் சேர்வது அந்தக் கட்சிக்குத்தான் ஆபத்தை விளைவிக்கும்.

நிருபர்: மீண்டும் காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவதே எங்கள் லட்சியம் என்று சொல்கிறார்களே காங்கிரஸார்.....!

பொன்னையன்: கடைசி வரை, காமராஜர் கொள்கை என்பது இந்திரா காந்தியின் ஆட்சி இந்திய மண்ணில் இருக்கக் கூடாது என்பதுதான். இன்று இந்திரா காந்தியின் மகன் ராஜீவ் காந்தியும் தாயைப் போலவே ஜனநாயக விரோதப் போக்கைத்தான் கொண்டிருக்கிறார். எனவே, காமராஜ் ஆட்சி என்று காங்கிரஸார் கூறுவது காங்கிரஸுக்கு எதிரான ஆட்சி இங்கு வர வேண்டும் என்று கூறுவதற்கு ஒப்பாகும்.

நிருபர்: கடந்த இருபது வருட காலத்தில் தமிழகம் பாழ்பட்டுப் போனது என்று காங்கிரஸார் குற்றம் சாட்டுகிறார்களே!

பொன்னையன்: தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான மின்சாரம், தண்ணீர் இரண்டும் தமிழகத்துக்குத் தாராளமாகக் கிடைக்க மத்தியில் இருந்த, இருக்கிற காங்கிரஸ் ஆட்சி எடுத்த நடவடிக்கைகள் என்ன? ஒரு காலத்தில் வற்றாத ஜீவ நதிகளாக இருந்த காவிரி, தென்பெண்ணை, பாலாறு, ஆகியன வற்றிப் போனதற்குக் காரணமே, இந்திரா அம்மையார் காவிரியின் குறுக்கே பல அணைகள் கட்ட கர்நாடக அரசுக்கு அனுமதி அளித்ததுதான். ராஜீவ் காந்தி ஆட்சியிலும் காவிரி நீர் பிரச்னைக்குத் தீர்வு இல்லை. இப்போது கபினி அணைக்கு அருகே ஒரு மலையைக் குடைந்து கர்நாடகத்தின் பெரும் பகுதிக்குக் காவிரியைக் கொண்டு போக இருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேறினால், காவிரியைத் தமிழக மக்கள் மறந்து விட வேண்டியதுதான்.

நிருபர்: வன்னியர் சங்கம், மற்றும் அதன் கோரிக்கைகள் பற்றி உங்கள் கருத்து....?

பொன்னையன்: சாதிச் சங்கங்கள் வளர்வது தமிழகத்தின் ஒட்டு மொத்த நலனுக்கு உகந்தது அல்ல!

நிருபர்: ஜெயலலிதாவைப் பற்றி...

பொன்னையன்: நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசுவோமே.

சொந்த ஊரில், விவசாயத்தில் இறங்கியிருக்கிறார் பொன்னையன். மிளகு, ஏலம், கிராம்பு என்று மலையில் விளையும் பொருட்களைச் சமவெளியிலேயே பயிரிட்டு வெற்றி கண்டிருக்கிறாராம்.

விடைபெறும் போது ‘ராஜீவ் காந்தி உங்கள் ஊருக்குச் (திருச்செங்கோடு) சென்று ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறாரே’ என்று கேட்ட போது ‘என்னை என் தொகுதி மக்களுக்கு நன்கு தெரியும். நான் அவர்களுக்குச் செய்த பணிகளும் தெரியும். என்னை யாரும் வெல்ல முடியாது’ என்று தன்னம்பிக்கையோடு கூறி முடித்தார்.

சந்திப்பு: தில்லப்பா

# "தமிழ் சினிமாவைச் சீர் திருத்துவது எங்கள் பணியல்ல...!"

**ராபர்ட் – ராஜசேகர்: மசாலா சேர்க்கிறார்கள்.**



* இயக்குனர்களுடன் 'டிஸ்கஷனில்' நடிகர்கள்.

தமிழ்சினிமாவின் வரலாற்றில் பாலைவனச் சோலை ஒரு புத்துணர்ச்சி தந்த வித்தியாசமான படம். இதை இயக்கிய ராபர்ட்–ராஜசேகர், பிலிம் இன்ஸ்டிடியூட்டில் ஒளிப் பதிவுத் துறையில் சேர்ந்து படித்தவர்கள். இவர்களுடைய 'பறவைகள் பலவிதம்' இவ்வாண்டு தீபாவளி ரிலீஸ். இளைய தலைமுறையைச் சுற்றி வரும் இந்தப் படத்தின் கதையைப் பற்றியும், பொதுவாக இன்றையத் தமிழ் சினிமா பற்றியும், ராபர்ட்–ராஜசேகர் இருவரையும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது...

கே: இந்தப் படத்தின் மூலம் நீங்கள் சொல்ல வரும் கருத்து என்ன?

பதில்: பிரமாதமாக எந்தச் செய்தியையும் நாங்கள் சொல்ல வரவில்லை. மூன்று மாணவர்கள், மூன்று மாணவிகள். கல்லூரிப் படிப்பு முடிந்து எதிர்காலம் பற்றிய ஏகப்பட்ட கனவுகளுடன் வெளியே வருகிறார்கள். குறிப்பிட்ட காலத்துக்கு அப்புறம் சந்தித்துத் தங்கள் நிலைமையை ஒவ்வொருவரும் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். மீண்டும் சந்

திக்கும் போது, மற்றவர்களை எதற்காக வருத்தத்திற்குள்ளாக்க வேண்டுமென்று, தங்கள் நிலையைப் பற்றிப் பொய் சொல்கிறார்கள். பின்னர் அந்த மூன்று மாணவர்களில் ஒருவர், எல்லோரையும் தனித் தனியாகச் சந்திக்கும் வேளையில் குட்டு வெளிப்படுகிறது. அந்த நிலையில் ஒருவருக்கொருவர், பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவி புரிவதுடன், மூன்று மாணவர்களும், அந்த மூன்று மாணவிகளைக் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். இந்தக் கதையில் நாங்கள் சமூதாயத்திற்கு என்ன மெஸேஜ் சொல்ல முடியும்...? இளைஞர்களுக்குள் ஒரு நல்ல உணர்வு (good sense) இருக்க வேண்டும் என்று சொல்கிறோம்... ஒருவருக்கொருவர் உதவும் மனோபாவம் இருக்க வேண்டும்.

கே: கதைக்கு அவசியமில்லாத மசாலாக்களை ஏன் சேர்க்க வேண்டும்?

பதில்: இப்போதிருக்கும் சூழ்நிலையில் எங்களால் இதையெல்லாம் தடுக்கமுடியாது. எங்களது முந்தைய படமான 'தூரம் அதிகமில்லை' ரிலீஸான அன்று திண்டுக்கல்லில் ஒரு தியேட்டரில் இருந்தோம். உள்ளே நுழைந்த இளைஞர்கள் அத்தனை பேரும் 'எத்தனை ஃபைட்டு இருக்கும்...?' என்று ஆவலுடன் தங்களுக்குள் பேசிக் கொண்டே தான் நுழைந்தனர். 'மனசுக்குள் மத்தாப்பு' ஒரு 'நீட்'டான படம். 'ஏ' சென்டர்களில் நன்கு ஓடினாலும், பி. சி. யில் காலை வாரி விட்டது. இப்படிப்பட்ட அடிகள் வடுக்களாக இருக்கின்றன.

கே: ரசிகர்கள் இதைத்தான் ரசிக்கிறார்கள் என்று சொல்வது உங்களைப் போன்றவர்களுக்கு வழக்கமாகிவிட்டது!

பதில்: நீங்கள் எங்களைப் பார்த்துத்தான் இப்படிக் கேட்க முடியும். எக்கச்சக்கமாகப் பணம் சம்பாதித்து, எந்த நஷ்டத்தையும் தாங்கும் நிலையிலிருக்கும் பெரிய நிறுவனங்கள் கூடப் பல வன்முறைக் காட்சிகளையும் நம்ப முடியாத சண்டைகளையும் படங்களில் நுழைக்கிறார்கள். ஏன், கமலோ, ரஜினியோ, சத்யராஜோ, 'இனிமேல் சண்டைக்காட்சிகளில் நடிக்க மாட்டோம்' என்று சொல்லட்டுமே பார்க்கலாம்! இன்று எந்தப் படத்தின் போஸ்டரையும் பாருங்கள். கதாநாயகனோ, அல்லது வில்லனோ, கையில் கத்தியுடனும், துப்பாக்கியுடனும்தான் காட்சி தருகிறார்கள். சண்டைக் காட்சிகளைப் பற்றிச் சொல்லும் போது மக்களின் மனநிலையைப் பற்றியும் சொல்லியாக வேண்டும். பொதுவாக எல்லோருமே சமூகக் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு வாழும் போது, பல சந்தர்ப்பங்களில் கோபத்தை அடக்கி வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எதிர்வீட்டுக்காரனிடமோ மானேஜரிடமோ காட்ட முடியாத கோபத்துக்கு வடிகாலாகப் படத்தின் சண்டைக் காட்சிகள் அமைகின்றன. சண்டையில் வெற்றி பெறும் கதாநாயகனாகவே ரசிகன் தன்னைப் பாவித்துக் கொள்கிறான்!



• திரைப்படக் கல்லூரியிலிருந்து ஒன்றாக......

கே: மனோதத்துவ ரீதியிலான இந்த விளக்கம் சரியென்றாலும் இது வரவேற்கத் தக்க போக்கு அல்லவே... சினிமாவில் ஓர் ஆரோக்கியமான மாறுதலை நீங்கள் கொண்டு வர முயற்சி செய்யலாமே!

பதில்: எப்படி சார்...? இது வியாபாரம்...! 'காஸ்ட்லி' வியாபாரம்...! சராசரியில் நாற்பது லட்சம் முதல் போட்டு ஒரு படம் எடுக்கிறார்கள். வியாபாரத் தன்மையே இல்லாவிட்டால் பணம் அம்பேல் தான். நாற்பது ரூபாயைப் பிக்பாக்கெட் கொடுத்தாலே நாம் சோர்ந்து போய்விடுகிறோம். நாற்பது லட்சம் என்றால் சும்மாவா? இந்த மனோபாவத்தில் இருக்கும் தயாரிப்பாளர்களுடனும், விநியோகஸ்தர்களுடனும் ஓர் உடன்பாடு கொண்டுதான் எங்களால் படமெடுக்க முடிகிறது. ஆக எங்களைப் போன்றவர்கள் எந்தவித ரிஸ்கையும் எடுக்கத் தயங்குகிறோம்... ஆயினும் இந்தச் சூழ்நிலையிலும் எங்களால் இயன்ற அளவுக்கு நல்ல லட்சிய விஷயங்களையும் படத்தில் தர முயல்கிறோம். உதாரணமாகப் பட்டம் பெற்ற ஒரு வாலிபன் அதற்கேற்ற வேலை கிடைக்கக்

• ஜோடிகள் இணைவதால் முடிவு 'சுபம்'தான்.



காத்திராமல் கிடைக்கும் வேலையைச் செய்யத் தயங்கக் கூடாது என்று உணர்த்தியிருக்கிறோம். நாஸர் மெக்கானிக் வேலை செய்கிறார். ஜனகராஜ் கல்யாணத் தரகராகிறார். இந்தப் படத்தில் நிரோஷா ஏற்றிருக்கும் கதாபாத்திரம்: விபசாரப் பெண். அதை அசிங்கப்படுத்தாமல் அனுதாபத்துடன் கண்ணியமாக அணுகியிருக்கிறோம்.

கே: வியாபாரத்துக்காகச் சண்டைக் காட்சிகள் சேர்த்தீர்கள், சரி... ஆனால் மூன்று மாணவர்களும், மூன்று மாணவிகளும் திருமணம் செய்து கொள்வது போல் படத்தை முடித்து, கதையம்சத்திலும் யதார்த்தம் குறையச் செய்து விட்டீர்களே...?

பதில்: கதாபாத்திரங்கள் கடைசியில் கல்யாணம் செய்து கொண்டாலும், படத்தில் அவர்களுடைய காதல் உணர்வுகளைப் பகிரங்கமாகப் பிரதிபலிக்கச் செய்யாமல் இழையோடுகிற மாதிரி காட்டியிருக்கிறோம். இந்த யதார்த்தத்தை நீங்கள் விட்டுவிட்டு முடிவில் realism இல்லை என்கிறீர்கள். ஆனால் நீங்கள் என்னதான் சொன்னாலும் ஜோடிகளை இணைத்து வைக்கா விட்டால் மக்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். 75 வருட சினிமா சரித்திரத்தைத் திருப்பிப் பாருங்கள்... கல்யாணங்களில்தான் கதை முடியும்.

கே: ஒரு பெண்ணின் வாழ்க்கை, கல்யாணத்திற்காகத்தான் காத்திருப்பது போலவும், திருமணம் நடக்கா விட்டால், வாழ்க்கையே பாழ் என்பது போலவும் உங்களைப் போன்ற இளைஞர்கள் நினைப்பது சரியா...?

பதில்: இன்றைய சமூகத்தில் ஒவ்வொரு பெண்ணும், திருமணத்திற்காகத்தான் காத்திருக்கிறாள். கல்யாணம்தான் சிறந்த பாதுகாப்பு என்று நினைக்கிறாள். இதனால்தான் 'சுபம்' என்று வரும் முடிவை மக்கள் விரும்புகிறார்கள்.

கே: பாலைவனச் சோலை போன்ற யதார்த்தமான வெற்றிப் படத்தைத் தந்த உங்களால், மசாலா சேர்க்காத படங்களை எடுக்க முடியுமே...?

பதில்: பாலைவனச் சோலை வெளியான கால்கட்டத்தில், இளைஞர்களின் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்ட சில யதார்த்தமான படங்கள் வெற்றிப்படங்களாய் விளங்கின. அந்தப் போக்கை ஒட்டியே பாலைவனச் சோலை வெற்றி பெற்றது. இப்போது போக்கு மாறிவிட்டது. மீண்டும் அது போன்ற ஒரு நிலை வரும் போது நாங்களும் அதுமாதிரியான படங்களை எடுப்போம்.

கே: ஆக, மற்றவர்கள் போட்டுக் கொடுக்கும் 'பாட்டையில்' செல்வீர்கள். நீங்களாகவே முயன்று ஒரு புதிய பாட்டையை உருவாக்க மாட்டீர்கள்...

பதில்: பாலைவனச் சோலையிலிருந்து ஆரம்பித்து, கல்யாண காலம், தூரம் அதிகமில்லை, சின்னப் பூவே மெல்லப் பேசு, மனசுக்குள் மத்தாப்பூ போன்ற படங்களில் நாங்கள் காட்டியிருக்கும் புதிய முயற்சிகளை நீங்கள் பார்த்தீர்களானால், இதுபோன்ற கேள்விகளை எங்களிடம் கேட்க மாட்டீர்கள்... ஆனால், இந்தப் படங்கள் ஒவ்வொன்றிலும், நாங்கள் கற்றுக் கொண்ட பாடங்கள், அடைந்த ஏமாற்றங்கள் ஏராளம். இப்போது நாங்கள் உள்ள நிலையில் சினிமாவைச் சீர்திருத்தும் பணியை எங்களால் செய்ய முடியாது என்பது மட்டுமல்ல... அது எங்கள் பணி அல்ல... எந்தக் கஷ்டத்தையும் தாங்கும் தயாரிப்பாளரும், சமூதாயப் பிரக்ஞையுடன் கூடிய டைரக்டரும் இணைந்து செயல்பட்டு ஒரு படம் எடுத்து, மக்கள் ஏற்றுக் கொண்டால், நாங்களும் அந்த வரிசையில் சேர்ந்து கொள்ளுவோம். இதுதான் யதார்த்த நிலை!

கே: பிறமொழிப் படங்கள் முழுக்க, முழுக்க யதார்த்தமாக இருக்கின்றன. தமிழில் அது போன்ற படங்கள் வராதா என்ற ஏக்கம்! இதை நீக்க வழி உண்டா?

பதில்: மோசமான மலையாள, கன்னட, வங்கமொழிப் படங்கள் வருகின்றன. அவற்றை நாம் பார்க்காமல் அவார்டு வாங்கிய படங்களை மட்டும் பார்ப்பதால் ஒரு தவறான முடிவுக்கு வருகிறோம். மேலும் மலையாள, கன்னட ரஸிகர்களுக்குச் சற்று மாறுபட்டவர்கள் தமிழ் ரஸிகர்கள்... சமூதாயத்துக்குத் தேவையான, அல்லது ஆதரவான ஒரு கருத்துக்கு நேர் எதிரான கருத்தினைச் சொன்னால் கூட மிகவும் ரசிப்பார்கள். உதாரணமாகச் சொன்னால், நூற்றுக்கு 99 சதவீதம் மக்கள் கடவுளை வணங்குகிறவர்கள்தான். ஆனால் கடவுளைக் கிண்டல் செய்யும் வசனங்களை வையுங்கள் — அரங்கமே அதிரும்! அவர்கள் ரசனை யதார்த்தத்தைக் காட்டிலும் மிகைப்படுத்துதலையே விரும்புகிறது.

பேட்டி: **ப்ரியன்**

அட்டையில்:

**'பறவைகள் பலவிதம்' படக்காட்சிகள்.**

வண்ணப்படங்கள்: **நேஷனல் ஸ்டுடியோ.**

---



''ஏண்டா, உன் அப்பாதான் நீ காதலிக்கிற ஒருத்தியையே கல்யாணம் பண்ணி வைக்கிறேன்னு சொல்லிட்டாரே, அப்புறமும் என்ன கவலை?''

''நீலவேணி, சுஜாதா, சித்ரா, ஹேமா இவங்கள்லே, எந்த ஒருத்தியைக் குறிப்பிட்டுச் சொல்வதுன்னுதான்.''

— ஆர். வசந்தகுமார்.

அழகோ அழகு ஃப்ரெஸ்கா
அற்புத நறுமணம் ஃப்ரெஸ்கா




கோத்ரெஜ்

Enterprise/GS/136/Tm

# என் தாத்தா – இந்த வயதிலும் என்ன துடிப்பு !

தாத்தாவுக்கு வயதாகிக் கொண்டே போகிறது. உடம்போட செயலாற்றல் குறைந்து கொண்டே வருகிறது. அவர் இப்போது குறைவாகச் சாப்பிடுகிறார்.

**அவர் தனது ஊட்டச்சத்துக்களை காம்ப்ளான் மூலம் நிறைவு செய்கிறார்.**



எளிதாக ஜீரணிக்கக் கூடிய காம்ப்ளான், உங்கள் உடலுக்குத் தேவையான 23 ஊட்டச்சத்துணவு களைக் கொண்டதாகும். தேய்ந்த உடல் திசுக்களைப் புதுப்பிப்பதற் கான பால் புரதம், சக்தி பெறு வதற்கான கார்போ-ஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புச்சத்து, உடல் நலத்திற்கான வைட்டமின் மற்றும் தாதுக்கள் ஆகியவற்றை கொண்டதாகும் காம்ப்ளான்.




**23**

மூலாதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

பால் சேர்க்கத் தேவையில்லை.

**காம்ப்ளான்®**

திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/47/213/TML

# கிராமத்துக்குக் குடிநீர்... —மாணவர்கள் முயற்சி




* பஞ்சாயத்தின் தயவுக்காகக் காத்திருக்கிறது...

"மூப்பது மாணவர்களால் பத்து நாட்களில் உருப்படியாக என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டால், ''செம்மஞ்சேரிக்கு நேரில் வந்து பாருங்கள்'' என்று பனிச்சென்று பதில் சொல்லலாம். வண்டலூரில் அமைந்துள்ள கிரசண்ட் இஞ்சினீரிங் கல்லூரி மாணவர்கள் அப்படி ஒரு சாதனை செய்திருக்கிறார்கள். அந்தக் கிராமத்து ஜனங்களுக்கு மிகவும் பயனளிக்கும் வகையில் ஓர் உயர்நிலை தண்ணீர்த் தொட்டியைத் தாங்களாகவே வடிவமைத்துக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்!

நாட்டு நலப் பணித் திட்டத்தின் கீழ் சிறப்பாய்ச் செய்து முடிக்கப்பட்ட இந்தப் பணியைப் பற்றி, இதில் பங்கேற்ற முப்பது மாணவர்களின் தலைவரான பீர் முகமது சொன்னார்:

''எங்கள் கல்லூரியின் என். எஸ். எஸ். மாணவர்கள் வழக்கமான சமூக சேவைத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தாலும், நாங்கள் எல்லாரும் இஞ்சினீரிங் மாணவர்கள் என்பதால், பொறியியல் வடிவமைப்பு சம்பந்தமாய் ஏதாவது ஒரு சமூக சேவைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று விரும்பினோம். கல்லூரியிலிருந்து சுமார் 25 கி. மீ. தூரத்தில் உள்ள செம்மஞ்சேரி கிராமத்தில், பொதுக் கிணறு இருந்தும் குழாய் வசதி இல்லாததால், உயர்நிலை தண்ணீர்த் தொட்டி கட்டிக் கொடுக்க முடிவெடுத்தோம்.

''கல்லூரியில், நிறையப் பேர், நாங்கள் இந்தப் பணியைச் செய்து முடிக்கத் திட்ட-



* பீர் முகமது: ''இதை ஒரு சவாலாக ஏற்றோம்...''

மிட்டிருப்பதைக் கேட்டு, நம்பிக்கையில்லாமல் பேசினார்கள். அதுவே, எங்களை, இதை ஒரு சவாலாய் எடுத்துக் கொண்டு செய்து முடிக்கத் தூண்டியது. கடந்த பிப்ரவரி மாதத்தில், நாங்கள் முப்பது மாணவர்கள் செம்மஞ்சேரிக்குப் போனோம். அந்த ஊர் மக்களுக்கு, இது ரொம்ப ஆச்சரியமாய் இருந்தது.

மாணவர் ஜாகிர் ஹுசைன் கூறினார்:

"தினமும் காலை ஆறு மணிக்கெல்லாம் வேலை ஆரம்பித்துவிடும். ஒன்பதரைக்குச் சிற்றுண்டி. மறுபடியும் பத்தரை முதல் பிற்பகல் இரண்டு வரை வேலை. பல நாட்கள் சாப்பிட மணி மூன்றாகிவிடும்."

"எங்கள் கல்லூரியின் மெக்கானிக்கல் ஒர்க்ஷாப்பைச் சேர்ந்த ஷபீருல்லா, தண்ணீர்த் தொட்டியை வடிவமைப்பதில் பெரிதும் உதவினார்" என்றார் மாணவர் மொய்தீன்.

குமார் சுப்பிரமணியனும் சுப்பையாவும் மேல்நிலைத் தொட்டியின் அமைப்பை விவரித்தார்கள்:


"கான்கிரீட்டில் சுமார் இரண்டு மீட்டர் ஆழத்துக்கு பேஸ்மெண்ட் போட்டு, அதன் மேலே இரும்பினால் இருபத்தைந்து அடி உயரத்துக்குத் 'தாங்கி'களை அமைத்து, அதன்மேல் தண்ணீர்த் தொட்டியைப் பொருத்தினோம். அருகில் இருந்த பொதுக் கிணற்றிலிருந்து, தொட்டிக்கும், தொட்டியிலிருந்து, ஊரின் பிரதான இடங்களுக்கும், தரையில் இரண்டடி ஆழத்தில் கால்வாய் போல் வெட்டி, குழாய்கள் அமைத்துக் கொடுத்தோம். குழாய்களில் தண்ணீர் வந்த சமயம், அந்த மக்களின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியைப் பார்த்தோம். எங்களுடைய பத்து நாட்கள் வேலையில் ஏற்பட்ட அத்தனை கஷ்டங்களும் மறந்து போய்விட்டன."

கல்லூரியின் என். எஸ். எஸ். பொறுப்பாளர் ஷேக் அப்துல் காதர், "நீங்கள் நேரில் போய் அவசியம் பாருங்கள்" என்றார். மாணவர் தலைவர் பீர் முகமதுடன், செம்மஞ்சேரிக்குப் போனோம். ஆனால் அங்கு எங்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. இந்தியன் பாங்க் வழங்கிய எட்டாயிரம் ரூபாய் போக, மிச்சச் செலவை கிரசன்ட் கல்லூரியினை நிர்வகிக்கும் அகில இந்திய இஸ்லாமிக் ஃபவுண்டேஷன் ஏற்க, மொத்தம் சுமார் முப்பதாயிரம் செலவில் கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டி இன்று செம்மஞ்சேரியில் பயனற்றுக் கிடக்கிறது!

நாம் சந்தித்த ஊர் மக்கள் அனைவருமே, "ஆமாங்க! அந்தக் காலேஜ் புள்ளைங்க, என்னமாக் கஷ்டப்பட்டு, எங்க ஊருக்குத் தண்ணீர்த் தொட்டி கட்டித் தந்தாங்க! ஆனா, பஞ்சாயத்துல, கொஞ்ச நாளைக்குத் தான் மோட்டார் போட்டு டாங்க்கில தண்ணீர் ஏத்தினாங்க. அப்புறம் மோட்டார் இல்லை; எங்களுக்குத் தண்ணியும் இல்லை!" என்றார்கள்.

கிராமத்தின் பஞ்சாயத்துத்தலைவர் சுந்தர பாஷ்யத்தைச் சந்தித்து, இந்தப் பரிதாப நிலைக்கு விளக்கம் கேட்க விரும்பினோம். ஆனால் அவர் ஊரில் இல்லாததால் சந்திக்க முடியவில்லை.

கட்டுரை: **எஸ். சந்திரமௌலி**
படங்கள்: **யோகா**



அடுத்த இதழ்

— COVER STORY

**தேர்தல் சாணக்கியங்கள்**

**18 — இல் வாக்குரிமை**

**— இளைஞர்கள் கலந்துரையாடல்**



# வாழ்க வன்னியர்கள்! வாழ்க வையகம்!

—டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

இந்திப் பிரச்னை ஆனாலும், ஈழப் பிரச்னை ஆனாலும், வன்னியர் பிரச்னை ஆனாலும் உணர்வுகள்தான் அதிகம் கிளறிவிடப்படுகின்றன. மனிதன் அறிவினால் ஆளப்படுவதைவிட உணர்வினால்தான் அதிகம் ஆளப்படுகிறான் என்று மனவியல் அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இன உணர்வுகளைத்தூண்டி அதைவெறியாக மாற்றி விடுவது எளிது. பின் அதைத் துவங்கியவர்களே ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பிரியப்பட்டாலும் அது முடியாத நிலைக்குப் போய் விடுகிறது. மலையிலிருந்து உருட்டி விடப்பட்ட கல், செல்லச் செல்ல அதிக வேகத்தையும் சக்தியையும் பெறுவது போல...

வன்னியர்கள் தேர்தலைப் புறக்கணிப்போம் என்கிறார்கள். அது அவர்கள் இஷ்டம். அது அவர்கள் தங்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதை உணர்த்தும் ஒரு முறை. சிலர் உண்ணாவிரதம் இருப்பது போல, தேர்தலைப் புறக்கணிப்பது ஒரு வகை உண்ணா நோன்பு. நம்மை வருத்திக் கொண்டு மற்றவர்களை நியாயத்தை உணரச் செய்ய வைக்கும் ஓர் உயர் முறை அது.

ஆனால் அத்துடன், தேர்தலை நடத்தவே விட மாட்டோம் என்று சொல்வதோ, பிற கட்சிகள் எந்தவிதக் கூட்டமும், ஊர்வலமும் நடத்தக் கூடாது; கொடி ஏற்றக் கூடாது என்று சொல்வதோ முறை அல்ல. அங்கே பிறர் உரிமைகளில் தலையிடுகிறோம்; சட்டத்தை மீறுகிறோம். இதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; தவிர்க்க வேண்டும். "தி. மு. க. காரர்களது கூட்டத்தைத் தானே அங்கு நடக்கவிடாமல் தடுக்கிறார்கள்! பரவாயில்லை. அது நமக்கு நல்லது தான்!" என்று காங்கிரஸ் கட்சி நினைக்குமானால், அதே கதி அவர்களுக்கு ஏற்பட அதிக நாளாகாது. "கண்டு கொள்ளாமலிருப்போம்! ஏதோ கண் துடைப்பு வேலை செய்வோம்!" என்று ஆளுனர் ஆட்சி நினைத்து அப்படியே செயல்படுமானால், இவர்கள் "நீதியை நிலைநிறுத்துவேன்!" என்று சத்தியம் செய்து பதவி ஏற்றதற்கு அர்த்தமில்லை.

"அவர்களுக்குச் சாதகமாகச் செயல்படுவோம். வருகிற தேர்தலுக்கு அது காங்கிரஸுக்கு நல்லது!" என்ற நோக்கில் நியாயமில்லாத காரியங்களை ஆளுனர் செய்வாரானால், அல்லது பிரதமர் செய்வாரானால், அது பிற சாதிக்காரர்களை "நீயும் போராட்டம் செய்! உனக்கும் விரும்பியது கிடைக்கும்!" என்று தூண்டி விடுவதாகும்; தூபம் போடுவதாகும்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இன்றைய எல்லா அரசியல் கட்சிகளும் வன்னியர் பிரச்னையைப் 'பற்றி ஏதும் வாயைத் திறக்காமலிருப்பதுதான்! நாம் வாயைத் திறந்தோமானால், அந்த நியாயத்திற்கு வன்னியர்கள் கட்டுப்படவில்லை என்றால், 'நமக்கு வன்னியர்கள் வோட்டு போய் விடுமோ' என்கிற பயம் நான்கு கட்சிகளையும் பிடித்தாட்டுகிறது.

நாம், நமது நாட்டு அரசியல் கட்சிகளின் அணுகுமுறையைக் கவனிக்க வேண்டும். நியாயம் என்று மனத்தில் பட்டதைச் சொல்ல அவர்கள் தயாராயில்லை! அதாவது, அவர்கள் சந்தர்ப்பவாதிகளாக மௌனம் சாதிக்கிறார்கள்! வாக்காளர்களாகிய நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகளுக்கா நமது வாக்கைப் போட வேண்டும்? இவர்களுக்கு நாட்டினிடம் அக்கறை இருந்தால் — இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண விரும்பினால் — தங்களுடைய நிலையை அல்லவா தெளிவுபடுத்த வேண்டும்? தெளிவுபடுத்துகிறார்களா? எண்ணிப் பாருங்கள்! ஏன் வாய் மூடி மௌனியாகி நிற்கிறார்கள்!

**சா**லை மறியல், பஸ் எரிப்பு, குடிவிருப்புக்குத் தீவைப்பது — என நாட்டில் இப்படி நடக்கும் விஷயங்களைப் பற்றி, — பொது மக்கள் கழுத்தளவுக்குமேல் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். இதை நாலு கட்சி அரசியல் தலைவர்களும் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. உணர்ந்திருந்தால், தனித்தனியாகவாவது, அல்லது எல்லாக் கட்சிகளும் சேர்ந்தாவது, "இதை அரசியலுக்குப் பயன்படுத்த மாட்டோம். யார் பதவிக்கு வந்தாலும் இது பிரச்னையாக இருக்கும். இதை நியாய வழியில் தீர்ப்போம்!" என்று இறங்கியிருப்

பார்கள்! எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்று அரசியல் கட்சிகள் செயல்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

உணர்வு பூர்வமான பிரச்னைகளுக்கு அறிவுபூர்வமான தீர்வுகளை நாம் காண வேண்டும். எப்படிக் காண்பது?

மகாத்மா காந்தி இதற்கோர் அற்புதமான வழியைக் கண்டுபிடித்துக் கொடுத்தார். "தன்னையும் உயர்த்தி எதிரியையும் உயர்த்திச் சுமுகமான வழியில் எந்தப் பிரச்னையையும் தீர்க்க முடியும்" என்பதுதான் மகாத்மா காட்டிய வழி. அப்படித்தான் சம்பரான் போராட்டத்தை நடத்தினார். அப்படித்தான் வெள்ளைக்காரர்களிடமிருந்து சுதந்திரத்தையும் வாங்கினார். ஏன் நாம் அதை மறக்க வேண்டும்?

நண்பர்களாக — பூமி என்ற பூப்பந்தில் சேர்ந்து வாழ்ந்து சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய ஒரு குடும்பம் நாம். இதை உணர்வோம். அப்படி எண்ணிப் பிரச்னைகளை அணுகுவோம்.

வன்னியர்கள் வாழ்க! தேவர்கள் வாழ்க! நாடார்கள், கவுண்டர்கள், முக்குலத்தோர், ஹரிஜனங்கள், முதலியார், செட்டியார், பிராமணர் என்ற எல்லோரும் வாழ்க! வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

'சாதிக் கொடுமைகள் வேண்டாம்!
அன்புதன்னில் செழித்திடும் வையம்!'
— பாரதி.

**ஏழை விஜயகாந்த். வேலையற்ற பட்டதாரி. வேளைக்கொரு டிரஸ் அணிபவர். இரக்க சுபாவத்தால் தனக்குக் கிடைக்கும் வேலைகளை அடுத்தவருக்கு வழங்குபவர். தலையணைக்கு உறைபோல் இந்தப் பாத்திரத்தில் பொருந்தி இருக்கிறார் விஜய்காந்த்.**

பணக்கார அலட்டலுடன் ராதிகா. ஏழைத் தோழியை அவமானப்படுத்துகிறார். வேலைக்காரிக்கு நல்ல சேலையைக் கத்தரி போட்டுக் கிழித்துக் கொடுக்கிறார். நேரே அமெரிக்காவிலிருந்தோ, லண்டனிலிருந்தோ வந்து இறங்கி இருக்கிறாற்போல் ஒரு ஸ்டைலான நடிப்பு. அப்புறம் குடிசைக்கு வந்த பிறகு வெகு அடக்கமான நடிப்பு.

ஸ்டன்ட் ஸீன்கள் இன்னும் கொஞ்சம் நீளத்தைக் குறைத்துக் கொண்டிருக்கலாம். கடைசி நெருப்புச் சண்டை, தனி கவனம் செலுத்தி எடுக்கப்பட்டிருந்தாலும் இவ்வளவு நீளமா?

காரை நாசமாக்கும் ஸீன் ஏற்கெனவே வந்துவிட்டது. வந்துவிட்டது. வந்துவிட்டது.

செந்தில், எஸ். எஸ். சந்திரன் காமெடி படத்திற்கு ஒட்டவேயில்லை. அது ஒரு தனி ட்ராக். அதேபோல் சார்லி ஓர் ஒப்புக்குச்சப்பாணி. டைரக்டரிடம் வந்து சான்ஸ் கேட்டதற்காகப் பாத்திரங்களைக் கொடுத்து இட்டு நிரப்பிய மாதிரி இருக்கிறது.

ஜெய் கணேஷ், ராதா ரவி வேலை இல்லாமல் வீணடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

# உழைத்து வாழவேண்டும்


ஹீரோ என்னதான் இனிய மனமுடையவராக இருந்தாலும் அடுத்தவருக்கு உதவி செய்யும் சுபாவம் காரணமாகத் தம் ஏழைக் குடும்பத்தையே கவனிக்காமல் விடுவாரா? அதுவும் இன்டர்வெல் வரை. முட்டை தூக்கியாவது காப்பாற்றி இருக்க வேண்டாம்? ஹீரோவின் காரெக்டரில் கறுப்புப் புள்ளி.

விஜய் பணக்காரர் என்ற உடான்ஸும் அதை ஒட்டி துணிக்கடை, பெட்ரோல் பங்க் ஆகிய இடங்களில் நடக்கும் அமர்க்களங்களும் ரசிக்கப்பட வேண்டியவை.

உழைத்து வாழவேண்டும் என்ற செய்தியை ஓர் ஓரத்தில் தூக்கிக் கொண்டு முழுக்க முழுக்க மசாலா நெடியுடன் வந்துள்ள படம்.

பொழுதை ஓட்டலாம்.

— ஜெயமன்மதன்.





கல்கி, கோகுலம், மங்கையர் மலர் பைண்டிங் காண்ட்ராக்டர் ஸ்ரீ T. M. சுந்தரமூர்த்தி கிராமணியார் அவர்களின் பௌத்திரியும் ஸ்ரீ D. மணி அவர்களின் குமாரத்தியுமான திருநிறைச் செல்வி தமிழ்ச் செல்வி என்கிற தங்கரோஜாவுக்கும் சென்னை நல்லான் குப்பம் ஸ்ரீ V. பெருமான் கிராமணியின் பௌத்திரனும் லேட் ஸ்ரீ P. கணேச கிராமணியின், குமாரனுமான திருநிறைச் செல்வன் ராஜேந்திரனுக்கும் சமீபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!


தலைவலி! அடக்கி வாசியுங்க!
இ.காங்கிரஸ் கூட்டணி
இ.காங்கிரஸ் கூட்டணிக்கு எதிர்ப்பு
என் பாட்டு கெட்டுப் போயிடுச்சே!
எதிர்ப்பு
வீரப்பன்
இ.காங்கிரஸுடன் கூட்டணி
என்னங்க?.. தரையிலே படுத்துக்கிட்டு?..
என் தலைவர் ஆந்திர முதல்வர் தெருவிலே படுத்து தர்ணா!.. அங்கால தமிழக முதல்வராகிய நான் அதுக்கு வீட்டுலே தரையிலே படுத்து படிக்கிறேன்!
உங்களுக்குள்ள பயங்கரவாத ஜுரம் தொற்று நோயா எனக்கும் வந்துடிச்சே!
காஷ்மீர்
பஞ்சாப்



கல்கி

1988 நவம்பர் 13
மலர் 47 இதழ் 15
விபவ ஐப்பசி 28



# காங்கிரஸின் எதிரிகள் நாட்டின் எதிரிகளா?

"காங்கிரஸின் எதிரிகள் நாட்டின் எதிரிகள்" என்று பிரதமர் கூறப் போக, பலத்த ஆட்சேபணைக் குரல்கள் எழுந்தன. கடைசியில் நாம் அப்படிச் சொல்லவேயில்லை என்றும் 'லட்சியக் கொள்கை இல்லாத கட்சிகள் நாட்டைப் பலவீனப்படுத்துவதுடன், எதிரிகளுக்கு உதவுகின்றன' என்றுதான் சொன்னதாகவும் பிரதமர் விளக்கம் தந்திருக்கிறார். அவ்வாறானால், பல பத்திரிகைகளும் வெளியிட்ட செய்தி தவறா என்று ஆராய்வதைவிடப் பிரதமரின் விளக்கத்தை ஏற்பதே பண்பு. காரணம் ஒருவேளை அவர் நேற்று தவறாகப் பேசியிருந்தாலும் இன்று தம்மைத் திருத்திக் கொண்டிருக்கிறார் என்பதுதான் முக்கியம். அந்த அளவில் நாம் மகிழ்ச்சி அடையலாம்.

ஆனால் ராஜீவ் காந்தி இந்த ஆத்ம பரிசோதனையை இன்னும் கொஞ்சம் தொடர்ந்து நடத்திப் பார்ப்பது நல்லது. நாட்டின் பிரதமர் என்ற முறையிலும் காங்கிரஸ் தலைவர் என்ற முறையிலும் அவர் தம்மைத் தாமே சில கேள்விகள் கேட்டுக் கொள்ள வேண்டும். இந்திய நாடு என்பதை இந்திய ஜனநாயகத்திலிருந்து இன்றைக்குப் பிரித்துப் பார்க்க முடியாது என்பதை ராஜீவ் ஒப்புக் கொள்கிறாரா, இல்லையா? தாய்நாட்டுப் பற்று உள்ள ஒவ்வோர் இந்தியனும் ஜனநாயகப் பற்றுள்ளவனாக இருக்க வேண்டுமா வேண்டாமா? வேண்டும் எனில், கட்சிக்கும் ஆட்சிக்கும் வித்தியாசமில்லாத முறையில் ஆட்சியின் வசதிகள் பலவற்றைக் கட்சி நலனுக்கு ராஜீவ் பயன்படுத்திக் கொள்வதை அவர் எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? அதுவும் தேர்தல் சமயத்தில் இவ்வாறு ஆட்சி அதிகாரங்கள் கட்சி நலனுக்குத் துஷ்பிரயோகமாகலாமா? தேர்தல் நிதி சேர்ப்பதில் தொடங்கித் தேர்தல் பிரசாரம் வரை ஆட்சி அதிகாரங்கள் கணக்கற்ற விதங்களில் கட்சி நலனுக்குப் பயன்படுத்தப்படுவதை அவரால் மறுக்க முடியுமா? இது ஜனநாயகமா? இதில் என்ன லட்சியக் கொள்கை இருக்கிறது?

ராஜீவ் எப்படி நடந்து கொள்கிறாரோ அப்படித்தானே அவருடைய அமைச்சர்களும் கட்சியின் இதரக் குட்டித் தலைவர்களும் நடந்து கொள்வார்கள்? எனவே ராயலசீமா காங்கிரஸ் எம். எல். ஏக்கள், என். டி. ராமராவை தலைமைச் செயலகத்துக்குள் செல்லவிடாமல் தடுத்ததில் என்ன வியப்பு?

முதல்வர் என்ற முறையில் என். டி. ஆர். பல தவறுகளைச் செய்திருக்கலாம். சந்திரபாபு நாயுடு நியமனம் தவறு என்று உயர்நீதி மன்றம் மறுமுறையும் தீர்ப்பளித்திருக்கிறது. ஆனால் ராமராவ் செய்கின்ற சில தவறுகள், காங்கிரஸ் கட்சிக்கு ஜனநாயக மரபுகளை மீறுவதற்கு லைசென்ஸ் கொடுத்ததாகிவிடாது. அன்று விடுமுறையாக இருந்த போதிலும் மகஜரைப் பெற்றுக் கொள்ளப் பொறுப்புணர்வோடு வந்தார் ராமராவ். 'தலைமைச் செயலகத்துக்குள் நுழைய முடியாமல் தடுக்கிறீர்கள்; நான் இங்கேயே மகஜரைப் பெற்றுக் கொள்கிறேன்' என்று வீதியிலேயே அமர்ந்தார். அப்போதும் அவர் மீது தாக்குதல் நடத்தினார்களே தவிர, மகஜரைத் தரவில்லை. மாறாக, 'மகஜரைப் பெற்றுக் கொள்ளாமலிருக்க ராமராவ் நாடகமாடுகிறார்' என்று ஆந்திரா காங்கிரஸ் தலைவர்கள் பொறுப்பின்றிப் பேசுகிறார்கள். இதில் ஜனநாயகப் பற்று எங்கே இருக்கிறது? நாட்டுப் பற்றுதான் எங்கே இருக்கிறது? இதுபோன்ற செயல்கள் நாட்டைப் பலவீனப்படுத்தாதா? எதிரிகளுக்கு உதவாதா?

தலைநகரிலே விவசாயிகள் திரண்டு வந்து தர்ணா செய்தார்கள். அவர்களை ராஜீவின் காங்கிரஸ் ஆட்சி எப்படி நடத்தியது? குடிதண்ணீர் சப்ளையைக் கூடத் துண்டித்து வதைத்தது. அவர்களின் சொற்பொழிவுகள் யாருக்கும் கேட்க முடியாதவாறு மேல்நாட்டுப் பாப் இசையை ஒலிபெருக்கியில் அலறச் செய்தது. இதுவெல்லாம் காங்கிரஸின் ஸ்பெஷல் பிராண்ட் ஜனநாயகம் போலும்!

நாட்டுப் பற்று என்பது நாட்டு மக்களிடம் வைக்கின்ற அன்புக்கு மாறுபட்டது அல்ல என்பதைக் காங்கிரஸ் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. பீகார் காங்கிரஸ் ஆட்சியில் போலீஸ் ஸ்டேஷன் முன்பாக அமைதியாகக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த கிராம மக்கள் மீது, போலீஸ் எந்தவித முன்னறிவிப்பும் இன்றிப் பத்தொன்பது ரவுண்டு சுட்டதில் ஆறு பேர் மரணமடைந்திருக்கிறார்கள். பீகார் போலீஸின் வேறு பல கோர கிருத்தியங்களைச் சொல்லி மாளாது. காங்கிரஸ் ஆட்சியில் இப்படி நடக்கிறதே என்று ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் வெட்கித் தலைகுனிய வேண்டாமா? ராஜீவ் பதில் சொல்லட்டும்!

---

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



# அது என்ன, பெரிஸ்த்ரோய்க்கா?

மறு சீரமைப்பு, புதிய சிந்தனை என்று பொருள்படும் இந்தச் சொல், சோவியத் யூனியனில், இப்போது மறு சீரமைப்புக்கும், புதிய சிந்தனைக்கும் என்ன அவசியம் வந்தது? ஒரே கட்சி செயல்படும் ரஷ்யாவில், குழந்தை பிறந்தவுடன் அதற்கு 'அலவன்ஸ்' கொடுப்பதிலிருந்து அந்தக் குழந்தை பெரியவனானதும், கல்வி, பின்னர் வேலை, வசிக்க வீடு என்று எல்லாம் அரசின் உபயம் தான். உழைப்பது முழுவதும் அரசுக்கு (அதாவது மக்களுக்கு)த்தான் என்ற கோட்பாடு அங்கு வலுவூன்றி இருக்கிறது. ஆனால் இந்த வழிமுறை சமுதாயத்தில் ஒரு தேக்க நிலையையும், சோம்பேறித்தனத்தையும் வளர்த்து வருவது சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. எதிர்காலம் பாழாகிப் போகுமோ என்ற எண்ணம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது. இதே போல் தொழிற்சாலைகளில், நஷ்டம் ஏற்பட்டால் அரசே அதற்கு மான்யம் கொடுத்து நடத்தி வந்தது. 'என்ன நஷ்டம் வந்தாலும் அரசுதான் மான்யம் தருமே' என்ற மனப்போக்கில் தொழிலாளர்களிடையே மெத்தனம் அதிகமாகி உற்பத்தி குறைந்தது. மிகவும் பிரபலமாகப் பேசப்படும் கூட்டுப் பண்ணைகள் பல நஷ்டத்தில் இயங்குவது கண்டுபிடிக்கப்பட்டது. தொழிற்சாலை நவீனப்படுத்துதல் உட்பட பலவித காரியங்களுக்கு மாஸ்கோ வரையில் சென்று அனுமதி பெற வேண்டியதாயிருந்தது. தேக்க நிலைக்கு இதுவும் ஒரு காரணம்.

இந்த நிலைக்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைத்துச் சமூகத்தை ஓர் உலுக்கு உலுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கோர்பசேவ், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக ஆனதும் இது பற்றிப் பகிரங்கமாகப் பேசினார். பூனைக்கு மணி கட்டினார். கோர்பசேவின் சமூக பொருளாதார — அரசியல் சீரமைப்பில் முக்கியமான அம்சங்கள் அதிகாரங்களைப் பரவலாக்குதலும் ஜனநாயகத் தன்மையை அதிகரித்தலுமாகும்.

இதுவரை எந்தத் தொழிற்சாலையிலும் லாப — நஷ்டக் கணக்கு பார்த்ததில்லை. இனி, பார்க்க வேண்டும். என்ன தயாரிக்கப்படுகிறதோ, அதன் உற்பத்தி விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒரு தொழிற்சாலை நவீனப்படுத்தப்பட வேண்டுமானால், நிதி வசதியை அதுவே தேடிக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் ஊதியம் அதிகப்படி கேட்டால், உற்பத்தியை அதிகரிக்கச் சொல்ல வேண்டும். மாஸ்கோவிற்கு வெகு தொலைவில் இருக்கும் தொழிற்சாலை நிர்வாகிகள் சின்னச் சின்ன விஷயங்களுக்கு மாஸ்கோ வராமல், தாங்களே முடிவுகளை எடுக்கச் சுதந்திரம் பெறுகிறார்கள். ஆங்காங்கே இருக்கும் கட்சித் தொண்டர்களோ தலைவர்களோ, தொழிற்சாலை நிர்வாக விஷயங்களில் தலையிடக் கூடாது.

ஒரு ரேடியோ மெக்கானிக்கோ அல்லது டி.வி. மெக்கானிக்கோ, இனி, தொழிற்சாலைகளில் வேலை செய்த நேரம் போக தனியாகவும் தொழில் நடத்தலாம். ஒரு விவசாயி அரசின் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்ய அனுமதிக்கப்படுவார்.

எந்த ஒரு காரியத்தைச் செய்யும் போதும் தவறுகள் ஏற்படுவது சகஜம். அதற்காக எந்த முயற்சியிலும் இறங்காமல் அறிஞர்களும் விஞ்ஞானிகளும் 'தெம்மனே' என்று இருந்தால் அது குற்றமாகக் கருதப்படும்.

ஜனநாயகத் தன்மையை அதிகரிக்கும் பொருட்டுப் பத்திரிகைகளுக்கு அதிக சுதந்திரம் கொடுக்கப்படும். 'லஞ்சம், ஊழல், கலவரம் போன்றவற்றை இனி தைரியமாக எழுதுங்கள்' என்று கார்பசேவ் கேட்டுக் கொண்டிருக்கிறார். முஸ்லீம்கள் அதிகம் வாழும் அசர்பை ஜான் மாநிலத்தில், அவர்களுக்கும், முஸ்லீம்கள் அல்லாதவர்களுக்கும், ஓர் இனக் கலவரம் ஏற்பட்ட போது 'என்ன நடந்ததோ, அதை எழுதுங்கள்' என்று கார்பசேவ் பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

தமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாக ஆட்சித் தலைமையில் பல மாற்றங்களைச் செய்திருப்பதுடன் கட்சிப் பொதுச் செயலாளர் பதவியோடு ஜனாதிபதி பதவியையும் கார்பசேவ் தாமே எடுத்துக் கொண்டுள்ளார்.

— கௌசல்யா.


குட்டிக்யூரா அழகி
Cuticura
TALCUM POWDER
SOOTHES
COMFORTS
BEAUTIFIES
Cuticura
TALCUM POWDER
குட்டிக்யூரா
டால்க்
இளம் பெண்கள் இதை
விரும்புவது இயற்கையே
CHAITRA-B-MP-2 TMR

# இன்று இறப்பு விழா

சென்ற வாரக் கதையைப் படிக்காதவர்களுக்கு மட்டும்......

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக விசேஷப் பயிற்சி பெறும் பொருட்டு நம் இந்திய வீரர்களும், வீராங்கனைகளும் பம்பாய் வருகிறார்கள். பம்பாய் சாந்தா க்ரூஸ் ஏர்போர்ட்டில் பொதுமக்களால் ஆர்வத்துடன் வரவேற்கப்படுகிறார்கள். நீச்சல் வீராங்கனை நிகிலாவும், ஹெப்டாத்தலேன் போட்டிகளில் பங்கு பெறப் போகும் வீராங்கனை கயல்விழியும், ஹாக்கி காப்டன் உத்தமும் தங்கம் வெல்வார்கள் என்னும் நம்பிக்கையில் இந்தியா இருக்கிறது. ஏர்போர்ட்டை விட்டு வீரர்களும் வீராங்கனைகளும் காரில் ஹோட்டல் ஓபேராய் டவர்ஸுக்குப் புறப்பட்டுப் போகிறார்கள். ஒரு அம்பாஸிடர் காரில் ஹாக்கி காப்டன் உத்தமும் — ஹாக்கி கோச் குருதேவ் சிங்கும் ஏறுகிறார்கள். கார் சிறிது தூரம் போனதும் — உத்தமின் கையிலிருந்த பொக்கேயைப் பார்த்து முகம் மாறுகிறார் குருதேவ் சிங். அந்த பொக்கேயை வாங்கிப் பிரித்துப் பார்க்க — உள்ளே வெடிக்கப் போகும் கடைசி விநாடிகளோடு — ஒரு டைம்பாம் உட்கார்ந்திருக்கிறது.

## 2

**நீ**ங்கள் இந்த இரண்டாவது அத்தியாயத்திற்குள் நுழைகிற போதே — அந்த டைம்பாம் 'டொம்ம்ம்ம்' என்று உச்சபட்ச டெஸிபலோடு வெடித்தது. காரின் மேற்கூரையும் — பக்கவாட்டுக் கதவுகளும் நெருப்புக் கங்குகளோடு — ஆவேசமாய்ப் பிய்க்கப்பட்டு — ஸ்லோமோஷனில் ஆகாயத்தில் எம்பி — தரையை நோக்கி வந்தன. உத்தமும், குருதேவ்சிங்கும் ஒவ்வொரு உறுப்பாய்ச் சிதறி — காரின் உறுப்புக்களோடு கலந்து எறியப்பட்டார்கள்.

பின்னால் வந்து கொண்டிருந்த கார்களும் — ஒரு போலீஸ் ஜீப்பும் அதிர்ச்சியோடு ஸ்தம்பித்தன.

**வி**பத்து நடந்த ஸ்தலத்திற்குப் பம்பாய் கமிஷனர் ஹில் — கனமான கவலையோடு வந்து சேர்ந்த போது — கருகிப் போன அம்பாஸிடர் இன்னமும் ஊதுவத்தி இழை மாதிரி புகைந்து கொண்டிருந்தது. நூறு சதுர மீட்டர் பரப்புக்குத் தாராளமாய் எகிறியிருந்த கார் பாகங்களுக்கு மத்தியில் உத்தமையும், குருதேவையும் பாலிதீன் பைகளில் போலீஸார் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். ஜுஹு பீச்ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் அரை கிலோ மீட்டர் தூரத்திற்கு கார்கள் நின்று போயிருக்க — ஜனங்கள் அங்கங்கே திட்டுத்திட்டாய் அதிர்ச்சியுடன் தெரிந்தார்கள். பூபேஷிடம் பேசிக் கொண்டிருந்த உதவி போலீஸ் கமிஷனர், கமிஷனர் ஹில்லைப் பார்த்ததும் ஓடி வந்தார். விரைத்து சல்யூட் போட்டார். தளர்ந்தார்.

ஹில் விபத்து நடந்த ஸ்தலத்தை ஒரு முறை பார்வையால் கழுவி விட்டு — உதவி போலீஸ் கமிஷனரை ஏறிட்டார். மராட்டியில் சம்பாஷித்தார்.

"மற்ற விளையாட்டு வீரர்கள் ஹோட்டலுக்குப் போய்ப் பத்திரமாய்ச் சேர்ந்து விட்டார்களா...?"

"சேர்ந்து விடார்கள்... ஸார்!"

"கூடுதல் பாதுகாப்பு...?"

"தரப்பட்டிருக்கிறது...."

"இந்த குண்டு வெடிப்பு எப்படி...? ஏதாவது உபயோகமான தகவல் கிடைத்ததா...?"

"கார் ஏர்போர்ட்டிலிருந்து புறப்பட்ட பத்தாவது நிமிஷம் வெடித்திருக்கிறது. காருக்குள்ளிருந்த ஹாக்கி குழு காப்டன் உத்தம், ஹாக்கி கோச் குருதேவ் சிங், கார் டிரைவர் பாபட்லால் மூன்று பேருமே — சின்னச் சின்ன துண்டுகளாய்ச் சிதறியிருக்கிறார்கள். வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் போலீஸுக்கு உபயோகப்படுகிற வகையில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை."

ஹில் இடிபாடுகளுக்கு மத்தியில் நடந்து கொண்டே கேட்டார். "இந்தக் கார் யாருடையது...?"

"இந்திய ஒலிம்பிக் கமிட்டியின் உறுப்பினர் சோலன்கிக்குச் சொந்தமான கார் இது."

"அவர் ஸ்தலத்தில் இருக்கிறாரா...?"

"இருக்கிறார்..."

"அவரைக் கூப்பிடுங்கள்..."

உதவி போலீஸ் கமிஷனர், பூபேஷைப் பார்க்க, பூபேஷ் — கொஞ்சம் தொலைவில் நின்றிருந்த அந்த உயரமான மனிதரைக் கூப்பிட்டார். அவர் வியர்த்த முகத்தோடு ஓடி வந்தார்.

கமிஷனர் ஹில் கேட்டார்.

"வெடித்தது உங்கள் கார்தானே மிஸ்டர் சோலன்கி...?"

"ஆமாம்..."

"விளையாட்டு வீரர்களை ஏற்றிச் சென்ற — அத்தனை கார்களும் பத்திரமாய் — ஹோட்டல் போய்ச் சேர்ந்திருக்கும் போது

ராஜேஷ்குமார்

— உங்கள் கார் மட்டும்... வெடித்துச் சிதறியிருக்கிறது. இதற்கு என்ன காரணத்தைச் சொல்கிறீர்கள்....?''

சோலன்கி காய்ந்து போன தன் உதடுகளை — நாக்கால் நீவி ஈரப்படுத்திக் கொண்டு சொன்னார்: ''எனக்கு எதுவுமே புரியவில்லை ஸார்....''

''காலை ஏர்போர்ட்டுக்கு வரும் போது இந்தக் காரில்தானே வந்தீர்கள்?''

''ஆமாம்.''

''அப்போது மணி என்ன இருக்கும்?''

''ஐந்து மணி.''

''காரை டிரைவர்தான் ஓட்டிக் கொண்டு வந்தாரா?''

''ஆமாம்.''

''டிரைவரோட பெயர்?''

''பாபட்லால்...''

''பாபட்லால் எத்தனை வருஷமாக உங்களிடம் டிரைவாக இருக்கிறார்?''

''ஐந்து வருஷ காலமாக...''

''ஏர்போர்ட்டுக்கு வெளியே கார் நிறுத்தப்பட்டிருந்த போது — டிரைவர் பாபட்லால் காரிலேயே இருந்தாரா...? இல்லை விளையாட்டு வீரர்களைப் பார்க்கும் ஆர்வத்தில் லௌஞ்சுக்கு வந்து விட்டாரா?''

பூபேஷ் குறுக்கிட்டுக் கேட்டார்:

''இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லலாமா... கமிஷனர் ஸார்?''

கமிஷனர் ஹில் பூபேஷை ஏறிட்டு ''எஸ்... ப்ளீஸ்'' என்றார்.

''விளையாட்டு வீரர்களை ஏர்போர்ட்டிலிருந்து... ஹோட்டல் ஒபேராய் டவர்ஸுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் பொறுப்பை கமிட்டியின் உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்குச் சொந்தமான மொத்தம் இருபத்தைந்து கார்கள் அதற்காக ஏர்போர்ட் வாசலில் காத்திருந்தன. காரின் டிரைவர்கள்... எக்காரணத்தைக் கொண்டும் — காரை விட்டு நகரக் கூடாது என்று பணிக்கப்பட்டார்கள்.''

''அப்படியானால் டிரைவர் பாபட்லால் காரில்தான் இருந்திருக்கிறார்?''

''ஆமாம்...''

''காரில் அவர் இருக்கும் போது — டைனமைட்டை எப்படிப் பொருத்தியிருப்பார்கள்?'' ஹில் யோசனையாய்த் தாடையைத் தேய்த்தார்.

உதவி போலீஸ் கமிஷனர் பூபேஷை ஏறிட்டார். ''இன்றைக்கு மொத்தம் — விளையாட்டுக் குழுவைச் சேர்ந்த — முப்பத்திரண்டு பேர் ஃப்ளைட்டில் வந்திருக்கிறார்கள். அனைவருமே பொது மக்களின் மத்தியில் பிரபலமடைந்தவர்கள். இவர்களில் ஹாக்கி காப்டன் உத்தம், ஹாக்கி கோச் குருதேவ் சிங் — இருவரை மட்டுமே யாரோ குறி வைத்துத் தீர்த்திருக்கிறார்கள். இதற்கு



ஏதாவது உள் நோக்கம் இருக்குமா...?''

பூபேஷ் நெற்றியைக் கீறினார்.

"நீங்கள் சொல்வது புரியவில்லை.''

''உத்தம் ஒலிம்பிக் குழுவில் இடம் பெற்றது குறித்து யாரேனும் பொறாமைப்பட்டிருக்கலாம்... என்பது என் எண்ணம்.''

''நூ... ஆர்... ராங்... ஸார்... உத்தம் ஹாக்கி குழுவுக்கு காப்டனாகக் கடந்த இரண்டு வருஷமாக... இருக்கிறார். அவருடைய தலைமையில்தான் ஹாக்கிக் குழு ஒலிம்பிக்கிற்குப் போகப் போகிறது என்கிற உண்மை கடந்த ஒரு வருஷ காலமாகவே — எல்லோர்க்கும் தெரியும். அவர் தம் சொந்த ஊரான சண்மகரில் 'பிரிபரேடரி பீரியட்' பயிற்சிகளை மேற்கொண்டிருந்த போதும் டெல்லியில் 'மிட் சீஸன்' பயிற்சிகளை மேற்கொண்டிருந்த போதும் — அவர் பாதுகாப்பில்லாமல்தான் இருந்தார். சொந்த விரோதத்தின் காரணமாக நடைபெற்ற கொலையாக இருந்திருந்தால் — அது அன்றைக்கே நடைபெற்றிருக்க வேண்டும்...

''யூ...மே...பி... கரெக்ட் மிஸ்டர் பூபேஷ்.. ஆனால் எனக்கு இன்னொரு சந்தேகம்...?''

''என்ன...?''

''உத்தமும், குருதேவ் சிங்கும் சோலன்கியின் அம்பாசிடர் காரில்தான் ஏற வேண்டும் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருந்ததா...?''

''நோ... நோ... அப்படிப்பட்ட ஏற்பாடு எதுவும் கிடையாது. எந்தக் காரிலும் யார் வேண்டுமானாலும் ஏறி ஹோட்டலுக்குப் போகலாம்... உத்தமும், குருதேவ் சிங்கும் ஏர்போர்ட் வாசலுக்கு வந்த போது, சோலன்கியின் கார் வரவும், அதில் அவர்கள் ஏறிக் கொண்டார்கள்.''

''அப்படியானால் இது குறிப்பிட்ட நபர்க்காகப் பொருத்தப்பட்ட வெடிகுண்டு இல்லை. அந்தக் காரில் வேறு யார் ஏறியிருந்தாலும் — அவர்களுக்கும் இந்தக்கதிதான் ஏற்பட்டிருக்கும்.''

''அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது.''

மூன்று பேரும் — பேசிக் கொண்டே இடிபாடுகளுக்கு மத்தியில் யோசித்து யோசித்து நடந்தார்கள். கோரக் காட்சிகளைக் காணச் சகியாமல் "ஹாரிபிள்..." என்று கமிஷனர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

**ஹோ**ட்டல் ஒபேராய் டவர்ஸ்.

சாயந்தரம் ஆறு மணி.

பூபேஷ் பத்திரிகை நிருபர்களை விரட்டிக் கொண்டிருந்தார். ''தயவு செய்து ஒரு வார காலத்திற்கு யாரும் வராதீர்கள். பேட்டி எதுவும் கிடையாது. விளையாட்டு வீரர்களைத் தொந்தரவு செய்யாதீர்கள். போங்கள்.''

நிருபர்கள் நகர மறுத்துப் பிடிவாதம் காட்ட — பூபேஷ் கதவைப் படீரென்று அறைந்து சாத்திக் கொண்டு — உள்ளே போனார்.

ஜன்னலுக்கு வெளியே — ரோட்டோரங்களில் கும்பல் நின்று — ஹோட்டலின் மாடிகளை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது. ஜன்னலைச் சாத்தி விட்டுப் படுக்கையில் வந்து விழுந்து கண்களை மூடிக் கொண்டார். கண்ணுக்குள் காரின் இடிபாடுகளும் — அவற்றுக்கிடையில் மறைந்திருந்த சதைத் துணுக்குகளும் — கழன்று — மனசுக்குள் ஒரு பெரிய வால்போஸ்டர் மாதிரி ஒட்டிக் கொண்டன.

'உத்தம் ஒரு அருமையான ஹாக்கி விளையாட்டு வீரன். ஆசிய ஹாக்கிப் போட்டியில் — அந்த தொடரில் மட்டும் பதினான்கு கோல்கள் போட்டவன். பெனால்டி கார்னர் கிடைத்தால் அதை 'கோல்' ஆக்காமல் விடவே மாட்டான்...' — பூபேஷின் இதயம் பாறை மாதிரி கனக்க —

பக்கத்து டீபாயின் மேலிருந்த டெலிபோன் துடித்தது.

மெதுவாய் — எழுந்து உட்கார்ந்து ரிஸீவரை எடுத்தார். மறுமுனை கேட்டது.

''ஹலோ... மிஸ்டர் பூபேஷ்...?''

''எஸ்... ஸ்பீக்கிங்''

''நான் கமிஷனரின் உதவியாளர்... பேசுகிறேன். கமிஷனர் உங்களோடு பேச விரும்புகிறார். சிறிது அந்தரங்கம். பக்கத்தில் யாருமில்லையே?''

''இல்லை...''

''பேசுங்கள்...''

சில விநாடிகளுக்குப் பின் — கமிஷனர் ஹில்லின் குரல் ரிஸீவரில் வழிந்தது. ''மிஸ்டர் பூபேஷ்! வெடிகுண்டு நிபுணர்களிடமிருந்து சற்று முன்னதாகத்தான் ரிப்போர்ட் கிடைத்தது.''

''எனிதிங் இம்பார்ட்டெண்ட் ஸார்?'' பூபேஷ் ஆர்வமானார்.

''எஸ்... காலையில் ஏர்போர்ட்டுக்கு விளையாட்டு வீரர்களை வரவேற்க வந்த கும்பலில் யார்... யார்.. 'பொக்கே' வைத்திருந்தார்கள் என்பதை உங்களால் சொல்ல முடியுமா...?''

''ஏன்... என்ன... விஷயம்...?''

'' 'பொக்கே'யுக்குள் டைனமைட் வைத்துக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் — என்பது நிபுணர்களின் கருத்து. காரின் வேறு எந்தப் பாகத்திலும் — டைனமைட் பொருத்தப்பட்டதற்கான சாத்தியக்கூறு இல்லையென்றும் — ஒரு குறிப்பிட்ட 'பொக்கே' மட்டும் அதிகபட்சமாய்ச் சிதறியிருப்பதால் — டைனமைட் அதில்தான் மறைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் ரிப்போர்ட் உறுதியாகக் கூறுகிறது.''

''கையில் 'பொக்கே' வைத்திருந்த யாரோ ஒருவர்தான்.... அந்த வெடிகுண்டு சம்பவத்துக்குக் காரணமா...?'' — பூபேஷ் கேட்டார்.

''ஆமாம்...''

''இன்றைக்குக் காலை வரவேற்க வந்தவர்களில் பெரும்பாலானோர் கைகளில் பொக்கே இருந்தது. நாம் யாரையென்று சந்தேகிக்க முடியும் ஸார்...?''

''ஒரு வழி இருக்கிறது...''

''சொல்லுங்கள்...

(தொடரும்)


"தினமும் மூணு வேளை கேரமில்க் கொடுங்க, சரியாயிடும்!"
Parry's
கேரமில்க்
CARAMILK
"குழந்தைகளே... இன்னிக்கு கேரமில்க் சாப்பிட்டீங்களா!"
PARRYS
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
கேரமில்க் • சாக்லேட் எக்ளேர்ஸ் • ட்ரை-மி
கோகனட் கிரீம் • சாக்லேர்ஸ் • லால்லியாப்ஸ் • காஃபி பைட்
Parry's
The King of Sweets
HTA 7077


துப்பறியும்
சூர்யா - கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
இந்த அயோக்கியனின் இரும்புப் பிடியிலிருந்து தப்ப முடியாது.
இங்கே நான் தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் மற்ற விஞ்ஞானிகளைத் தப்புவிக்கத் திட்டமிடுவேன்.
ஒரு மனிதனின் ஜீன்களை இன்னொருவனுக்கு ஊசி மூலம் செலுத்தினால் அவனைப் போலவே இவன் தோற்றம் மாறுமாமே...
அந்த விஞ்ஞான நுணுக்கத்தை என்னுடைய ஆளுக்கு நீ கற்றுத் தந்தால் உன்னை விடுவித்து விடுகிறேன்.
முதலில் உன்னுடைய ஜீன்களை இவனுக்குச் செலுத்து!
இருபத்தி நாலு மணி நேரத்துக்குப் பிறகு...
அற்புதம்! இவன் உன்னைப் போலவே தோற்றமளிக்கிறானே!
கிரண்! அந்த அற்புதத்தின் எல்லா நுணுக்கங்களையும் கல்தானுடைய ஆளுக்குக் கற்றுத் தந்தேன், நான்!
(தொடரும்)



## இந்த பெண்மணி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர தகுதியுடையவர்.

# இவரை அடையாளம் காண எங்களுக்கு உதவுவீர்களா?

நாங்கள் இந்தப் பெண்மணியைச் சந்திக்க விரும்புகிறோம். மேலும் இவரைப் போன்ற இலட்சக்கணக்கானவர்களையும் சந்திக்க விரும்புகிறோம். ஒரு நெருக்கடியான நேரத்தில் நாங்கள் அளிக்கக்கூடிய சிறிதளவு பாதுகாப்பு பற்றி அவர்களுக்குச் சொல்ல நினைக்கிறோம். இதனைச் செய்ய நீங்கள் எங்களுக்கு உதவ முடியும். ஏனெனில், நீங்கள் இவர்களை அன்றாடம் சந்திக்கிறீர்கள் - உங்கள் பணியாளர், சலவைத் தொழிலாளி, தோட்டக்காரர், பாதை ஓரத்தில் பணிபுரியும் செருப்புத்தைப்பவர். இவர்களைச் சந்திக்கும் போது, தனிநபர் விபத்து சமூகப் பாதுகாப்புத்திட்டம் பற்றி எடுத்துக் கூறுவதன் மூலம், நீங்கள் அவர்களுக்கு ஒரு சிறந்த உதவி புரிந்தவர்கள் ஆவீர்கள்.

பாம்புக்கடி, உயரமான இடத்திலிருந்து கீழே விழுதல், நச்சு உணவு, நீரில் மூழ்குதல் இதுபோன்ற விபத்து, ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் நபரின் விலைமதிப்பில்லா உயிரைப் பறிக்கக்கூடும். ஆண்டு வருமானம் ரூ. 7200க்குக் குறைவாகப் பெறும் குடும்பங்களில், 18 முதல் 65 வயது வரையுள்ள சம்பாதிக்கும் நபர்களுக்கு இந்த தனிநபர் விபத்து சமூகப் பாதுகாப்புத் திட்டம் பொருந்தும். இந்த வருமான வரம்புக்கு உட்பட்ட குடும்பத்தில் சம்பாதிக்கும் நபர்களில் யாரேனும் ஒருவர், விபத்து காரணமாக இறக்க நேர்ந்தால், அந்தக் குடும்பம் ரூ.3000 நஷ்ட ஈடு பெறத் தகுதி பெறுகிறது. இதற்கு, முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவோ, கட்டணம் செலுத்தவோ தேவையில்லை. இத்திட்டம் பற்றிய விபரங்களை மகிழ்வோடு உங்களுக்கு அளிக்க தென்னிந்தியாவிலுள்ள "யுனைடெட் இந்தியா"வின் அலுவலகங்கள் காத்திருக்கின்றன.

இதற்கிடையில், இத்திட்டம் பற்றி அனைவருக்கும் தெரிவிப்பீர்களா?

**இந்திய அரசு**

**தனி நபர்விபத்து சமூகப்பாதுகாப்புத்திட்டம்**

யுனைடெட் இந்தியா
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவின் ஒரு அங்கம்)
24, ஒயிட்ஸ் சாலை, சென்னை - 600 014.

**இத்திட்டம் பற்றி அனைவர்க்கும் உணர்த்த எங்களுக்கு உதவுவீர்.**

Mudra:M:UI:3599 Tam

# மண் குடிசைக்குள் வளரும் விஞ்ஞானம்!

இருநூறுக்கும் மேலான மகாநாடுகளில் பங்கேற்றார் டாக்டர் கோஸ்லா என்ற விஞ்ஞானி. ஹார்வர்டு பல்கலைக் கழகத்திலும் ஐ.நா. சபையிலும் முக்கிய பதவிகளை வகித்து வந்த அசோக் கோஸ்லாவுக்குப் 'பேசிப் பேசி நாம் மக்களுக்குச் சாதித்தது என்ன?' என்று தோன்றி விட்டது. 'பேசியது போதும் ஏதாவது செய்ய வேண்டும்' என்று அவருக்குள் எழுந்த வேகமே டி. ஏ. (D.A.) என்ற நிறுவனம் துவங்கக் காரணம் ஆயிற்று.


அணு விஞ்ஞானமோ, கம்ப்யூட்டர் யுகமோ நேரடியாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவப் போவதில்லை என்று உணர்ந்தார் அவர். என்ன செய்தால் அவர்களுக்கு 'உபயோகமாக இருக்கும் என்று யோசித்தார். இன்று அவர்கள் செய்து கொண்டிருக்கும் தொழில்களை இன்னும் சிறப்பாகச் செய்ய அவர்களுக்கு வழிகாட்டுவதே சிறந்த உபாயம் என்ற முடிவுக்கு வந்தார். இந்த அடிப்படையில்தான் டி.ஏ. இன்று இயங்குகிறது. **DA** என்பது **Development Alternatives** என்பதன் சுருக்கம். தலைமையகம் தில்லியில்.

எளிய மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்களில் என்னென்ன புதுமைகளை, மாற்றங்களை உருவாக்கலாம், அவர்கள் புரியும் தொழிலுக்கு உதவும் இயந்திரங்களில் என்னென்ன அபிவிருத்திகளைச் செய்யலாம்என்று ஆராய்ச்சி செய்வது இந்த ஸ்தாபனத்தின் முக்கிய பணி. மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டு, அவர்கள் செய்யும் தொழிலில் உள்ள குறைபாடுகளை உணர்ந்து கொள்கிறார்கள். பிறகு அவற்றை நீக்கப் புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்குகிறார்கள். தங்கள் கண்டுபிடிப்புகளை மக்களிடமே எடுத்துச் சென்று, சோதனை செய்து பார்க்கச் சொல்கிறார்கள். தேவையானால் சில மாற்றங்களையும் செய்கிறார்கள்.

விஞ்ஞானிகள், பொறி இயல் வல்லுனர்கள், கட்டடக் கலையில் பட்டதாரிகள், நிர்வாக நிபுணர்கள், மானிடவியல், சமூகவியல் நிபுணர்கள் என்று பல துறைகளைச் சேர்ந்த சுமார் நூறு பேர் இந்த அலுவலகத்தில் பணி புரிகிறார்கள். இந்த நிபுணர்களின் சராசரி வயது இருபத்தி ஐந்தோ, இருபத்தியாறோ தான். இவர்கள் பெறும் சம்பளமும் இவர்கள் தகுதிக்கு மிகவும் குறைவுதான். பணத்துக்காக அல்லாமல் உண்மையான ஆர்வம் மேலிட வேலை பார்க்கும் இளைஞர்க

இன்று நமது கைத்தறி நெசவாளர்களின் நலிந்து கிடக்கும் பொருளாதார நிலைமை எல்லோருக்கும் தெரிந்ததே! பெரும்பாலான நெசவாளர்கள் மிகவும் பழைமையான தறிகளையே பயன்படுத்துகிறார்கள். இதனால் நிறைய நேரத்தைச் செலவழித்தும் தரத்தில் குறைந்த துணிகளையே பெற முடிகிறது. இவர்களுக்கு உதவ, டி.ஏ. நிபுணர்கள் தாரா தறி மற்றும், தாரா பிரணியை **(Pirani)** உருவாக்கினார்கள். (டி.ஏ. கண்டுபிடிக்கும் புதிய சாதனங்களை, **TARA - Technology and Action for Rural Advancement** என்ற இவர்களுடன் இணைந்த நிறுவனம் உற்பத்தி செய்கிறது.)

இரண்டு வருட ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் தாரா தறி, வேகத்தில் கிட்டத்தட்ட மின்விசையால் இயங்கும் பவர் லூம் தறிக்கு ஒப்பானது. சாதாரண தறியில் ஒரு நாளைக்கு 10–லிருந்து 14 மீட்டர் துணி நெய்யலாம் என்றால், தாரா தறியில் 28–லிருந்து 30 மீட்டர் வரையில் நெய்யலாம். பருத்தி, பட்டு, பாலியஸ்டர் போன்ற நைஸ் ஆடைகள் தவிர, கம்பளித் துணி, கம்பளிப் போர்வை போன்ற முரட்டு ஆடைகளையும் இந்தத் தறியில் நெய்யலாம். பழைய தறியை விட, உயரம் குறைவாக இருப்பதால் ஒரு குடிசைக்






தாரா பிரணியில் பெண்கள் நூல் சுற்றுகிறார்கள்.

குள் எடுத்துச் செல்வது எளிது. உபயோகிப்பதும் சுலபம். சாதாரண பிரணியை விட இரு மடங்கு உற்பத்தியைக் கொடுக்கும் தாரா **two-spindle pirani winder** என்பதும் இவர்களுடைய புதுமைத் தயாரிப்பு. இவற்றைப் பல மாநில அரசுகள் வாங்கிக் கைத்தறி நெசவாளர்களுக்குச் சலுகை விலையில் வழங்க முன்வந்துள்ளன.

**ஏ**ழை எளிய மக்கள் வசிக்கும் குடிசைகளின் பால் டி.ஏ. விஞ்ஞானிகளின் கவனம் திரும்பியது. மழையில் மண் சுவர் கரைகிறது. வெய்யில் காலத்தில் ஒரு நெருப்புப் பொறி விழுந்தால் கூரைகள் பற்றிக் கொள்ளச் சேரி மொத்தமும் நாசமாகிறது. டி.ஏ. நிபுணர்கள் செங்கற்களுக்குப் பதிலாக, அழுத்தம் தந்து தயாரிக்கப்பட்ட மண் கற்களை உபயோகிக்கலாம் என்று கண்டறிந்திருக்கிறார்கள். இந்த மண் கற்களைத் தயாரிக்கும் இயந்திரத்தை வால்மீக நாதன் என்ற இளைஞர் கண்டுபிடித்திருக்கிறார். குடில்கள் கட்டப்படும் இடத்திலேயே இந்த உறுதியான மண் கற்களைத் தயாரித்து விட முடியுமாதலால் போக்குவரத்து வாகனச் செலவு மிச்சம். செங்கற்களை விட மிகவும் மலிவு. சூளை போட வேண்டாம்; வெய்யிலில் காய்ந்தாலே போதும்.

கூரைகள் தீப்பிடிக்காமல் இருக்க அஸ்பெஸ்டாஸ் பயன்படுத்தலாம். ஆனால் இந்த அஸ்பெஸ்டாஸ் உடல் ஆரோக்கியத்துக்குத் தீங்கு இழைக்கக் கூடியது என கருதப்படுகிறது. விலையும் அதிகம். எனவே டி.ஏ. விஞ்ஞானி திவாய் சர்மா, இப்போது புதுமையான காகித அட்டை தயாரித்து வருகிறார். இந்தக் காகித அட்டை தண்ணீரால் பாதிக்கப்படாது; தீப் பிடிக்காது என்பது தான் விசேஷம்! பழைய பேப்பர் கடைகளில் குவியும் காகிதங்களைக் கொண்டு கூழ் தயாரித்தே இந்த அட்டைகளைத் தேவையான ரசாயனச் சேர்க்கைகளுடன் உருவாக்க முடியும். இந்தப் புதுமைப் படைப்பை மேலும் கச்சிதப்படுத்தும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

டி.ஏ. விஞ்ஞானிகள் ஊருக்கு உபதேசிப்பதுடன் நிற்பதில்லை. தாங்களும் அவ்வாறே வாழ்ந்து காட்டுகிறார்கள். புது தில்லியில் தங்கள் நிறுவனத்தின் தலைமை காரியாலயக் கட்டடத்தை நீரஜ் என்ற இளைஞனின் வரை படத்தின் அடிப்படையில் முழுக்க முழுக்க அழுத்தம் மிக்க மண் கற்களினாலேயே கட்டியிருக்கிறார்கள். செங்கற்களைத் தவிர்த்திருக்கிறார்கள்.



மண்ணினால் கட்டப்பட்ட டி. ஏ. அலுவலகக் கட்டடம்.

கிராம மக்களின் தலையாய பிரச்னைகளுள் ஒன்று குடிநீர். ஹிந்துஜா ஃபவுண்டேஷன் நிதி உதவியுடன் தமிழ்நாடு உள்பட, ஐந்து மாநிலங்களிலுள்ள பல கிராமங்களுக்குச் சுத்தமான குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆற்று நீர் அல்லது கிணற்று நீரை டி.ஏ. தயாரித்துள்ள மண் பானைகளினாலான ஃபில்டர்களில் வடிகட்டி, சுத்திகரித்துப் பயன்படுத்தலாம் என்று கிராம மக்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

மறைமலை நகரில் காங்கிரஸ் மகாநாடு நடந்த பொழுது, பிரதமர் செல்ல வேண்டிய வழியில் இருந்த குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டன. அந்தக் குடிசைவாழ் மக்கள் பரங்கி மலைக்கு அருகே குடியேற்றப்பட்டனர். இந்தப் புதிய குடியிருப்பில் அக்கம் பக்கத்தில் குடிநீர் வசதியில்லை என்பதைக் கண்டறிந்து, உடனே அவர்களுக்காகப் பெரிய கிணறு ஒன்றை வெட்டிய டி.ஏ. இளைஞர்களின் சமயோசிதத்தைப் பாராட்ட வேண்டும்.

எளிய மக்களின் அன்றாடத் தேவைகளில் ஒன்று சமையல் செய்வதற்கு வேண்டிய அடுப்பு. டி.ஏ. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி காரணமாக உருவாகியிருக்கும் தாரா அடுப்பு இன்று சிக்கிம், ஜம்மு காஷ்மீர், உ.பி., ஆந்திரா போன்ற மாநிலங்களில் பிரபலமாக இருக்கிறது. சுமார் எண்பது ரூபாய் விலையுள்ள தாரா அடுப்புக்கு மற்ற அடுப்புக்களை விட எரிபொருள் தேவை குறைவு, எரி சக்தி அதிகம். புகையும் ரொம்பக் குறைவு.

குயவர்கள் செய்யும் மண் சாமான்களுக்கு இன்று பிளாஸ்டிக், அலுமினியம், ஃபைபர் கிளாஸ் போன்றவற்றிடமிருந்து கடும் போட்டியிருக்கிறது. எனவே நாடெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான குயவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் தரத்தை உயர்த்த பல புதிய உத்திகளைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருக்கிறார்கள். டி.ஏ. நிபுணர்கள்.

நம் நாட்டில் இப்படி எத்தனையோ, பிரச்னைகள், தேவைகள். இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க, வளர்ச்சியுற்ற மேல்நாடுகளில் அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப உருவான டெக்னாலஜியை இறக்குமதி செய்வது பயன்படாது; நமது நாட்டின் தேவைகளுக்கு ஏற்பப் புதிய தொழில் நுணுக்கங்களை நாமே உருவாக்க வேண்டும். இது ஒன்றே இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி என்று உணர்ந்து செயல்படுகிறது Development alternatives நிறுவனம். இந்த புத்திசாலித்தனமான கொள்கையை நம்மை ஆள்கின்ற தலைவர்கள் எல்லோரும் புரிந்து கொண்டு கடைப்பிடித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

— ரமாமணி சுந்தர்

## அருள்வாக்கு

காருண்யம் — கருணை காட்டுவது என்றால் இப்படிக் கருணை காட்டுகிறவர் ஒருபடி உயர நிற்கிற மாதிரியும் கருணைக்குப் பாத்திரமாகிறவர் ஒருபடி கீழே நிற்கிற மாதிரியும் தொக்கி நிற்கிறது. "நாம் உசத்த ஸ்தானத்தில் இருக்கிறோம். நம் உதவியைப் பெறுகிறவர் நம்மைவிடத் தாழ்த்தியாக இருக்கிறார்.



நாம் கருணை காட்டுகிறோம்" என்று நினைக்கிற போதே நாம் செய்கிற உபகாரம் அசத்தமாகிவிடுகிறது. உபகாரம் செய்வதன் பயனாக நமக்கு எளிமை, அடக்கம், அஹங்கார நீக்கம், ஆகியன உண்டாக வேண்டும். மாறாக நாம் உபகாரம் பண்ணும் போது போனால் போகிறது என்று யாருக்கோ கருணை காட்டுகிற மாதிரி நினைத்தோமானால் இது ஆணவ அஹங்காரங்களுக்கு இடமாகி விடுகிறது. உபகாரத்தால் நம் ஆத்மாவை உயர்த்திக் கொள்வதற்கு நேர் மாறாக ஆத்மஹானியே உண்டாகிவிடும்.

கருணை, காருண்யம் என்கிற வார்த்தையைச் சொல்வதைவிட அன்பு என்று சொல்லிவிட்டால் இந்த ஏற்றத் தாழ்வு தொனிக்காமல் இருக்கும். அன்பு என்பது நம்மவர்களிடமே நாம் ஸ்வபாவமாகச் செய்கிற காரியம். இதிலே போனால் போகிறதென்று யாரோ அந்நியருக்கு இரக்கம் காட்டுகிற மாதிரியான அஹங்கார எண்ணம் இல்லை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

# விழாக் கால பிரகாசத்தை
# என்றென்றும் நீடிக்க
# வைத்துக் கொள்ளுங்கள்






விழாக்கால சந்தோஷமானது என்றும் உள்ள சந்தோஷமாக இருக்க வேண்டும். விழாக்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பொழுது அதுவே சேமிப்புக்கு ஒரு காரணமாகிறது: சந்தோஷத்தை என்றும் நிலை நிறுத்திக் கொள்ள சேமிப்பது என்ற ஒரு காரணம் மேலும் மதிப்புடையது.

வாருங்கள் வைஸ்யா பாங்கிற்கு. வாழ்நாள் முழுவதும் உள்ள விழாக்கால குதூகலத்திற்கு ஒதுக்கீடு செய்வது இன்று எத்தனை எளிது என்பதை வரிசையான சேமிப்புத் திட்டங்கள் கூறும்.



மணிபேக் சேவிங்ஸ்
சூப்பர் டெபாசிட்
சம்பூர்ணா ஆன்யூட்டி
க்யூமுலேடிவ் டெபாசிட்
அப்யுதயா டெபாசிட்
மிக்சட் டெபாசிட்

டபுள் பெனிபிட் டெபாசிட்
பரம்பரா டெபாசிட்
ஜனதா கேஷ் சர்டிபிகேட்ஸ்
சௌபாக்யநிதி டெபாசிட்
அக்ஷயா டெபாசிட்
பால விகாஸ் டெபாசிட்
வித்யா நிதி டெபாசிட்

வாருங்கள்,
கூட்டு சேர்ந்து நன்கு வளருவோம்.



**தி**
**வைஸ்யா பாங்க் லி.**


பதிவு அலுவலகம்: அவென்யூ ரோடு, பெங்களூர்-560 002
நிர்வாக அலுவலகம்: 72, செயின்ட் மார்க்ஸ் ரோடு, பெங்களூர்-560 001.
சேர்மன்: ரமேஷ் கெல்லி.

**நவம்பர் - 1988**
**எங்களுடைய**
**சேமிப்பு ஊக்க மாதம்**

ஒரு கணக்கைத் துவக்கி
ஒரு கவர்ச்சிகரமான அன்பளிப்பைப்
பெற்றுக் கொள்ளுங்கள்.

10 கணக்குகள் போட வேண்டும்.
ஆங்கில பாடத்தில் வீட்டு வேலை.
பூகோளப் பரீட்சைக்குப்படிக்க வேண்டும்.
மேலும், நாளைக்கு அவனுக்கு கிரிக்கெட் மேட்ச் வேறு இருக்கிறது.

# "அம்மா, இந்த கொசுத்தொல்லைக்கு ஏதாவது செய்யேன்!"





## BANISH

மாலை, இரவு நேரங்களில் கொசுவுடன் விடாது போராட வேண்டியிருந்தால், பள்ளிப்பாடத்தில் மட்டுமல்ல, விளையாட்டிலும் சாம்பியனாக இருப்பது அவ்வளவு எளிதல்ல.

ஆகவே இன்றே பேனிஷ் வாங்குங்கள்.


அது மிகவும் பாதுகாப்பானது. (உங்கள் குழந்தை அதைக் கையாளலாம்.) அத்துடன், அது கொசுக்களை விரைவாக ஒழிக்கும் மிக நவீனமான சாதனம்.

அதில் உள்ள விசேஷ எலக்ட்ரானிக் சிப், தொடர்ந்து ஒரே சீராக




சூடாவதற்கு உறுதி செய்கிறது. மிகவும் செறிவாக மருந்து பூசப்பட்ட வில்லைகள், எந்த வில்லைகளையும் விட அதிக சக்தியுடன் செயலாற்றுகின்றன. பேனிஷ் இருந்தால் கொசுத்தொல்லையே இருக்காது.

நேரம் போக்க நேரத்திலிருந்து, காலை கண் விழிக்கும் நேரம் வரை 12 மணி நேரத்திற்குத் தொடர்ந்த பாதுகாப்பு




HTA 7003

மிகவும் சக்தி வாய்ந்த எலக்ட்ரானிக் கொசு விரட்டி.




## பூர்வ கதை

இராஜ ராஜ சோழன் என்று சரித்திரத்தில் புகழ்பெற்ற அருள்மொழி வர்மன், சுந்தர சோழ சக்கரவர்த்தியின் இரண்டாவது மகன். குழந்தைப் பிராயத்தில் அவன் காவேரி நதியில் இராஜ குடும்பத்தாருடன் படகில் சென்று கொண்டிருந்தபோது வெள்ளத்தில் மிதந்த பூவை எடுக்கப் பார்த்து நதியில் விழுந்து முழுகிவிட்டான். குழந்தையைக் காணாமல் எல்லாரும் பதறி நின்ற சமயத்தில் ஒரு பெண்மணி வெள்ளத்திலிருந்து கையில் குழந்தையோடு எழுந்தாள். அவனைப் படகில் விட்டு விட்டு உடனே மறைந்தாள். காவேரித் தாயே குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்ததாக அனைவரும் எண்ணினார்கள். ஆதலின் அரண்மனையிலும் சோழ நாடெங்கும் அவனுக்குப் 'பொன்னியின் செல்வன்' என்ற பெயரும் வழங்கி வந்தது.

பொன்னியின் செல்வன் சோழ நாட்டு மக்களின் உள்ளங் கவர்ந்த செல்வனாயுமிருந்தான். அவனைக் காட்டிலும் சோழ நாட்டு மக்களின் அபிமானத்துக்கு அதிக பாத்திரமாயிருந்தவள் அவன் தமக்கை குந்தவை தேவி. 'இளைய பிராட்டி' என்று மக்களால் மரியாதையுடன் போற்றப்பட்ட குந்தவை, தன் தம்பியிடம் அளவில்லா அன்பு வைத்திருந்தாள். அருள்மொழிக்குச் சிங்காதன உரிமை இல்லையென்றாலும் அவன் ஒருநாள் மகோந்நத நிலைமையை அடையப் போகிறான் என்று பூரண நம்பிக்கை வைத்திருந்தாள். பழையாறை அரண்மனையில் அவளுடைய தனித்த அன்புக்கு உரியவளாக வளர்ந்து வந்த கொடும்பாளூர் இளவரசி வானதியைப் பொன்னியின் செல்வனுக்கு மணம் புரிவிக்க அவள் விரும்பினாள்.

அருள்மொழிவர்மன் 'இளைய பிராட்டி' இட்ட கோட்டைத் தாண்டாமல் நடந்து வந்தான். அவன் தூண்டுதலின் பேரில் இலங்கைப் போர்க்களத்துக்குச் சென்று வீரப் புகழ் பெற்றான். இலங்கை அரசன் மகிந்தன் மலை நாட்டில் ஓடி ஒளிந்த பிறகு சோழ நாட்டு வீரர்களுக்குச் சிறிது காலம் அங்கே வேலை இல்லாமலிருந்தது. அச்சமயம் அருள்மொழிவர்மன் இலங்கை மக்களுக்கு உகந்த பல காரியங்களைச் செய்தான். முக்கியமாக, அநுராதபுரத்தில் இடிந்து தகர்ந்து கிடந்த பழைய புத்த விஹாரங்க

**அமரர் கல்கி**


பொன்னியின் செல்வன்
நான்காம் பாகம்
மணிமகுடம்



ளையும் ஸ்தூபங்களையும் புதுப்பித்துக் கட்டினான். இதனால் மகிழ்ச்சி பெற்ற புத்த சங்கத்தின் ஒரு பகுதியார் அவனுக்கு இலங்கை அரசுரிமையை அளித்து முடிசூட்ட முன்வந்தார்கள். அவ்வாறு வலிய வந்த அரசுரிமையைப் பொன்னியின் செல்வன் மறுத்து விட்டான்.

இலங்கையில் வெறி கொண்டவள் போல் அலைந்து திரிந்து கொண்டிருந்த ஊமை மூதாட்டி ஒருத்தியை அருள்வர்மன் சந்தித்தான். அவளேதான் தன்னைக் காவேரி வெள்ளத்திலிருந்து எடுத்துக் காப்பாற்றியவள் என்பதை அறிந்தான். அவள் எழுதிக் காட்டிய சித்திரங்களின் மூலம் அவளுடைய வரலாற்றையும் ஓரளவு தெரிந்து கொண்டான். அவனுடைய தந்தை சுந்தர சோழர் வாலிபப் பிராயத்தில் இலங்கையை அடுத்திருந்த ஒரு தீவில் தன்னந்தனியாக வந்து ஒதுங்கிச் சில காலம் வசிக்க நேர்ந்ததையும், அச்சமயம் இந்த ஊமை ஸ்திரீயிடம் அவர் காதல் கொண்டு வாழ்ந்ததையும் தெரிந்து கொண்டான். அந்த ஊமை ராணிக்குப் பிறந்ததாக அவன் அறிந்த இரண்டு குழந்தைகள் யாராயிருக்கக் கூடும் என்பதையும் ஒருவாறு ஊகித்துக் கொண்டான்.

சுந்தர சோழ சக்கரவர்த்தி பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டுத் தஞ்சை அரண்மனையில் படுத்த படுக்கையாய்க் கிடந்தார். வானத்தில் சில காலமாகத் தூமகேது ஒன்று காட்சி அளித்துக் கொண்டிருந்தது. இந்த உற்பாதம் இராஜ குடும்பத்தில் ஒருவருக்கு விபத்து நெருங்கியுள்ளதற்கு அறிகுறியென்று எண்ணிச் சோழ நாட்டு மக்கள் கவலை கொண்டிருந்தார்கள். சுந்தர சோழரின் இறுதி நெருங்கி விட்டதாகப் பலரும் நம்பினார்கள். அடுத்தாற் போல் பட்டம் யாருக்கு என்பதைப் பற்றி நாடெங்கும் சர்ச்சை நடந்து வந்தது.

சுந்தர சோழரின் மூத்த குமாரனும் பட்டத்து இளவரசனுமாகிய ஆதித்த கரிகாலன் அச்சமயம் காஞ்சி நகரில் இருந்தான். அவன் வீராதி வீரன். மதுரையின் கடைசி மன்னனாகிய வீரபாண்டியனைப் போர்க்களத்தில் முறியடித்த பிறகு அவனைத் தொடர்ந்து சென்று அவன் ஒளிந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவன் தலையை வெட்டித் தஞ்சைபுரிக்குக் கொண்டு வந்தவன். காஞ்சியில் அவன் சுந்தர சோழரின் பிரதிநிதியாகவும் வடதிசைச் சேநாதிபதியாகவும் விளங்கினான். ஆனால் அவன் உள்ளத்தில் நிம்மதி இல்லாமலிருந்தது. இதற்குக் காரணமாயிருந்தவள் நந்தினி என்னும் பெண்.

ஆதித்தன் சிறுவனாயிருந்த போது அவனோடு குலாவி விளையாடிய சிறுமி நந்தினி. அவள் ஒரு கோவில் அர்ச்சகர் வீட்டில் வளர்ந்து வந்தவள். பின்னர் அவள் பாண்டிய நாட்டுக்குப் போய் விட்டாள். வீர பாண்டியன் இறுதி நாளில் அந்தப் பெண்ணின் வீட்டில்தான் ஒளிந்திருந்தான். ஆதித்த கரிகாலன் பாண்டியனைக் கொல்ல வாளை ஓங்கிய போது நந்தினி குறுக்கிட்டு அவனைக் கொல்ல வேண்டாமென்று மன்றாடினாள். ஆதித்த கரிகாலன் அவளுடைய வேண்டுகோளை உதாசீனம் செய்து வீர பாண்டியனைக் கொன்றான். அது முதல் ஆதித்தனுடைய கனவிலும் நனவிலும் நந்தினியின் கண்ணீர் ததும்பிய முகம் அடிக்கடி தோன்றி அவனை வருத்திக் கொண்டிருந்தது.

அச் சமயம் சோழ சாம்ராஜ்யத்தில் பழுவூர் சிற்றரசர்களான பெரிய பழுவேட்டரையரும் சின்னப் பழுவேட்டரையரும் பேரதிகாரம் படைத்திருந்தார்கள். பல போர்களில் ஈடுபட்டு உடம்பில் அறுபத்து நாலு போர்த் தழும்புகளைப் பெற்றிருந்த பெரிய பழுவேட்டரையர் சோழநாட்டின் தனாதிகாரி; அவர் வைத்ததே சோழ நாட்டில் சட்டமாக இருந்தது. சின்னப் பழுவேட்டரையர் தஞ்சாவூர்க் கோட்டையின் தளபதி. இந்தச் சகோதரர்களின் அனுமதியின்றி யாரும் சுந்தர சோழரைப் பார்க்கவும் முடியாமலிருந்தது.

வீரபாண்டியனுடைய மரணத்துக்குச் சில நாளைக்குப் பிறகு நந்தினி வயது முதிர்ந்தவரான பெரிய பழுவேட்டரையரை மணந்து கொண்டாள். அவளுடைய சௌந்தரியத்துக்கும் அவளிடம் இருந்த அபூர்வமான காந்த சக்திக்கும் கிழவர் அடிமையானார்.





இன்னும் பலரும் அவளுடைய மோகன சக்திக்கு உட்பட்டார்கள். அவளது தூண்டுதலால் கிழவர் ஆதித்த கரிகாலனிடமும் அவனுக்கு உடன் பிறந்தாரிடமும் துவேஷம் கொண்டார். சுந்தர சோழருக்குப் பிறகு ஆதித்த கரிகாலனுக்குப் பதிலாக மதுராந்தகத் தேவனுக்கு முடிசூட்டுவதென்று தீர்மானித்தார். அத் தீர்மானத்துக்குக் கடம்பூர் சம்புவரையர் மற்றும் பல சிற்றரசர்களின் ஆதரவையும் பெற்றார்.

மதுராந்தகத் தேவன் சுந்தர சோழரின் பெரிய தந்தையான சிவஞான கண்டராதித்தரின் புதல்வன். கண்டராதித்தரின் இரண்டாம் மனைவி செம்பியன் மாதேவி சிவ பக்தியே உருவானவள். கண்டராதித்தர் காலஞ் சென்ற போது மதுராந்தகர் சிறு குழந்தை. அவனைச் சிவபக்திச் செல்வனாகச் செம்பியன் மாதேவி வளர்த்து வந்தாள். மதுராந்தகனும் இளம் வயதில் சிவ பக்தியில் ஈடுபட்டு உலக வாழ்க்கையில் பற்றற்று விளங்கினான். சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்த பின்னர், நந்தினியின் தூண்டுதலினால், அவனுக்குச் சாம்ராஜ்யம் ஆளும் ஆசை உதித்து அது வெறியாக முற்றி முதிர்ந்து விட்டது.

மதுராந்தகனுடைய சிங்காதன உரிமையைப் பழுவேட்டரையர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் ஆதரித்து நின்றார்கள்.

ஆனால் சோழ நாட்டில் செல்வாக்கு மிகுந்த இன்னும் இரண்டு சிற்றரசர்களான



திருக்கோவலூர் மலையமானும் கொடும்பாளூர் பெரிய வேளார் பூதி விக்கிரம கேசரியும் இதை ஏற்றுக் கொள்ள மறுத்து எதிர்த்தார்கள். அவர்கள் சுந்தர சோழரின் புதல்வர்களின் கட்சியில் உறுதியாக நின்றார்கள்.

இதையெல்லாம் ஓரளவு ஊகித்து உணர்ந்த சுந்தர சோழர் தாம் கண் மூடிய பின் சாம்ராஜ்யம் சின்னாபின்னம் ஆவதைத் தடுக்க விரும்பினார். இதன் பொருட்டுத் தமது இரு புதல்வர்களையும் தஞ்சைக்குத் தருவித்து ஒரு சமரச ஏற்பாடு செய்து விட ஆசைப்பட்டார். மதுராந்தகனுக்கே சிம்மாசனத்தை உரிமையாக்கி விடவும் அவர் சித்தமாயிருந்தார். அதை மதுராந்தகனுடைய அன்னையாகிய செம்பியன் மாதேவி ஒப்பவில்லை. மதுராந்தகனுடைய மனத்தை இராஜ்ய ஆசையிலிருந்து திருப்ப அந்த மூதாட்டி முயன்றாள்.

ஆதித்த கரிகாலன் பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த தஞ்



சைக்குச் செல்ல விரும்பவில்லை. காஞ்சியில் அவன் பொன் மாளிகை கட்டி அதில் வந்து சில காலம் தங்கியிருக்கும்படி தந்தைக்கு ஓலை அனுப்பினான். ஓலை எடுத்துச் சென்றவன் வந்தியத்தேவன் என்னும் வீர வாலிபன். அவன் வழியில்,தன் தோழன் கந்தமாறனைச் சந்திப்பதற்காகக் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் ஒருநாள் இரவு தங்கினான். அங்கே ஆதித்த கரிகாலனுக்கு எதிராக நடந்து கொண்டிருந்த சதியைப் பற்றித் தெரிந்து கொண்டான். அவ்விடத்திலேயே ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனிடம் அவனுக்கு அறிமுகம் ஆயிற்று. இந்த ஆழ்வார்க்கடியான் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயரின் அந்தரங்க ஒற்றன் என்பது பிற்பாடு தெரிந்தது.

முதன் மந்திரியான அன்பில் அநிருத்தப் பிரம்மராயர் என்பவர் சுந்தர சோழ சக்கரவர்த்தியுடன் இளம் பிராயத்திலிருந்து நட்புரிமை பூண்டவர். சோழ குலத்தைச் சேர்ந்த சகலருடைய அந்தரங்கங்களையும் நன்கறிந்தவர். சோழ சாம்ராஜ்யம் மிகப் பரந்து விரிந்து மகோந்நதம் அடைய வேண்டும்

என்று அவர் கனவு கண்டு வந்தார். சோழ நாட்டு வீரர்கள் கங்கையைக் கடந்து சிந்து நதிக்கரை வரை சென்று இமயமலைக்கு அப்பாலிருந்து படையெடுத்து வரும் அநாகரிக சாதியாரைத் தடுத்து நிறுத்துவதில் உதவ வேண்டும் என்றும் கருதினார். இராஜ்ய உரிமை சம்பந்தமாக எழுந்திருக்கும் தகராறு அவருடைய நோக்கத்தைப் பாழ்படுத்து மென்று அறிந்து, அந்த விபத்தைத் தடுப்பதற்கு அல்லும் பகலும் பாடுபட்டு வந்தார். சிற்றரசர் கோஷ்டி எதிலும் சேராமல் சமரச முடிவு காண்பதற்கு அவர் விரும்பினார். நாட்டில் நடப்பதெல்லாம் அறிந்திருந்தும் அவர் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

தஞ்சைக்கு ஓலை எடுத்துச் சென்ற வந்தியத்தேவன் வழியில் குடந்தை சோதிடரின் வீட்டில் இளையபிராட்டி குந்தவையைச் சந்தித்தான். முதல் சந்திப்பிலேயே அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் அன்பு கொண்டனர். பிறகு அன்பு வளர்வதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. குந்தவையின் விருப்பத்தின் படி வந்தியத்தேவன் கடல் கடந்து இலங்கை சென்றான். அருள்மொழி வர்மனைச் சந்தித்து அவனிடம் குந்தவையின் ஓலையைக் கொடுத்தான்.



"பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்" என்று அதில் எழுதியிருந்தது. இளைய பிராட்டியிடம் அளவில்லாத பக்தி விசுவாசம் கொண்டிருந்த இளவரசன் உடனே புறப்பட ஆயத்தமானான். ஆனால் அதே சமயத்தில் அவனுக்கு இன்னும் இரு அழைப்புகள் வந்திருந்தன. ஆதித்த கரிகாலன் அனுப்பிய பார்த்திபேந்திரன் அவனைக் காஞ்சிக்கு அழைத்துச் செல்ல விரும்பினான். சுந்தர சோழரின் அனுமதியின் பேரில் பழுவேட்டரையர்கள் இளவரசனைச் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கப்பல்களை அனுப்பியிருந்தார்கள். இளைய பிராட்டி குந்தவையிடம் குரோதம் கொண்டிருந்த பழுவேட்டரையர்கள் பொன்னியின் செல்வன் குந்தவையைச் சந்திப்பதை விரும்பவில்லை.



இளவரசன் அருள்மொழிவர்மன் தந்தையின் கட்டளைக்கே முதல் மரியாதை செலுத்த விரும்பிப் புறப்பட்டான். வழியில் நடுக்கடலில் சுழற்காற்று விபத்துக்குக் கப்பல்கள் உள்ளாயின. வந்தியத்தேவனைக் காப்பாற்றுவதற்காகப் பொன்னியின் செல்வன் கப்பலிலிருந்து கொந்தளித்த கடலில் குதிக்க நேர்ந்தது. இருவரும் பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண்ணால் காப்பாற்றப்பட்டார்கள்.

நடுக்கடலில் மிதந்த போதே இளவரசன் கொடிய குளிர்க் காய்ச்சலுக்கு உள்ளானான். அவனைப் பூங்குழலியும் அவளுடைய அத்தை மகன் சேந்தன் அமுதனும் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

வந்தியத்தேவன் இந்தச் செய்தியைப் பழையாறையிலிருந்த குந்தவைப் பிராட்டியிடம் தெரிவித்தான். அதே சமயத்தில் ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு விருந்துக்கு அழைத்திருப்பதாகவும் தெரிய வந்தது. அவ்விருந்துக்குப் பெரிய பழுவேட்டரையர் நந்தினியுடன் போவதாகவும் செய்தி கிடைத்தது. இந்தச் சந்திப்பினால் ஏதாவது விபரீதம் நேரிடக் கூடும் என்று குந்தவையும் அநிருத்தரும் அஞ்சினார்கள். கூடுமானால் அந்தச் சந்திப்பைத் தடுக்கவும், தடுக்க முடியா விட்டால் ஆதித்த கரிகாலருடன் உடனிருந்து பாதுகாக்கவும் வந்தியத்தேவனை அனுப்பினார்





கள்.

வந்தியத்தேவன் அன்றிரவு திருப்புறம்பயம் கிராமத்துப் பள்ளிப்படைக் காட்டில் மற்றொரு பெரும் மர்மமான சதியைப் பற்றி ஓரளவு அறிந்து கொண்டான். அங்கே நந்தினியும் ரவிதாஸன் முதலிய மந்திரவாதிகளும் இருந்தார்கள். ஒரு சின்னஞ்சிறு பிள்ளையும் இருந்தான். அந்தப் பிள்ளையைச் சிம்மாசனத்தில் அமர்த்தினார்கள். மற்றவர்கள் அவனைச் சூழ்ந்திருந்து சபதம் எடுத்துக் கொண்டார்கள். அந்தப் பிள்ளையிடம் ஒளி வீசிய கூரிய வாள் ஒன்று அளித்தார்கள். அந்த வாளை அவன் நந்தினியிடம் கொடுத்தான். நந்தினி சபதத்தைத் தானே நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டாள்.

ரவிதாஸன் முதலியவர்கள் வந்தியத்தேவனை அங்கேயே பலி கொடுத்துவிட விரும்பினார்கள். ஆனால் நந்தினி அதைத் தடுத்தாள். அவனை அவ்விடத்திலேயே கட்டிப் போட்டு விட்டுச் சென்றார்கள். ஆழ்வார்க்கடியான் காளாமுக சைவன் வேடம் தரித்து வந்து வந்தியத்தேவனை அங்கிருந்து அழைத்துச் சென்றான்.

காளாமுகர் கூட்டத்துக்குத் தன்னந்தனியாகப் புறப்பட்ட மதுராந்தகனை வழியில் குதிரை மிரண்டு தள்ளிவிட்டுப் போய்விட்டது. மரத்தடியில் விழுந்து கிடந்த மதுராந்தகனை முதன் மந்திரி அநிருத்தர் எடுத்து அழைத்துச் சென்றார்.

குந்தவையும் வானதியும் நாகைப்பட்டினத்துக்கு அருகிலிருந்த ஆனைமங்கலத்துக்குச் சென்றார்கள். நந்தி மண்டபம் என்னுமிடத்தில் இளவரசன் அருள்மொழி வர்மனைச் சந்தித்தார்கள். நாட்டின் குழப்பமான நிலையை முன்னிட்டு இன்னும் சில நாட்கள் இளவரசன் சூடாமணி விஹாரத்திலேயே இருக்க வேண்டும் என்று குந்தவை வற்புறுத்தினாள். அவர்கள் மூவரும் கலகலவென்று சிரித்து மகிழ்வதைச் சற்றுத் தூரத்தில் கால்வாயில் படகிலிருந்த பூங்குழலி கேட்டு மனம் எரிந்தாள். சேந்தன் அமுதன் அவளைச் சாந்தப்படுத்துவதற்கு முயன்றான்.

பொன்னியின் செல்வன் கடலில் முழுகி விட்டதாகப் பரவிய வதந்தியினால் சோழ நாடு முழுவதும் அதற்கு அப்பாலும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது.

## அத்தியாயம் 1
## கெடிலக் கரையில்

திருமுனைப்பாடி நாட்டை வளப்படுத்திய இனிய நீர்ப் பெருக்குடைய நதிகளில் கெடிலம் நதியும் ஒன்று. அப்பர் பெருமானை ஆட்கொண்ட இறைவன் எழுந்தருளியிருந்த திருவதிகை வீரட்டானம் இந்த நதிக் கரையில் இருக்கிறது. சுந்தரமூர்த்தியைத் தடுத்தாட் கொண்ட பெருமான் வாழும் திருநாவலூர் இந்நதியின் அருகிலேதான் இருக்கிறது. இந்த இரண்டு க்ஷேத்திரங்களுக்கும் மத்தியில் தொண்டை நாட்டுக்குச் செல்லும் இராஜபாட்டை அந்த நாளில் அமைந்திருந்தது. இராஜபாட்டை கெடில நதியைக் கடக்கும் துறை எப்போதும் கலகலவென்று இருக்கும். நதிக்கரையில் உள்ள மரங்களில் பறவைகளின் குரல்களும் அவை இறகை அடித்துக் கொள்ளும் சத்தமும் கேட்டுக் கொண்டிருக்கும். பிரயாணிகள் அங்கே வண்டிகளிலிருந்து மாட்டை அவிழ்த்து விட்டு விட்டுக் கட்டுச் சாதம் உண்பார்கள். உண்ணும்போது அவர்கள் விளையாட்டாக வானில் எறியும் சோற்றைக் காக்கைகள் வந்து அப்படியே கொத்திக் கொண்டு செல்லும். நதியின் வெள்ளத்தில் தவறி விழும் சோற்றை மீன்கள் வந்து கொத்திக் கொண்டு போகும். இவற்றையெல்லாம் பார்க்கும் இளம் சிறார்கள் கை தட்டி ஆரவாரித்தும், 'ஆஹா!' என்று வியப்பொலிகள் செய்தும், கலகலவென்று சிரித்தும், தங்கள் குதூகலத்தைவெளியிடுவார்கள்.

ஐப்பசி மாதம் ஆரம்பத்தில் கெடில நதியில் வழக்கத்தைவிட அதிகமாகவே வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. இதனால் உச்சி வேளையில் அங்கே கட்டுச் சாதம் அருந்துவதற்காகத் தங்கிய பிரயாணிகளின் ஆரவார ஒலிகளும் அதிகமாயிருந்தன. அந்த ஒலிகளெல்லாம் அமுங்கிப் போகும்படியான ஒரு பெரும் ஆரவாரம் திடீரென்று சற்றுத் தூரத்தில் சாலையில் எழுந்தது கேட்டுப் பிரயாணிகள் வியப்புற்றார்கள். அவர்களில் சிலர் கரையிலேறிப் பார்த்தார்கள். முதலில் புழுதிப் படலம் மட்டுமே தெரிந்தது. பிறகு யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம் ஏந்துவோர் முதலிய இராஜ பரிவாரங்கள் வருவது தெரிந்தது. சிறிது அருகில் அப்பரிவாரங்கள் நெருங்கி வந்ததும் கட்டியக்காரர்களின் முழக்கம் தெளிவாகக் கேட்டது.

''பன்னிரண்டாம் பிராயத்தில் போர்க்களம் புகுந்த வீராதி வீரர், வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி, இரட்டை மண்டலத்தார் சொப்பனத்தில் கண்டு அஞ்சும் சிங்கம், தொண்டை மண்டலாதிபதி, வடதிசை மாதண்டநாயகர், மூன்று உலகமுடைய சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருமகனார், ஆதித்த கரிகால சோழ மகாராஜா வருகிறார்! பராக்!''

இடி முழக்கக் குரலில் எட்டுத் திசையும் எதிரொலி செய்யும்படி எழுந்த இந்த கோஷத்தைக் கேட்டதும் கெடில நதித்துறையில் இருந்தவர் அனைவரும் அவசர அவசரமா





கக் கரையேறினார்கள். அத்தகைய வீராதி வீரனைக் காண வேண்டுமென்ற ஆவலுடன் நதித் துறையில் நடுவில் வழி விட்டு விட்டு இருபுறமும் அவர்கள் ஒதுங்கி நின்றார்கள்.

கட்டியக்காரர்கள், எக்காளம் ஊதுவோர், பரிச்சின்னம், ஏந்துவோர் ஆகியவர்கள் முதலில் வந்து தண்ணீர்த் துறையை அடைந்தார்கள்.

பரிவாரங்களுக்குப் பின்னால் மூன்று குதிரைகள் ஒன்றின் பக்கம் ஒன்றாக வந்தன. மூன்று குதிரைகள் மீதும் மூன்று இளம் வீரர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களைத் தூரத்தில் பார்த்த போதே ஜனங்கள் அவர்களைச் சுட்டிக் காட்டி இன்னார் இன்னவர் என்று பேசத் தொடங்கினார்கள். ''நடுவில் உள்ள குதிரை மீது வருகிறவர்தான் ஆதித்த கரிகாலர்! பொற் கிரீடத்தைப் பார்த்தவுடனே தெரியவில்லையா? வெயில் படும்போது எப்படி அந்தக் கிரீடம் ஜொலிக்கிறது!'' என்றான் ஒருவன்.

''இந்தக் கிரீடத்தைப் போய்ச் சொல்லப் போகிறாயே? கரிகால் வளவன் அணிந்திருந்த மணி மகுடத்தை இவர் சிரஸில் தாங்கும்போதல்லவா பார்க்க வேண்டும்? அது கோடி சூரியப் பிரகாசமாகக் கண்கள் கூசும்படி ஜொலிக்குமாம்!'' என்றான் இன்னொருவன்.

''அது கரிகால் வளவன் கிரீடம் அல்ல, தம்பி! அப்படிச் சம்பிரதாய



மாகச் சொல்வதுதான், பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் செய்த மணி மகுடத்தைத்தான் இப்போது சுந்தர சோழர் அணிந்திருக்கிறார். இன்னும் எத்தனை நாளைக்கோ, தெரியவில்லை!'' என்றான் மற்றொருவன்.

''சுந்தர சோழரின் வாழ்நாளை இப்படித்தான் சில காலமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர் சிரஞ்சீவியாயிருப்பார் என்று தோன்றுகிறது!'' என்றான் முதலில் பேசியவன்.

''நன்றாயிருக்கட்டும். அவர் உயிரோடிருக்கும் வரையில் நாடு நகரமெல்லாம் குழப்பமில்லாமலிருக்கும்!''

''அப்படியும் சொல்லுவதற்கில்லை. பொன்னியின் செல்வனைக் கடல் கொண்டு விட்டதாகச் செய்தி வந்ததிலிருந்து சோழ நாடெங்கும் ஒரே அல்லோலகல்லோலமாயிருக்கிறதாம். எப்போது சண்டை மூளுமோ என்று அங்கிருந்து வந்தவர்கள் எல்லாம் சொல்லி வருகிறார்கள்.''

''யாருக்கும் யாருக்கும் சண்டை? எதற்காகச் சண்டை?''

''பழுவேட்டரையர்களுக்கும் கொடும்பாளூர் வேளாருக்கும் சண்டை மூளும் என்று சொல்கிறார்கள். அப்படியொன்றும் ஏற்படாமல் தடுப்பதற்காகத்தான் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சிற்றரசர்கள் கூடுகிறார்களாம். ஆதித்த கரிகாலரும் அங்கேதான் போகிறாராம்.''

''குதிரைகள் நெருங்கி வந்து விட்டன. இரைந்து பேசாதீர்கள்!'' என்று ஒருவன் எச்சரித்துவிட்டு, ''இளவரசர் ஆதித்த கரிகாலரின் முகம் எவ்வளவு வாட்டமடைந்திருக்கிறது பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''அவர் முகம் வாட்டமடைந்தில்லாமல் எப்படியிருக்கும்? ஆதித்த கரிகாலருக்குத் தம்பியின் பேரில் பிராணன். அப்படிப்பட்ட தம்பியைப் பற்றித் தகவல் தெரியவில்லையென்றால் தமையனுக்குக் கவலையிராதா?



தந்தை [illegible] மலிருக்கிறார்!''

''இதெல்லாம் உலகத்தில் இயற்கை, தம்பி! இளவரசருடைய முகவாட்டத்துக்குக் காரணம் இவையெல்லாம் அல்ல. இரட்டை மண்டலத்தார் மீது படையெடுத்துப் போக வேண்டும் என்று கரிகாலருக்கு ஆசை. அது கைகூடவில்லையே என்றுதான் கவலை!''

''அது ஏன் கைகூடவில்லை? யார் இவரைப் படையெடுத்துப் போக வேண்டாம் என்று தடுக்கிறார்கள்!''

''வேறு யார்? பழுவேட்டரையர்கள்தான்! படையெடுப்புக்கு வேண்டிய தளவாட சாமக்கிரியைகள் கொடுக்க மறுக்கிறார்களாம்!''

''ஏதேதோ இல்லாத காரணங்களையெல்லாம் கற்பித்துச் சொல்லு



அதி நவீன பட்டு வகைகள்




உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

100% உண்மையான பட்டு
உத்தரவாதமான சரிகை

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை
கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள் • இணையில்லா புதுமைகள், எண்ணிலா வகைகள்

DIPR/1766/MS88/HTA

கிறார்கள். உண்மைக் காரணம் உங்கள் ஒருவருக்கும் தெரியவில்லை'' என்றான் ஒருவன்.

''எல்லாம் தெரிந்தவனே! உண்மைக் காரணத்தை நீதான் சொல்லேன்!'' என்று இன்னொருவன் கேட்டான்.

''ஆதித்த கரிகாலர் யாரோ ஒரு பாண்டிய நாட்டுப் பெண் மீது காதல் கொண்டிருந்தாராம். இளவரசர் வட பெண்ணைப் போருக்குச் சென்றிருந்த போது பெரிய பழுவேட்டரையர் அப்பெண்ணை மணந்துகொண்டு விட்டாராம். அவள்தான் இப்போது பழுவூர் இளையராணியாக விளங்கிச் சோழ நாட்டில் சர்வாதிகாரம் செலுத்துகிறாள். அதிலிருந்து ஆதித்த கரிகாலரின் மனமே பேதலித்துப் போய் விட்டதாம்!''

''இருக்கலாம்; இருக்கலாம். உலகத்தில் எல்லாச் சண்டைகளுக்கும் யாராவது ஒரு பெண்தான் காரணமாயிருப்பாள் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா?''

''எந்தப் பெரியவர்கள், தம்பி, அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்? சுத்தப் பைத்தியக்காரத்தனம்! இளவரசர் ஒரு பெண்ணை விரும்பினார் என்றால், அவள் போய் ஓர் அறுபது வயதுக் கிழவனை மணந்து கொள்ளுவாளா? சொல்லுகிறவர்கள் சொன்னால் கேட்பவர்களுக்கு மதி இல்லையா?''

''அப்படியானால் ஆதித்தகரிகாலருக்கு இன்னும் கலியாணம் ஆகாமலிருப்பானேன்? நீர்தான் சொல்லுமே?''

''சும்மா இருங்கள்! இதோ நெருங்கி வந்து விட்டார்கள். இளவரசருக்கு வலதுபுறத்தில் வருகிறவன்தான் பார்த்திபேந்திர பல்லவன் போலிருக்கிறது. இடதுபுறத்தில் வருகிறவன் யார்? வாணர் குலத்து வந்தியத்தேவனா?''

''இல்லை; இல்லை! கடம்பூர் சம்புவரையர் மகன் கந்தமாறன். ஓலை கொடுத்து அனுப்பினால் இளவரசர் ஒருவேளை வர மாட்டார் என்று சம்புவரையர் தம் மகனையே அவரை அழைத்து வர அனுப்பியிருக்கிறார்.''

''இதிலிருந்தே, ஏதோ விஷயம் மிக முக்கியமானது என்று தெரிகிறது.''



''உன் கல்யாணப் பத்திரிகையை உன் காதலியிடம் கொடுத்தியே! என்னடா சொன்னா?''

''அருமையா இருக்கே... இதே மாதிரி தான் என் கல்யாணப் பத்திரிகையையும் அச்சிடணும்னு அச்சக விலாசம் கேட்டா...''

— மணியன் தர்மலிங்கம்.

''அந்த முக்கியமான விஷயம் இராஜரீக சம்பந்தமானதாகவும் இருக்கலாம். அல்லது கலியாண சம்பந்தமானதாகவும் இருக்கலாம். ஆதித்த கரிகாலருக்குத் திருமணம் ஆகாதிருக்கும் வரையில் சிற்றரசர்கள் அவரை வலை போட்டுப் பிடிக்க முயன்று கொண்டுதானிருப்பார்கள். முதன் முதலில் அவரை மணந்து கொள்ளும் பெண் சோழ சாம்ராஜ்யத்தின் சிங்காதனத்தில் அமரும் பாக்கியம் பெறுவாள் அல்லவா?''

மேற்கண்டவாறெல்லாம் கெடில நதிக்கரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற ஜனங்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மூன்று குதிரைகளும் வந்து தண்ணீர்க் கரையோரம் நின்றன.

குதிரைக்குப் பின்னால் வந்த ரதம் சற்று அப்பால், அரச மரத்தடியில் நின்றது. அந்த ரதத்தில் எண்பது பிராயமான வீரக் கிழவர் திருக்கோவலூர் மலையமான் இருந்தார்.

தண்ணீர்க் கரை ஓரத்தில் குதிரை மேலிருந்த வண்ணம் ஆதித்த கரிகாலன் திரும்பி அவரைப் பார்த்தான்.

(தொடரும்)

போட்டிக் கதை — 11

# இது பெண்மை அல்ல

## கோட்டை சேகர்

(அறிமுக எழுத்தாளர்)



“ராஜசேகர்...! உனக்கு என்ன ஆச்சு? நான் உன்னை எப்படியெல்லாமோ நெனச்சேன்! நீ... இவ்வளவு காலமா எங்கூடப் பழகுற நீ... இப்படி நடந்துக்குவேன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கல்லே.”

அவள் திடீரென்று தன் முகத்தில், ஓங்கி, பளீர், பளீரென்று அறைந்து விட்ட மாதிரி இருந்தது ராஜசேகரனுக்கு.

“கோமதி நீ என்ன சொல்றே! நெசமாவே உனக்கு எம்மேல் ஆசை இல்லையா? நீ என்னோட பழகினது, பேசினது எல்லாம் பொய் தானா?”

“ஆமாம்! பேசினேன், பழகினேன்; அதுக்காக இப்படி கொஞ்சம் கூடக் கண்ணியமில்லாம என் கையைப் புடிக்கலாமா?”

“நான் உன் கையைப் புடிச்சது வெறியில இல்லை. அன்புல... காதல்னால. உன்னைக் கல்யாணம் செய்துக்குற எண்ணம் இருக்கிறதுனால. என்னை நம்பு கோமதி! நீ என்னோட சாதாரணமாப் பழகி இருந்தேன்னா நான் இப்படி செஞ்சிருக்க மாட்டேன்.”

“சாரி. நான் சுவாதீனமா பழகினதை நீ தப்பா புரிஞ்சுக்கிட்டா அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? ஏற்கெனவே நான் ஒருத்தரைக் காதலிக்கிறேன். அவரையே கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவு பண்ணியிருக்கேன்.”

“நான் இதுவரையில எந்தப் பையன் கூடேயும் இப்படித் தனியா வந்ததில்லே, ராஜசேகர். உன்னோடதான் மொதல் மொதல்ல தனியே வர்றேன்...”

“தாங்க்யூ கோமதி!”

முதலில் விழுந்தது அறைகள் என்றால், இது தலையில் போட்ட இரும்புக் குண்டு. அவன் அப்படியே ஆடிப் போனான். கால்கள் வெடவெடத்து, கண்கள் சிவந்தன. மூச்சே நிணறியது. அவள் ஏதேதோ பேசி எப்படி எப்படியோ நடந்து கொண்டு, கடைசியில் இப்போது தன்னை மட்டும் மேகம் தொடுகிற மாதிரி ஓர் உயர்ந்த பீடத்தில் இருத்திக் கொண்டு, அவனைப் புழுதியில் புழுவாய் நிறுத்தி வைத்து வேடிக்கை பார்க்கிறாள். இப்போது அவன் என்ன தான் உண்மையைப் பேசினாலும், மூன்றாவது மனிதர்கள் அவனைக் கேவலமான குற்றவாளியாகத் தான் எடை போடுவார்கள், ஊரெல்லாம் “தெரியுமா? தெரியுமா! இந்தக் கோமதி கொஞ்சம் ஜாலியலாப் பழகினான்னு இந்த ராஜசேகர் போய் சட்டுனு கையைப் புடிச்சிருக்கான்!” என்று பேசப் போகிறது.

அவன் விருட்டென்று திரும்பி நடந்தான்.

“ராஜசேகர்! ராஜசேகர்!! கொஞ்சம் நில்லு!”

இனி அங்கு நிற்பதற்கு மானங்கெட்ட கழுதையல்ல அவன்.

**அ**றைக்குப் போய்க் கட்டிலில் குப்புற விழுந்தான். அவன் மனம் பாலைவனமாகப் போய்விட்டிருந்தது. அய்யோ! அன்று காலை வரையில் கூட எப்படி பசுமை கொஞ்சும் வனமாக இருந்தது அது!

என்ன என்ன வண்ண ஜாலங்கள்! எவ்வளவு மத்தாப்புகள்! வாண வெடிகள்! எல்லாம் இன்னொருவனைக் காதலித்துக் கொண்டே, அவனைத் திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்த பிறகும், ஆடிய நாடகமா? என்ன லாபம் கருதி இவள் இப்படி நாடகமாட வேண்டும்? பழைய நினைவுகள் மனத்திரையில் அலை அலையாய் எழும்பி விழுந்தன.

“**இ**ன்னைக்கு என்னோட பிறந்த நாள். பார்ட்டி கொடுக்கலைன்னு கோவிச்சுக்கக் கூடாது. இந்தச் சாக்லெட்டையே பார்ட்டியா நெனச்சுக்கோங்க” — இவன் கல்லூரியில் சக மாணவர்களுக்குச் சாக்லேட் விநியோகிக்கும் போது இவள் மட்டும் தனி உரிமை எடுத்துக் கேட்பாள்:

“என்ன ராஜசேகர், எனக்கும் இந்த சாக்லேட்தானா? ஸ்பெஷலா... ஒண்ணும் கிடையாதா? எனக்கு இது வேண்டாம்!”

“ஓ! சாரி, கோமதி. உனக்கு ஸ்பெஷலாத் தானே வேணும். ஈவினிங், கிளாஸ் முடிச் சுட்டுப் போறப்ப என்னோட வா. உனக்குப் பிடிச்சதைக் கேளு. வாங்கித் தர்றேன்.”

“**நா**ன் இதுவரையில் எந்தப் பையன் கூடேயும் இப்படித் தனியே வந்ததில்லே ராஜசேகர். உன்னோடதான் மொதல் மொதல்ல தனியே வர்றேன்.”

“தேங்க் யூ கோமதி!...”

“ஆனா பயமாயிருக்கு!”

“என்ன பயம். ஏன் பயப்படுறே?”

“நம்மளை யாராவது பார்த்துட்டா...”

“பார்த்தா என்ன...?”

“பார்த்தா என்னவா?! நம்மளைப் பத்திக் கதை கட்டி விட்டுறமாட்டாங்களா?”

“கட்டி விட்டா என்ன? ஒம் மனசுல தைரியம் இருக்குல்ல?”

“**எ**ல்லாரும் பீச்சுக்கு வந்தா சுண்டல் வாங்கி அங்கியே சாப்பிட்டுட்டுப் போவாங்க. நீ மட்டும் அதை ஹாஸ்டல் அறைக்கு எடுத்துட்டுப் போய்ச் சாப்பிடறேங்கறியே கோமதி....?”

“அறையில் வச்சுக் கொஞ்சம் கொஞ்சமா ரசிச்சுச் சாப்பிடணும்... நெனச்சுக்கிட்டே சாப்பிடணும்...

“எதை நெனச்சுக்கிட்டு?”



ஆசிரியர்: நீங்க செத்துப் போயிட்டதாப் பொய் சொல்லி நேத்திக்கு உங்க பேரன் பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போட்டுட்டான், கண்டிச்சு வையுங்க!

பையனின் தாத்தா: நீங்க செத்துப் போயிட்டதால பள்ளி விடுமுறைன்னுல்லே என்கிட்டே சொன்னான்?

— சீர்காழி சாமா.

---

"ம்..." — அவள் களுக்கென்று சிரிப்பாள். அப்புறம் சிரித்தபடி சொல்வாள்: "கடல் அலையை நெனச்சுக்கிட்டு.."

அவள் தன்னைத்தான் கடல் அலையாக உருவகம் செய்து சொல்வதாக நினைத்துக் கொள்வான் ராஜசேகர்.

"தினம் சைவம் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் போரடிக்குது ராஜசேகர். நாம இன்னக்கி அசைவம் சாப்பிடலாம். அவங்க வேணும்ன்னா சைவம் சாப்பிடட்டும்."

"எல்லோரையும் விட்டுட்டு நாம மட்டும் தனியா போய்ச் சாப்பிட்டா தப்பா நெனச்சுப்பாங்க...."

"அவங்க தப்பா நெனச்சுக்கிட்டா நெனச்சுக்கிட்டுப் போகட்டும். இப்போ நீ வர்றியா? இல்லையா? எனக்குப் பதில் மட்டும்தான் தேவை!"

"நான் எதுக்குச் சொல்றேன்னு கொஞ்சம் கேளு கோமதி. கிளாஸ்மேட்ஸோட வந்திட்டு, அவங்களை விட்டுட்டுத் தனியே போறதான்னு யோசனையா இருக்கு....."

"உனக்கு நண்பர்கள் தான் முக்கியமுன்னா அவங்களோட போ. இல்ல நான் உனக்கு வேணுன்னா என்னோட வா. என்னோட பழகுறது உனக்குப் பிடிக்கலைன்னா நீ வர வேண்டாம்."

இவன் பதில் கூற முடியாதவனாய் அவள் விருப்பப்படியே சென்று இரண்டு அரை சிக்கன் பிரியாணிக்கும், மீனுக்கும் ஆர்டர் கொடுப்பான்.

"ராஜசேகர், மீன் எப்படி இருக்கு?"

"பரவாயில்லே."

"ஏய், எச்சில் வச்சதை எடுக்காதே கோமதி...."

"எச்சில் பட்டால் என்ன? உன் எச்சிலை நான் சாப்பிடக் கூடாதா?"

அவள் இவ்வளவு தூரம் துணியும் போது யோசிக்க என்ன இருக்கிறது? இது காதல் தா.....ன்....? இருந்தாலும் மனத்தில் பயம் கூடவே எழும்பியது.

**கொ**ஞ்சம் உடம்பு சரியில்லாமல் இரண்டு நாள் காலேஜுக்குப் போகாமல் இருந்த போது, நண்பன் மதி வந்து சொன்னான். "ஏம்பா, நீ பாட்டுக்கு இங்கே படுத்துக்கிட்டே. அங்கே கோமதி வந்து எங்க ராஜசேகரைக் காணும்? ராஜசேகரைக் காணும்னு? எங்க உயிரை எடுக்குது!"

"**ரா**ஜசேகர் ஏன் என்னைப் பார்த்தாலே ஒதுங்கி ஒதுங்கிப் போற."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல கோமதி."

"நான் கொஞ்ச நாளா கவனிச்சுக்கிட்டுத்தான் வர்றேன். காலேஜ் நேரத்துக்கு டாண்ணு வர்ற. கிளாஸ் முடிஞ்சதும் உடனே வெளிய போயிடற. என்ன விஷயம்? ஏதாவது மனக் கஷ்டமா? உன் கஷ்டத்தை எங்கிட்ட சொல்லக் கூடாதா? நான் அவ்வளவு அந்நியமாவா தெரியறேன்? அவ்வளவு அந்நியமா தெரிஞ்சா, சொல்ல விருப்பமில்லைன்னா நீ சொல்ல வேண்டாம்."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே."

"சரி, வா! பேசிக்கிட்டே போகலாம்..."

கல்லூரி வளாகத்தைக் கடந்ததும் அவள் கேட்டாள்:

"நீ லவ்மேரேஜ் பற்றி என்ன நினைக்கிற?"

"லவ் பண்ணுறவங்க எல்லோரும் கல்யாணம் பண்ணிக்கிறது இல்லையே. காதலிக்கிறவங்க ஒரே சாதியா இருந்தா கல்யாணம் பண்ணிக்கறது கஷ்டமில்ல. வேற வேற சாதியாயிருந்தா பல நேரம் அது நிறைவேறாத காதலாத்தான் போயிடுது."

"இந்த இருபதாம் நூற்றாண்டுல போயி சாதி அது இதுன்னு பேசினா எப்படி ராஜசேகர்? நம்மளை மாதிரி உள்ளவங்க வழிகாட்டியா இருக்கணும். என்ன கஷ்டம் வந்தாலும் சமாளிக்கணும்."

"இதெல்லாம் பேசறதுக்குத்தான் நல்லா இருக்கும் கோமதி! நடைமுறைக்கு ஒத்து வராது."

"ஏன் ஒத்து வராது?"

"நீ கலப்புத் திருமணம் செய்துக்குவியா?"

"ஓ, ஏன் செய்துக்கக் கூடாது?"

அப்புறமும் அவனுக்குப் பயம்தான்...

**சா**த்தனூர் அணைக்கு உல்லாசப் பயணம் சென்றிருந்தனர்.

"நான் லேட்டா வந்ததுக்குக் காரணம் தெரியுமா ராஜசேகர்? உனக்காக எலுமிச்சை சாதமும், தயிர் சாதமும், செய்து எடுத்து வர நேரமாகிப் போயிருச்சு. அதான்... இந்தச் சாத்தனூர் அணை எவ்வளவு அழகா இருக்கு. இந்த அணையிலே நாம ரெண்டு பேரும் சேர்ந்து ஒரு போட்டோ எடுத்துக்குவோம்."

"அதுக்கென்ன, எடுத்துக்கிட்டா போச்சு."

"எனக்கு ரொம்ப பசிக்குது. வா சாப்பிடலாம்."

"நாம மட்டுமா...? எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாம் கோமதி."

"எல்லோரும் சாப்பிடறதுக்கு நான் கொண்டு வரல. உனக்கும் எனக்கும் மட்டும் தான் கொண்டு வந்திருக்கேன்."

— இப்படி மனத்திரையில் ஓடிய நிகழ்வுகளுடனே தூங்கிப் போனான்.

மறுநாள் காலேஜில் அவனை வழி மறித்தாள் கோமதி. "ராஜசேகர், ஒன் மினிட்...! நேத்து நான் பேசினதுக்குக் கோவிச்சுக்கிட்டியா? சாரி... என்னை மன்னிச்சுடு."

"கோமதி, நான் ஒங்கிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும். மாலை வகுப்பு முடிஞ்சதும் வெயிட் பண்ணு."

மாலையில் சந்தித்த போது "என்ன விஷயம்" என்று ஆவலுடன் கேட்டாள். அவனால் சிறிது நேரத்துக்கு ஒன்றும் பேச முடியவில்லை. கனத்த மௌனம் நிலவியது. பிறகு சொன்னான்:

"கோமதி, நேத்து நடந்ததைப் பற்றியும், நீ சொன்னதைப் பற்றியும் நான் இராத்திரியெல்லாம் யோசனை பண்ணினேன்... ஒரு விஷயம் மட்டும் உறுதி... நானா உன்னைத் தேடிக்கிட்டு வரலை. ஒவ்வொரு கட்டத்திலேயும் நீதான் என்னை இழுத்த... உரிமை எடுத்துக்கிட்டே... அது ஒனக்கே தெரியும். வகுப்பில் எல்லோருக்கும் சாக்லேட் குடுத்தப்ப நீ மட்டும் எங்கிட்ட தனிச் சலுகை கேட்டே. நீயாகத்தான் எங்கூட கடற்கரைக்கு வந்தே. நீயாகத்தான் எதையோ வாங்கிக்கிட்டு அறைக்குப் போயி நெனச்சு நெனச்சு இரசிச்சு இரசிச்சுச் சாப்பிடப் போறதாச் சொன்னே. என் தட்டுலேருந்து தயங்காம எடுத்துச் சாப்பிட்டே... பிரியம் காட்டுன. இந்தக் கட்டங்கள் எல்லாத்துலேயும் கூட ஏதனாலேயோ எனக்கு ஒரு தயக்கம் இருந்தது. அப்பொழுதெல்லாம் நான் உன்கிட்ட நெருங்க முயற்சி செய்யவே இல்ல. அப்பவும் நீ தொடர்ந்து என்கிட்ட தனி உரிமையோடதான் பழகினே... சாத்தனூர்ல போட்டோ எடுத்துக்கணும்னு சொன்னே; நமக்கு மட்டும் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறதாச் சொன்னே; கல்யாணத்தைப் பத்தி நீதான் பேச்சுக் கொடுத்தே. கலப்புத் திருமணத்துக்குத் துணியத் தயார்னு சொன்னே... இவ்வளவுக்குப் பிறகும் ஓர் இளைஞன் ஒரு யுவதி தன்னைக் காதலிக்கலேன்னு நினைப்பான்னு நீ எப்படி நெனச்சே. எனக்குத் தெரியும்! இது கூடத் தெரியாத அப்பாவி முட்டாள் இல்லே நீ... என் உணர்வுகளைத் தூண்டி விட்டு, அதை நான் வெளிப்படுத்த முயன்ற போது திமிர்னு நேத்து பத்தினி வேஷம் கட்டிட்டே. ஏன் இப்படியெல்லாம் செஞ்சே?"

அவள் மௌனமாகத் தலைகுனிந்து இருந்தாள்.

"எனக்குத் தெரியுது கோமதி. நான் முட்டாள் இல்லை... உனக்கு ஒரு குரூரமான ஆசை. உன்னை ஆராதிக்கிறதுக்கு ஒருத்தர் சுத்திச் சுத்தி வரணும். மத்தவங்க அதைப் பார்க்கணும், நீ அந்த கவனிப்பில் பெருமைப் படணும். அதுதானே உன் நோக்கம்...? இந்த விளையாட்டுக்கு நான் கிடைச்சேன். விளையாடிக் காட்டிட்டே.

"ஆனா இது ஒரு இதயத்தோட விளையாடுற விளையாட்டு கோமதி... உனக்கு ஒண்ணு சொல்றேன், நீ மறுதலிச்சதைக் கேட்டுட்டு ராஜசேகர் திரும்பிப் போயிட்டான். அது நீ செய்த புண்ணியமாப் போச்சு. ஆனா எல்லோரும் ராஜசேகர் இல்லே. இந்த விளையாட்டைப் புரிஞ்சுக்கிட்டுப் பதிலுக்குக் கத்தியை எடுக்கிறவனும் இருப்பான். எச்சரிக்கையா இரு! என்ன இருந்தாலும் கொஞ்ச நாள் நான் உன்னைக் காதலிச்சேன். அந்தப் பாவத்துக்காகச் சொல்றேன். இனிமேல் இந்த மாதிரி யாருகிட்டேயும் நடந்துக்காதே.

அவள் குனிந்தபடியே இருந்தாள்.

அவன் எழுந்து நடந்து போய்க் கொண்டிருந்தான்.

வண்ணப்படம்: கே. வி. ஆனந்த்

நடிப்பு: சுமிதா, கர்ணன்.

---

"முதன் முதலா உங்க மனைவியை ஆபீஸுக்கு அழைச்சுக்கிட்டு வந்திங்களே! ஆபீஸைப் பார்த்துட்டு என்ன சொன்னாங்க?"

"இவ்வளவு பேர் வேலை செய்யற இடத்துலே உங்களாலே எப்படி நிம்மதியாத் தூங்க முடியுதுன்னு கேட்டா!"

"காதலியுடன் ஊரை விட்டு ஓடின உங்க பையனை ஏன் "நம்பிக்கைத் துரோகி"ன்னு திட்டுறீங்க?"

"இவனுக்கு வாங்கும் வரதட்சணைப் பணத்தில் திருப்பித் தர்றேன்னு நிறைய நண்பர்களிடம் கடன் வாங்கியிருக்கேன்..."


— மணியன் தர்மலிங்கம்.







# 15



"இறங்கு" என்றான் சந்திரன், காரை நிறுத்தியவுடன்.

"இங்கேயா... டிஃபன் சாப்பிடவா?" என்று கேட்டாள் திலகா. சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டாள்.

மணல் பரப்பு. அங்கங்கே வண்ண வண்ணக் குடைகள். குடைகளுக்குக் கீழே பெஞ்சில் அமர்ந்திருந்த இளைஞர்கள். ட்ரேயைச் சுமந்தபடி குறுக்கிலும், நெடுக்கிலும் அலைந்து கொண்டிருந்த வெள்ளைச் சிறகு பேரர்கள்.

"டிஃபன், காப்பி, சாப்பாடு எல்லாமே சாப்பிடலாம்" என்றான் சந்திரன். திலகா திரும்பி அவனைப் பார்த்தாள். சந்திரன் கண் சிமிட்டினான்.

"வேண்டாங்க,. போய்டலாங்க" என்றாள் திலகா, சந்திரனின் கண்களில் தெரிந்த சிவப்பு விளக்கைப் பார்த்து.

"இந்தப் பிகுதானே வேண்டாங்கறது..." சந்திரன் கதவைத் திறந்து இறங்கினான். வெளியிலிருந்தபடி கையை உள்ளே நீட்டி அவள் கையைப் பற்றி வெளியே இழுத்தான்.

"கம்மான் திலகா..."

திலகா வெளியே மணல் வெளியில் வந்து விழப் பார்த்து, சமாளித்து நின்றாள்.

தூரத்தில் ஓலை வேய்ந்த காட்டேஜ்கள் முனிவர்களின் ஆசிரமங்கள் போல் சற்றுத் தள்ளித் தள்ளி அமைந்திருக்க, திறந்திருந்த ஒரு காட்டேஜின் முன்னறையில் ஈஸிசேர் தெரிந்தது. ஈஸிசேரில் 'டூ-பீஸு'டன் படுத்திருந்த ஒரு பெண் தெரிந்தாள்.

"வா" என்று சந்திரன் அழைத்த போது, திலகா ஒருவித பிரமிப்புடன் நடந்தாள்.

ரிசப்ஷனில், ரிஜிஸ்டரில் சந்திரன் — திலகா, கணவன்—மனைவி என்று எழுதினான். அலட்சியமாகச் சில நூறுகளை எண்ணி, கவுண்டரின் மீது வைத்தான். கவுண்டர் மீதிருந்த நிர்வாணப் பெண் சிலையை ரூபாய் நோட்டுகள் மீது பறக்காமல் இருப்பதற்காக வைத்தான். காட்டேஜ் சாவியைப் பெற்றுக் கொண்டான்.

திலகாவை மணல்வெளியில் நடத்திச் சென்றான். காட்டேஜின் கதவைத் திறந்தான். உள்ளே நுழைந்தான். தரையில் கார்ப்பெட். சோஃபா. திரை. சுவிட்சைத் தட்டியவுடன் எங்கோ ஒளிந்து கொண்டிருந்த விளக்கு மிகச் சன்னமாக, மிகப் போதையாக வெளிச்சத்தை ஏற்படுத்தியது.

சந்திரன் அடுத்த அறை வாசலில் இருந்த திரையை விலக்கி, திலகாவை அந்த அறையில் தள்ளினான்.

இரட்டைக் கட்டில். ஃபோம் மெத்தை. சுவரில் சில கஜுராஹோ படங்கள். வழிந்த வெளிச்சம். அறையில் தெளிக்கப்பட்டிருந்த ரூம்—ஸ்ப்ரேயரின் வாசனை திலகாவை எங்கேயோ அழைத்துப் போவது போல் இருந்தது.

"போய்டலாம் சந்திரன்.. ப்ளீஸ்... போய்டலாம்..."

"போலாம். போலாம். போகாம இங்கயேவா இருக்கப் போறோம்?"

சந்திரன் டெலிஃபோன் ரிசீவரை எடுத்து, "இரண்டு லார்ஜ்" என்று ஏதோ ஒரு திரவத்தை ஆர்டர் செய்தது பாத்ரூமில் முகத்தைக் கழுவிய திலகாவின் காதில் விழுந்தது. "சிக்கன் ஸிக்ஸ்டிஃபைவ்" கேட்டது.

திலகா வாழ்நாளில் ஒருமுறைகூட இந்த மாதிரியான சௌகரியத்தைப் பார்த்ததில்லை. தரை எவ்வளவு மெத்! பாத்ரூமில் மாட்டப்பட்டிருக்கும் கண்ணாடி எவ்வளவு பளிச்!

"திலகா!" என்று சந்திரன் அழைப்பது கேட்டது.

ஒரு பயத்துடன், ஓர் எதிர்பார்ப்புடன்,

சுபா

ஒரு சந்தோஷத்துடன், ஒரு ஜுரத்துடன் திலகா பாத்ரூமை விட்டு வெளிப்பட்டாள்.

சந்திரன் நீட்டிய டம்ளரை வாங்கினாள்.

''வேண்டாம் சந்திரன்'' என்றாள்.

''ப்ளீஸ்... திலகா... வாழ்க்கையில எப்ப வாவது ஒரு தடவைதான் சந்தோஷம் நம் மளைத் தேடி வரும்... அப்ப அதை உதறிட் டோம்னா மறுபடி எப்ப வரும்னு நமக்கே தெரியாது... வா...''

திலகா டம்ளரின் விளிம்பில் உதட்டைப் பொருத்தினாள்.

சந்திரன் ஏதோ ஒரு ஸ்விட்சைத் தொட் டான்.

அறையின் ஒரு மூலையிலிருந்து கிடாரின் அடிநரம்பு சுண்டப்பட்டு, சங்கீதம் வெடித் தது. மேற்கத்திய சங்கீதம். டிரம்கள் அதிர்ந் தன. ஆயிரம் வயலின்கள் ஆழத்திலிருந்து தொடங்கி மலையுச்சிக்குச் சென்று விரிட் டின.

திடும். திடும். திடும். தட. தட. திடுதும். திடுதும். தடதட தம்.

திலகா மெல்ல மெல்ல நழுவினாள். அந்த அறையிலிருந்து. இந்த உலகில் இருந்து.

'ஸம் டைம்ஸ் ஐ ஃபீல் லைக் எ மதர் லெஸ் சைல்ட்... ஓ...'

'ஸம் டைம்ஸ் ஐ ஃபீல் லைக் எ மதர் லெஸ் சைல்ட்...'

திலகா செத்துப் போன அம்மாவை நினைத்துக் கொண்டாள். அருகில், வெகு அருகில் தெரிந்த சந்திரனின் முகத்தைப் பார்த்தாள்.

விலகுவதாக நினைத்துச் சந்திரனை இன் னும் நெருங்கினாள்.

சந்திரன் சிரித்தான். ஜெயித்துவிட்ட சிரிப்பு.

''**பா**க்—அப்'' என்றான் ஸ்ரீநாத்.

செட்டில் இருந்த உதவியாளர்கள் ஆசு வாசப் பெருமூச்சுகளை விட்டுப் புறப்படத் தயாரானார்கள்.

ஸ்ரீநாத், பிருத்விராஜின் தோளை உரிமை யுடன் தட்டினான். உதட்டில் பொருந்தி இருந்த சிகரெட்டுடனும், சுழல் சுழலாய் அது விட்ட புகையுடனுமே அவன் பேசி னான்.

''இந்த மாதிரியே ஷூட்டிங் நடந்து, சென்ஸாரிலயும் கை வைக்கலேன்னா படம் நிச்சயமா நூறு நாள் பிருத்வி'' என்றான்.

ஷில்பா அவர்கள் இருவருக்கும் எதிரே வந்து, ''நான் கௌம்பட்டுமா சார்?'' என் றாள். ஸாரியில் இருந்தாள். எளிய மேக்அப். மதுமதியின் சோகம் ஷில்பாவின் முகத்தி லும் வந்து தங்கிவிட்ட மாதிரியான முகத்து டன் இருந்தாள்.

பிருத்விராஜை அந்த முகம் சந்தோஷப் படுத்தியது. கடைசி வரை இவளுக்கு முகம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று விரும்பினான்.

''நாளைக்கு விடிகாலையில் வந்துடு ஷில்பா'' என்றான் பிருத்விராஜ்.

''சரி'' என்றாள். 'அப்பா' என்று திரும்பி ஜுபிடர் ரத்தினத்தை அழைத்தாள்.

ஜுபிடர் ரத்தினம் செட்டுக்கு வெளியே இருந்த ஆஃபீஸ் அறை டெலிஃபோனில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். ரிசீவருக்கு அந்தப் பக்கம் நிச்சயம் ஏதோ பெரிய புள்ளி யாக இருக்க வேண்டும். கூனிக்குறுகி, சிரித் துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

ரிசீவரில் மவுத் பீஸை மூடிக் கொண்டு ஷில்பாவைப் பார்த்தார்.

''பாப்பா... கொஞ்சம் இரு'' என்றார்.

மேலும் ஒரு நிமிஷம் டெலிஃபோனில் பேசி விட்டு ரிசீவரை வைத்தவர் புயல் வேகத்தில் திரும்பினார்.

''பாப்பா... நீ ஆட்டோல வீட்டுக்குப் போ. நான் அப்புறம் வரேன். நான் ஒரு முக்கியமான புள்ளியைப் பார்த்துட்டு வரேன்...''

ஷில்பாவின் பதிலுக்குக் கூடக் காத்திரா மல் ஜுபிடர் ரத்தினம் திரும்பினார்.

ஷில்பா திடீரென்று காட்டில் தனியாக விடப்பட்ட கன்றுக்குட்டி போல் உணர்ந் தாள். பிருத்விராஜ் பக்கம் திரும்பினாள்.

''எங்கூட கொஞ்சம் தொணைக்கு வர்றீங் களா பிருத்வி?''

**ஆ**ட்டோவில் ஷில்பாவின் பக்கத்தில் உட்கார்ந்த போது உள்ளுக்குள் பிருத்வி ராஜிற்குக் கிளுகிளுப்பாக இருந்தது.

''நேரா வீட்டுக்குப் போய்டலாமா பிருத்வி?''

''பின்னே?''

''ஏதாவது ஒரு ஹோட்டலுக்குப் போவோமே... எனக்குப் பசிக்குது.''

''நீ இப்படி ஏதாவது சொல்லமாட்டி யான்னு நான் எதிர்பார்த்துக்கிட்டே இருந் தேன்''

''எதுக்கு...?''

''மதுமதி அப்புறம் என்ன ஆனான்னு நீ தெரிஞ்சிக்க வேணாமா. நீ அவளைப் பத்தித் தெரிஞ்சிக்கிட்டா படம் பண்றப்ப மதுமதி மூடுல இன்னும் நல்லா ஃபிட் ஆக முடியும் ஷில்பா.''

''நான் ஹோட்டல்னு சொன்னதே மதுமதியைப் பத்தி மேல தெரிஞ்சிக்கத்தான் பிருத்வி'' என்றாள் ஷில்பா.

**ம**துமதி நிதானமாய் மூச்சை உள்ளுக் கிழுத்து, மெதுவாய் வெளிவிட்டாள்.

கல்யாணம் செய்து கொள்ள வேண்டு மாம். எல்லாம் உடனே சரியாகிப் போகு மாம்.

என்ன கொடூரமான எண்ணம்? சிவா வின் நினைவுகளிலிருந்து பிய்த்து எடுக்கப் பட்டு இன்னொருவனுக்குத் தலைகுனிய முடியுமா?

'நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா? இது எப்படியம்மா சரியாப் போகும்? என்னைக் கட்டிக்கிறவன் ஆம்பிளைத் துணை வேணு மேன்னு நம்ம வீட்டோடவே இருந்துடு

வானா? என்னம்மா சொல்ற நீ?''

''எங்களை விடு. உனக்காவது ஒரு துணை கிடைக்குமில்ல. எந்தப் பயலும் வாலாட்ட மாட்டானில்ல. யோசிச்சுப் பாரு.''

''ஏம்மா நான் சிவாவைத் தவிர இன்னொருத்தனை நெனைச்சுக் கூடப் பார்ப்பேன்னு நீ எப்படி நெனைக்கலாம்? நான் எப்படியும் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்ல. தனியா இருந்தா வம்புன்னு, சுய நலத்தோடதான் இப்ப உங்ககூட இருக்கேன்னு வச்சிக்கயேன். என்னை விட்டா உங்களுக்கு யாரு இருக்காங்க? உங்களை விட்டா எனக்கு யாரு இருக்காங்க?''

''மது நான் சொல்றதை நீ புரிஞ்சிக்கவே மாட்டேங்கறியே. மூணு பேரும் பொம்பிளைங்களா வீட்ல இருக்கோமேன்னு எனக்குப் பயமா இருக்குது. ராயப்பேட்டையிலாவது சுத்தி நாலு குடித்தனம் இருந்தது. இங்க என்னவோ தனியா ஒரு மூலைல கெடக்கோம்.''

''பயப்படாதேம்மா. நான் இருக்கிற வரைக்கும் உனக்கு ஒண்ணும் ஆகாது.''

ஆனால் அன்றைக்கு மாலையே பயப்படுகிற மாதிரி காரியம் நடந்தது.

திருவான்மியூரில் திடீரென மழை பிடித்துக் கொண்டது. வழியில் ஒதுங்க இடமில்லாமல் எலும்பு வரை நனைந்து போனாள் மதுமதி. உடம்போடு ஒட்டிக் கொண்ட பருத்திப் புடைவையில் இருந்து இன்னமும் நீர் வடிந்து கொண்டிருந்தது. துணைக்கு வந்திருந்த சந்துருவும் தெப்பலாய் நனைந்திருந்தான்.

பஸ்ஸில் ஏறி அடையாறில் இறங்கிய போது பஸ் ஸ்டாப் இருளில் விழித்துக் கொண்டிருந்தது.

மழையும் காற்றுமாய் ஆக்கிரமித்த பிரதேசத்தில் நினைத்துக் கொண்ட மாதிரி தெரு விளக்குகளும் கண் மூடியிருந்தன.

மதுமதி பஸ்ஸிலிருந்து இறங்கியவுடன் சுற்றிலும் இருந்த இருட்டைப் பார்த்து மிரண்டாள்.

''சந்துரு'' என்று பஸ்ஸில் எட்டிப் பார்த்து அழைத்தாள்.

சந்துரு அவசர அவசரமாய் இறங்கினான்.

''என்ன மது?''

''வீடு வரைக்கும் வாயேன். ஒரே இருட்டா இருக்கு. சந்தில் சாராயக் கடை வேற இருக்கா. அவனவன் குடிச்சிட்டுப் புரண்டு கிடப்பான்.. ரொம்ப லேட்டாயிட்டது இல்ல?''

பெருமழை மாறி மெலிதாய்த் தூறல். பெய்த மழையின் பிரவாகத் தண்ணீரை வடித்துக் கொள்ள வசதியற்ற சாக்கடைகள் குப்பை அடைந்து கிடந்தன. சாலையோரம் கணுக்காலுக்கும் மேலே நெளிகிற நீர்ப் பரப்பு. புடைவையைச் சற்று மேலே தூக்கிப் பிடித்து, மதுமதி முன்னே நடக்க, சந்துரு மெல்லப் பின்தொடர்ந்தான். வீடுகளில் கூட மின்சாரம் இல்லை. அங்கங்கே மெழுகுவர்த்திகள் ஜன்னலோரம் வெளிச்சம் சிந்தியிருந்தன.


''டாய்...'' என்று ஒரு குரல் பிரதேசத்தை உலுக்கி எடுத்தது.

மதுமதி 'ஹக்' என்று மூச்சைப் பிடித்தாள்.

ஒரு கை அவளைப் பற்றியது.

மதுமதி 'வீல்' என்று அலறினாள்.

(தொடரும்)



''கைரேகை நிபுணரை எப்பங்க பார்க்க முடியும்?''

''அவர் சொந்தப் பிரச்னை காரணமாக என் கணித நிபுணரைப் பார்க்கப் போயிருக்கார். நாளைக்கு வந்து பாருங்க.''

— ராஜம் ஸ்ரீனிவாசன்.

நிருபர்: உங்களைச் சமீபத்தில் நெகிழ வைத்த நிகழ்ச்சி எது?

நடிகை: நீங்க என்னை ஞாபகம் வைத்திருந்து பேட்டி காண வந்தது தான்...

— மணியன் தர்மலிங்கம்.





# எப்படி முடிகிறது...?

ரிஷபன்

காப்பி டம்ளருடன் எதிரில் வந்தவளைப் பார்த்தான். காலையில் போட்டு விட்டுப் போன சண்டை நினைவில் வர, மனம் குறுகுறுத்தது.

"...ஏங்க லேட்... பஸ் கிடைக்கலியா?"

"...ம்..."

கைப் பையை வாங்கி உரிய இடத்தில் வைத்தாள். மின்விசிறி சுழல ஆரம்பித்தது.

"ப்பா..." என்று ஓடி வந்தாள் ரேணு. "நாதான் ஸ்கூல்ல ஃபர்ஸ்ட். பிராகிரஸ் ரிப்போர்ட் வந்திருக்கு...!"

"...அப்படியா...? வெரிகுட்..!" என்றவனுக்கு மீண்டும் மனத்தில் சிலிர்ப்பு.

அவள்தான் பொறுமையாகச் சொல்லிக் கொடுத்தாள். வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு, தன்னையும் கவனித்து... ச்சே.. இன்று ஏனோ மனத்தில் ஒரேயடியாகக் குற்ற உணர்வு அலைபாய்கிறதே...

இன்று கொஞ்சம் அதிகமாகவேதான் சத்தம் போட்டு விட்டான். சுபாவமாகவே பொறுமை கிடையாது அவனுக்கு. இன்று காலை அளவு மீறிய எரிச்சல் வேறு. அதிர்ந்து போய் நின்றவளிடம் 'ஸாரி' என்று சொல்லக் கூடத் தோன்றாமல் வெளியேறிப் போய் விட்டான்.

'ஆபீஸில்தான் வேலையே ஓடவில்லை. இப்போதெல்லாம் ரொம்பத்தான் பொறுமை இழந்து விடுகிறேன்...' என்று மனசுக்குள் ஒரே உறுத்தல்.

சாயங்காலம் எப்போது வரும் என்ற தவிப்புடன் காத்திருந்தான். ஆனால் வீடு திரும்பினதும் ஏனோ பேய் மனசு மீண்டும் முருங்கை மரம் ஏறிக் கொண்டது. 'எப்படித் திடீரென மனைவியிடம் மன்னிப்பு கேட்பது... கௌரவம் என்ன ஆவது...'

"...இங்கே பாரு... ஃபர்ஸ்ட் ரேங்க்..." என்று மீண்டும் ரேணு அவனை இழுத்தாள்.

பரீட்சை சமயத்தில் அவளுக்கே உடம்பு சரியில்லை. இருமலும் வேறு சேர்ந்து கொண்டது.

"நான் அப்பாகிட்டே சொல்லிக்கிறேம்மா..." என்றாள் ரேணு.

"...பாவம்டி... இப்ப ஆபீஸ் டயம்... டயர்டா இருப்பார்.. நானே சொல்லித் தரேன்..." என்று அவனை [illegible]லிக் கொடுத்தா[illegible]

"என்னப்பா.." எ[illegible]ன் ரேணு.

[illegible]கத்தில் மலர்ச்சி[illegible] பாவமழைத்துக் கொண்டான். ரேணுவின் கன்னத்தில் தட்டி முத்தமிட்டான். குழந்தை சந்தோஷத்துள்ளலுடன் ஓடிப் போக, திரும்பி அவளைப் பார்த்தான்.


"...போஸ்ட்.. ஏதாவது?"

உள்ளே போய்த் திரும்பினாள். தயங்கி வருவதைக் கண்டதும் புரியவில்லை அவனுக்கு. அருகில் வந்து அவனிடம் கொடுத்ததும்தான் உறைத்தது. பதினொரு கவர்கள். அவ்வளவும் திரும்பிய கதைகள்!

மனத்தின் தெம்பு முழுவதும் ஒட்ட வடிந்து விட்டதைப் போல உணர்ந்தான்.

ஒரே நாளிலா? அவ்வளவுமா? எவ்வளவு நம்பிக்கையுடன், ஆசையுடன் எழுதி.. கைவலிக்கப் பிரதி எடுத்து... இப்படி ஒட்டு மொத்தமாகவா திரும்ப வேண்டும்...?

அருகில் நெருங்கினாள். தோளில் கை



வைத்தாள். சற்று நேரம் பேசாமலிருந்து விட்டு அப்படியே போய் விட்டாள்.

இரவு மணி பதினொன்று.

கடைசி வரியை எழுதி, பேனாவை மூடினான். கதை மனத்துக்குப் பிடித்த மாதிரியே வந்து விட்டது. சாயங்காலத்துச் சுமை அகன்று லேசாகி விட்டிருந்தது. உள்ளூர ஒரு பரவசம் கூட உணர்ந்தான். கவரில் வைத்து ஒட்டினான்.

ரேணு தூங்கிப் போயிருந்தாள். ட்யூப் லைட்டை அணைத்து விட்டு, நைட் லாம்பை ஒளிர விட்டான். அந்த ஒளி மாற்றம் உள்ளுணர்வை உந்த அவள் எழுந்து போய்ப் பால் எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள்.

''.. இன்னுமா தூங்கலே?'' என்றான்.

''...ம்...

''...வந்து... ஸாரிம்மா...! எப்படிச் சொல்வது'' என்று அவன் வார்த்தைகளைத் தேடினான். அவள் புரிந்து கொண்டாள்.

''ச்சீ...'' என்றாள்.

அவள் ஸ்பரிசம் இதமாக இருந்தது. எப்போதும் போல.

''...எனக்கு ஆச்சரியமா இருக்கு.. உன் மேல பொறாமையாக் கூட இருக்கு... எப்படி உன்னால் முடியுது..? நான் எவ்வளவு அநாகரிகமா நடந்துக்கிட்டாலும், ஒரே மாதிரி பிரியம் காட்ட... ச்சே... நான் ரொம்ப கடுமையாப் பேசிடறேனே...'' என்றான் தவிப்புடன்.

''...எனக்கும் அதே ஆச்சர்யம்தான்...'' என்று சிரித்தாள்.

''உங்களால் மட்டும் எப்படி முடியுது.. இன்னைக்குத்தான் பதினொரு கதை திரும்பியிருக்கு... இன்னைக்கு ராத்திரியே இன்னொரு கதை எழுதிட்டீங்களே!?''

புரிந்தது! நேசிக்கிற ஒன்று எவ்வளவு சோதித்தாலும் விடாமல் பிரியம் காட்டத்தான் முடியும். அதுதான் இயல்பு. அதுதான் நிஜமான நேசம். அவளுக்கு அவன் மீது அது வாய்த்திருக்கிறது.

நெகிழ்ந்தவனாய்த் தன்னோடு அவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

---



அரசன்: மந்திரியாரே! நமது அரண்மனை 'கணக்குப் பிள்ளை' செய்த குற்றம்தான், என்ன...?

மந்திரி: நேற்றுப் பெய்த இயற்கை மழையைச் 'செயற்கை மழை' என்றதுடன் அதற்கான செலவென்று கணக்கெழுதிப் பணத்தைச் சுருட்டிவிட்டார், மன்னா!

— ஆர். வசந்தகுமார்.

---

ஐயா சாப்பாட்டு ராமர்களே...!

விருந்து சாப்பிடப் போகிறவர்கள், விருந்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் வயிற்றைச்சரிப்படுத்திவைத்துக்கொள்ள வேண்டும். எப்படி? விருந்துக்கு முன் லெமன் ஜூஸ் ஒரு தம்ளர் சாப்பிட்டு விட்டு விருந்து சாப்பிட வேண்டும். இத னால், பலமான விருந்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை வயிறு அடைகிறது. அதன் பிறகு விருந்தில் உட்கார்ந்தால் ஒரு 'பிடி' பிடிக்கலாம்.

— பனிமலர்.



---




''உங்க கடையில் புடவை வாங்கினா என்னமோ இலவசமாத் தருவதாச் சொன்னாங்களே, என்ன அது...?''

''ஒவ்வொரு புடவையோடும் அதே கலர்ல சாயப்பவுடர் இலவசமாகக் கொடுக்கிறோம்...''

— ரம்யசேகர்.

# உயர்தரம்! அதுவே வீனஸ் அமைப்பின் மந்திரம்!




**சென்ற 27 ஆண்டுகளாக முன்னணியில் நிற்கிறது வீனஸ் வாட்டர் ஹீட்டர்...**

**உள் இணைந்த தரம் :**
(Built-in Quality)
பல குறைந்த விலை வாட்டர் ஹீட்டர்களைப்போல் பலவேறு இடங்களில் வாங்கிய உறுப்புகளை ஒன்று சேர்த்து உருவாக்காமல், தேவையான பாகங்களைத் தாமே தயாரித்து தரமுடன் அளிப்பது வீனஸ். அதனால்தான் 10 முதல் 50 லிட்டர் வரை உள்ள எல்லா மாடல்களுக்கும் ISI முத்திரை பெற்றுள்ளது. பழுதற்ற, நீண்ட கால உன்னத உழைப்பை அளிப்பது வீனஸ்.

**உள் இணைந்த பாதுகாப்பு :**
(Built-in Safety)
வீனஸில் 'ஃப்யூஸிபின் ப்ளக்', 'பிரஷர் ரிலீஸ்', 'வேக்வம் ரிலீஸ் வால்வு'- போன்ற பாதுகாப்பு அம்சங்கள் தொழிற்சாலையிலேயே பொருத்தப் படுகின்றன. இவை முழு பாதுகாப்பை அளிக்கின்றன. இதர வாட்டர் ஹீட்டர்களில் இந்த அம்சங்கள் இரண்டாம் பட்சமாக, தனியாகப் பொருத்தப்படுகின்றன.

IS : 2082

**அனுபவத்தில் விளைந்த திறமை :**
27 ஆண்டு கால தொழில் அனுபவம் வீனஸ் தயாரிப்பை மெருகேற்றுகிறது.

**சேவையில் உயர்வு :**
நாடெங்கிலும் பரவியுள்ள வீனஸ் விற்பனை நிலையங்கள், விற்பனைக்குப்பின் ஏற்படும் தேவையான சேவையை திறமையுடன் உடனடியாக கவனிக்கின்றன.

**தேவைக்கேற்ற ரகங்கள் :**
உங்கள் தேவைக்கேற்ப நீள வாட்ட மாடல், குறுகிய மாடல், அகலவாட்ட மாடல்கள் 10, 25, 35, 50, 70, 100 லிட்டர்கள் அளவில் உள்ளன.

**என்றும் முன்னணியில் உள்ளது – வீனஸ்.**

## வீனஸ்
## வாட்டர் ஹீட்டர்

தயாரிப்பு மற்றும் விற்பனை :
**ஸ்டாண்டர்ட் எலக்ட்ரிக் அப்ளையன்ஸஸ்**
**மத்திய மார்க்கெடிங் ஆபீஸ் :**
S-2, கிரீன் பார்க் எக்ஸ்டென்ஷன், புதுடெல்லி 110 016.

**தலைமை அலுவலகம் & தொழிற்சாலை :**
தூத்துக்குடி, தமிழ்நாடு.
கிளைகள் : சென்னை • பெங்களூர் • கல்கத்தா • பம்பாய்.

ADWAVE/SEA/3603 TAM

# 8

## தொடுவான

அன்று காலை எழுந்த உடனே யே குடியிருக்கிற வீட்டின் சொந்தக்காரர் வந்திருந்தார். முதல் தேதியானால் ராதிகா ஆபீஸிலிருந்து வாடகை செக் நேராக அவருடைய வீட்டிற்குப் போய்விடும். அதனால் வாடகை வசூலிக்கக் கூட இப்போதெல்லாம் அவர் வருவதில்லை. இன்று வந்திருப்பது ஆச்சரியமாக இருந்தது.

"வாங்க சார்... சௌக்கியமா?" என்றபோது, அவர் சொன்ன செய்தி சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கிறாராம். வருகிற மாதம் இருபத்தி மூன்றாம் தேதி கல்யாணமாம். மாம்பலத்தில் சத்திரம் கூடப் பார்த்தாயிற்றாம். எல்லாச் செலவையும் சரிக்கட்டக் கையிலுள்ள பணம் போதவில்லையாம். ஒரு ஐயாயிரம் ரூபாய் துண்டு விழுகிறதாம். அதைக் கொஞ்சம் கொடுத்து உதவினால் சௌகரியமாக இருக்கும் என்றார். இல்லாவிட்டால்— அவளால் முடியாத பட்சத்தில் வீட்டைக் காலி செய்தால் அடுத்து வரப் போகிற குடித்தனக்காரரிடமிருந்து அட்வான்ஸ் தொகையாக அதைப் பெற்று விடுகிற உத்தேசத்தில் இருப்பதை அவர் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகச் சொன்னதும் ராதிகாவுக்குப் பகீரென்றது.

ஐயாயிரம் ரூபாய்!

அதற்கு எங்கே போவது என்று தெரியவில்லை. நகை எதையாவது வைத்தோ அல்லது விற்றோ வாங்கலாமென்றாலும் அந்த அளவுக்கு எந்த நகையுமில்லை. அவள் போட்டுக் கொண்டிருக்கிற கால் சவரன் காதுத் தோட்டிற்கும், அம்மாவின் வெள்ளைக் கல் தோட்டிற்கும் யாரும் ஐயாயிரம் தர மாட்டார்கள். அதைத் தவிர கழுத்துச் சங்கிலி, கைவளை என்று ஒரு குந்துமணித் தங்கம் கூட வீட்டில் கிடையாது. அந்தப் பணத்திற்கு என்ன செய்வது, யாரிடம் கேட்பது? வேறு வீடு கிடைப்பது ஒன்றும் சுலபமில்லை. அதற்காக அலையவும் அவளால் முடியாது. இத்தனை பாதுகாப்பான தகுந்த வீடு கிடைக்கும் என்கிற நிச்சயமில்லை. அப்படியே கிடைத்தாலும் இவர் கேட்கிற மாதிரி அந்த வீட்டின் சொந்தக்காரரும் இதே தொகையை அட்வான்ஸாகக் கேட்கக் கூடும். இதைவிட அதிகமாகவும் கேட்கலாம். இந்தப் பணத்துக்கே வழி தெரியாத போது அதற்கு எங்கே போக முடியும்...?

அதனால் வீட்டைக் காலி செய்கிற உத்தேசமில்லை என்றும் இன்னும் ஒரு வாரத்தில் எப்படியாவது பணத்தைப் புரட்டித் தருவதாகவும் கூறி அவரை அனுப்பி வைத்தாள். அவர் போனதும் பாட்டி கேட்டாள்:

"ப ண த் து க் கு என்ன செய்யப் போறே...?"

"பார்க்கலாம் பாட்டி... ஏதாவது வழி பிறக்கும்..." என்றாளே தவிர அவளுக்கும் அதே கவலை இருந்தது. அதில் அன்று முழுதும் ஆபீஸில் வேலை செய்ய முடியாமல் கவனம் சிதறிப் போயிற்று.

அதைக் கவனித்து விட்ட கார்த்திக் கேட்டான்.

"வாட்ஸ் ராங்...? ஏன் என்னவோ மாதிரி இருக்கே...?"

மனத்தை உறுத்திக் கொண்டிருந்த கவலை சட்டென்று வார்த்தைகளாக வெளிவந்தது.

"ஒண்ணுமில்லே சார்.... குடியிருக்கிற வீட்டின் சொந்தக்காரர் வீட்டைக் காலி பண்ணச் சொல்றார்..."

...இவள் நிலைமையை விளக்கினதும் அவனது முகத்திலிருந்த கவலைக் கோடுகள் மறைந்தன. உதட்டில் லேசான சிரிப்பு ஓட, கேலி செய்கிற குரலில் சொன்னான்.

"அப்பா... இவ்வளவுதானே...? இதுக்கா இப்படி முகத்தை வைச்சுக்கிறது... ஆஃப்டர் ஆல் ஐயாயிரம்ரூபாய்தானே...? தேவைப்பட்டா நான் உதவி பண்றேன். என்கிட்டே கேட்கச் சங்கடப்பட்டுண்டு பேசாமல் இருந்துடாதே... என்ன...?"

சடாரென்று ராதிகாவின் பார்வை உயர்ந்தது. ஒரு வினாடி மனசு சுணுங்கிப் போயிற்று. முள் தைத்த மாதிரியான வலி கூட ஏற்பட்டது.

இந்தப் பதில் அவள் எதிர்பார்க்காதது. 'ஐயாயிரம் ரூபாய்தானே... நான் தருகிறேன்...' என்பதுதான் அவள் எதிர்பார்த்தது. அல்லது 'கம்பெனியைத் தரச் சொல்கிறேன். வீட்டு வாடகையில் பிடித்துக்கொள்ளலாம்' என்பதாவது கடைசிப்பட்ச பதிலாக வரும் என்று நினைத்தாள். ஆனால் அதற்கெல்லாம் மாறாக — 'தேவைபட்டால் கேளு' என்கிறானே!

உடனே மனது சடாரென்று ராம்குமாரை நினைத்துக் கொண்டது. அவனாக இருந்தால் உடனே தன் சேமிப்புத் தொகையிலிருந்து ஐயாயிரத்திற்கு 'செக்' எழுதித் தந்திருப்பான். 'நீ அங்கெல்லாம் போக வேணாம்...' என்று கூறி, தானே ஓடிப் போய் அதை வீட்டுக்காரரிடம் தந்துவிட்டு வந்திருப்பான்...

ஆனால் இவன்...

'உன்னால் அந்தப் பணத்தைக் கொடுக்க முடியவில்லை என்றால் என்னிடம் கேள் தருகிறேன்...' என்கிறான்.

அவன், அவள் மனத்தில் ஓடுகிற எண்ணங்களைப் புரிந்து கொள்ளாதவனாகவே கேட்டான்.

"என்ன ராதிகா...? can you manage...?"

அவளுக்குள் — எங்கோ அடி மனத்தில் —

இந்துமதி

அவளுக்கே தெரியாமல் புதைந்து கிடந்த அந்த 'நான்' தலைதூக்கிற்று. என்ன ஆனாலும் இவனிடமிருந்து பணம் வாங்கக் கூடாது என்பதில் தீர்மானப்பட்டவளாக அழுத்தமான குரலில் பதில் சொன்னாள்.

ஓ. எஸ்... ஐ கேன் மானேஜ் சார்... ப்ளீஸ் டோண்ட் பாதர்..."

அவன் முகம் சட்டென்று பிரகாசித்தது. அவளது பதிலின் அழுத்தமும், வேகமும் நெஞ்சில் பதிந்தன. ஒரே வார்த்தையில் 'ஐயாம் கிளாட்...' என்பதோடு அந்த விஷயத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.


ஆனால் ராதிகாவினால் அத்தனை சுலபமாக அதற்கு முற்றுப்புள்ளியிட முடியவில்லை. இரண்டு நாட்கள் மன உளைச்சலுடன் தவித்துவிட்டு மூன்றாம் நாள் காலையில் இந்த வேலையை வாங்கித் தந்த கோடி வீட்டு மாமாவைத் தேடிப் போனாள். தயங்கித் தயங்கி விஷயம் முழுவதையும் சொல்லி மெதுவாகக் கேட்டாள்.

...இந்தச் சந்தர்ப்பத்துல இந்தப் பணத்தைத் தந்து உதவினீங்கன்னா மாசா மாசம் கொஞ்சம் கொஞ்சமா திருப்பித் தந்து உங்க கடனை அடைச்சுடுவேன் மாமா...

"அவ்வளவுதானே...? அதுக்கு ஏன் இப்படி கூனிக் குறுகிப் போறே...?" என்றவாறு எழுந்து உள்ளே போனார் அவர். நூறு ரூபாய் நோட்டுகளாக ஒரு கட்டு கொண்டு வந்து தந்து, "எண்ணிப் பாரு..." என்றார். இவளால் எண்ண முடியவில்லை. எண்ணத் தோன்றவில்லை. கண்களில் கோத்து நின்ற ஜலத்தில் ரூபாய் நோட்டுக்கள் இரண்டிரண்டாய்த் தெரிய அப்படியே பைக்குள் வைத்துக் கொண்டு, நாத் தழுதழுக்க நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

## மனிதர்கள்





ராமு: டேய் சோமு! என்னடா இது; மேல ஆண்டன்னா இருக்குது. வீட்டிலே டீ. வி. இல்லே?

சோமு: சத்தம் போடாதேடா... இப்பவெல்லாம் இதுதான் ஃபேஷன்!

— "மாது"

இது நடந்த நான்கு நாட்களுக்கப்புறம் ஒரு கடிதத்தை டிக்டேட் செய்து முடித்த கார்த்திக் திடீரென்று ஞாபகம் வந்தவனாக ராதிகாவிடம் கேட்டான்.

"வீட்டுச் சொந்தக்காரர் பணம் கேட்டார்னு சொன்னாயே ராதிகா... வேர் யு ஏபிள் டு மானேஜ் தட் அமௌண்ட்... ஆர்..."

அவன் முடிப்பதற்குள் சடாரென்று சொன்னாள் அவள்.

"நோ சார்... ஐ ஹேவ் மானேஜ்ட் மைசெல்ஃப். தாங்க் யூ..."

"ஓ... தட்ஸ் குட்..." என்றவன் அவளைப் பெருமையாய்ப் பார்க்க, அதைக் கவனிக்காத மாதிரி அவள் தன் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வெளியேறினாள்.

மறுவாரம் ஆபீஸில் தன் அறையில் உட்கார்ந்து டைப் அடித்துக் கொண்டிருந்தவளுக்கு டெலிபோன் வந்தது. தம்பி சாமிநாதன் பேசினான். பள்ளிக்கூடத்திலிருந்து — தலைமை ஆசிரியையின் அறையிலிருந்து பேசுவதாகச் சொன்னான்.

"அக்கா... க்ளாஸ்ல திடீர்னு சிவா மயக்கம் போட்டு விழுந்துட்டான். டீச்சர் அவனை அப்படியே பெஞ்சில படுக்க வைச்சு டாக்டரைக் கூப்பிட்டிருக்காங்க. டாக்டர் வர்றதுக்குள்ளே உனக்கு போன் பண்ணி, சொல்லச் சொன்னாங்க. உடனே உன்னை வரச் சொல்றாங்க... வர்றியாக்கா?"

இவள் பதறித் தொலைபேசியை வைத்து விட்டு, கார்த்திக்கின் அறைக்குள் ஓடிப் பதற்றத்தோடு சொன்னாள்:

"சார்... என் ரெண்டாவது தம்பி திடீர்னு ஸ்கூல்லே மயக்கம் போட்டு விழுந்துட்டானாம்... ஸ்கூல்லேருந்து போன் வந்தது. உடனே என்னை வரச் சொல்றாங்க சார்..."

அவளது பதறலும், பதற்றமும் அதிகமாய்ப் பட அவன் நிதானமாக அவள் முகத்தை ஏறிட்டுச் சொன்னான். "டோண்ட் ஒர்ரி ராதிகா... எதுக்கு இப்படி எல்லாத்துக்கும் பயந்து பதறிப் போறே...? ஒண்ணும் இருக்காது... சரியாச் சாப்பிட்டிருக்க மாட்டான். இல்லைன்னா உடம்புல ஏதாவது வைட்டமின் சத்துக் குறைவா இருக்கும். இதுக்கு ஏன் இத்தனை பயம்...?"

அவள் பேசாமல் தலைகுனிந்து மேஜையின் ஓரத்தை அழுத்திப் பற்றிக் கொள்ள, கார்த்திக் மீண்டும் பேசினான்.

"எஸ்... யூ கேன் கோ... வேணும்னா லீவு போட்டுட்டே போயிடு... அப்புறம் எனக்கு போன் பண்ணி என்ன என்பதைத் தெரியப்படுத்து. என் உதவி தேவைன்னால் நான் உடனே கிளம்பி வர்றேன்..."

இவளுக்குச் சரேலென்று அடிவயிற்றில் தீப்பற்றிக் கொண்ட மாதிரி ஒரு வேகம் எழுந்தது. ஏதோ சொல்ல மனசு துடித்தது. ஆனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வெளியில் வந்து விட்டாள்.

ஆபீஸ் காருக்குக் கூடக் காத்திராமல் ஆட்டோ பிடித்தாள் அவள். ஆட்டோ டிரைவரிடம் இடத்தைச் சொல்லிவிட்டு, அதற்கு மேல் விம்மலும் கேவலுமாகப் புறப்பட்டதைத் தடுத்துக் கொள்ளும் பொருட்டுக் கைக்குட்டையால் வாயை இறுகப் பொத்திக் கொண்டாள். அந்த மாதிரி மனசைப் பொத்த முடியாத காரணத்தால் அது 'ராம்குமார், ராம்குமார்' என்று அலறிற்று. அன்றொரு நாள் சாமிநாதன் சைக்கிளிலிருந்து கீழேவிழுந்தபோது ராம்குமார் தூண் போலத் துணையாக நின்றது நினைவுக்கு வந்தது. அவள் கேட்காமலே அவன் சுமைகளைப் பகிர்ந்து கொண்டானே அவன்!

'இப்பவே உங்களைப் பார்க்கணும் ராம்குமார்... எங்கே இருக்கீங்க? எங்கே இருந்தாலும் என்கிட்டே ஓடி வந்துடுங்களேன் ப்ளீஸ்... என்னை இப்படித் தனியா, அனாதையா... உதவக்கூட ஆளின்றித் தவிக்க விட்டுட்டு நீங்க மட்டும் போனது என்ன நியாயம் ராம்குமார்...?'

உள்ளுக்குள் குமுறிக் குமுறி மௌன வார்த்தைகளில் அவள் உடைந்து கொண்டிருந்த போது, பள்ளிக்கூடம் வந்துவிட்டது. ஆட்டோவைக் காத்திருக்கச் சொல்லி அழுத சுவடு தெரியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் உள்ளே போய், தலைமை ஆசிரியையின் அறைக்குள் நுழைந்த போது—

நல்லவேளையாக சிவா எழுந்து உட்கார்ந்திருந்தான். அவனைப் பரிசோதித்த டாக்டர், பயப்பட எதுவுமில்லை என்றும், பி. காம்ப்ளெக்ஸ் இன்ஜெக்ஷன் மட்டும் போட்டிருப்பதாகவும், அவனை ஒரு நல்ல கண் டாக்டரிடம் காட்டி, கண்களைப் பரிசோதிக்குமாறும் சொன்னார். பார்வைக் கோளாறு இருந்தால்கூட இதுபோன்ற



சென்னை உடுப்பி ரங்கப்பிரசாத் மற்றும் வேலூர் ஹோட்டல் கங்கா உரிமையாளருமான ஸ்ரீ கிருஷ்ணாராவ் என்கிற கிருஷ்ணப்பா அவர்களின் குமாரன் சிரஞ்ஜீவி சத்திய நாராயணனுக்கும் சென்னை லிப்டன் டீ கம்பெனி ஸ்ரீ பாலசுப்ரமணியன் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி வித்யாவுக்கும் சமீபத்தில் விவாஹம் சென்னையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 250/- ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/- மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ. 250/- அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D — 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் — 612 001.

***** இந்த நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு *****



"பேசிமுடிச்சுட்டுக்காரில்ஏறப்போன தலைவர் திரும்பவும் மேடைக்குப் போறாரே, ஏன்?"

"சோடாவில்கொஞ்சம்மிச்சம்வச்சது ஞாபகம் வந்ததாம்!"

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.



"அந்த டாக்டர் சுத்த விவரம் புரியாத ஆளு!"

"எப்படிச் சொல்றே?"

"போஸ்ட் மார்ட்டம் செய்யறதுக்கு மயக்க மருந்து தரும் டாக்டரைக் கூப்பிட றார்!"

— குத்தாலம் ராஜா.

தலைவர்: இருமணம் என்றாலே இவ்வளவு விளக்கமும் சொல்ல வேண்டியுள்ளது. இப்போது முறைப்படி திருமணத்தை நடத்தி வைக்கிறேன்....

ஒருவர்: மன்னிக்கணும்... மாப்பிள்ளை, பெண்ணுக்குத் தாலி கட்டி, முதலிரவுக்குப் போய் ரொம்ப நேரமாச்சுங்க...

— செவல்குளம் 'ஆச்சா'



மயக்கம் ஏற்படும் என்பதைத் தெரிவித்தார்.

சிவாவின் வகுப்பாசிரியையும், தலைமை ஆசிரியையும் அவனை வீட்டிற்கு அழைத்துப் போய், ஓய்வாகப் படுக்க வைக்குமாறு வற்புறுத்த அதே ஆட்டோவில் அவனை வீட்டிற்கு அழைத்து வந்தாள். பாட்டியிடம் நடந்ததைத் தெரிவித்து, சிவாவைப் பாய் போட்டுப் படுக்க வைத்துவிட்டு அழுதகளைப்பையும்,மனசுக்குள்பொங்கிப்பொங்கி எழும் துக்கத்தையும் தணித்துக் கொள்வதற்காகக் குளியல் அறைக்குப் போய் நன்றாகக் குளித்துவிட்டு வந்ததும் மனசுக்குள் ஏதுவோ அடங்கின உணர்வு ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய அமைதி திரும்புகிற மாதிரி இருந்தது. அந்த அமைதியைக் கலைக்கும் வகையில் டெலிபோன் ஒலித்தது. ஒரு வித அலுப்புடன் போய் எடுத்த போது கார்த்திகேயனின் கம்பீரமான குரல் கேட்டது.

"என்ன ராதிகா... போன் பண்ணச் சொன்னேன் பண்ணவேயில்லை... தம்பிக்கு என்ன உடம்பு, டாக்டர் என்ன சொன்னார்...?"

'டாக்டர் என்ன சொன்னால் உங்களுக்கு என்ன...?' என்று கேட்கத் துடித்த மனத்தையும், நாக்கையும் கட்டுப்படுத்திக் கொண்டு, நிதானமாகப் பேசினாள். "ஒண்ணுமில்ல... கண் டாக்டர்கிட்ட காட்டி ஐ டெஸ்ட் பண்ணச் சொன்னார். பார்வைக் கோளாறு தான் மயக்கத்துக்குக் காரணம்னு அபிப்பிராயப்படறார்..."

அவளது குரலில் உயிர்த் துடிப்பற்று வெறுமையாய் வெளிப்பட்டதற்கு மாறாக அவனது குரல் சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் வந்தது.

"நான் சொல்லலை... ஒண்ணும் இருக்காதுன்னு... நீதான் அனாவசியமா எல்லாத்துக்கும் பயப்படறே.... நாளைக்கே ஒரு நல்ல கண் டாக்டர் கிட்ட காட்டி செக் பண்ணிடு... என்ன...?"

"சரி."

"அப்புறம் நாளைக் காலைல நீ ஆபீசுக்கு வந்ததும் ஒரு குட் நியூஸ் சொல்லப் போறேன். நம்ம ரெண்டு பேரையும் சந்தோஷப்படுத்தற நியூஸ்..."

"என்ன...?"

"ம்ஹூம். இப்ப சொல்ல மாட்டேன். நாளைக் காலைல நேர்லதான் சொல்லுவேன். நாளைக்கு ஒன்பதரைக்குப் பார்க்கலாம், பை!"

அவனது குரலின் உற்சாகம், சந்தோஷம் எதுவும் மனத்தில் ஒட்டாதவளாக — அவன் சொல்லப் போகும் விஷயம் எதுவாக இருக்கும் என்கிற ஆர்வமோ, அக்கறையோ இல்லாதவளாக வந்து படுத்துக் கொண்ட போது மனம் பெருக்கித் துடைத்த மாதிரி எந்தவித உணர்ச்சிகளுமில்லாமல், எண்ண ஓட்டம் கூட அற்றுப் போய் வெறுமையாய்க் கிடந்தது...

(அடுத்த இதழில் முடியும்)

# மகாராஷ்டிரத்தின் இலக்கிய தெய்வம்!



வி. ச. காண்டேகருக்கு 1974 — இல் ஞானபீடப் பரிசு தரப்பட்டபோது, "இதே பரிசைப் பெறத்தக்க இன்னொரு மராத்தி எழுத்தாளரைக் குறிப்பிட முடியுமா?" என்று ஒரு நிருபர் கேட்டார். "ஓ! சொல்ல முடியுமே! ஷிர்வாட்கர் இருக்கிறாரே!" என்றார் காண்டேகர்.

இந்த வருஷம் ஷிர்வாட்கருக்குக் கிடைத்துவிட்டது ஞானபீடப் பரிசு.

பார்க்கப் போனால் 'குஸுமாக்ரஜ்' என்ற பெயரில் எழுதும் ஷிர்வாட்கரின் கவிதைகளை இதரப் பதிப்பகத்தார் பிரசுரிக்கத் தயங்கிக் கொண்டிருந்த போது அவரது முதல் கவிதைத் தொகுப்பைப் பிரசுரித்தவரே காண்டேகர்தான். "விசாகா" என்ற அந்த நூல் மராத்தி இலக்கியத்தில் ஒரு மைல் கல்லாகத் திகழ்கிறது.

ஷிர்வாட்கர் நாடக ஆசிரியர் என்ற முறையிலும் மிகவும் பிரசித்தி பெற்று விட்டார். "நட சம்ராட்" என்ற அவரது நாடகம் சமீப காலத்தில் வெளியான நாடகங்களுள் தன்னிகரற்றதாகக் கருதப்படுகிறது. வசூல் விஷயத்தில் வெற்றி பெறாத அவரது இதர நாடகங்கள் சில உண்டு. ஆனால் இவையும் மராத்தி நாடகத் துறையில் திருப்பு முனைகளாகக் கருதப்படுகின்றன.

சிறுகதைகள், கட்டுரைகள் ஆகியன எழுதுவதிலும் ஷிர்வாட்கர் பெயர் பெற்றிருக்கிறார். ஆனால் அவரை மக்கள் அதிகமாக அறிந்தது, குஸுமாக்ராஜ் என்ற கவிஞராகத்தான். இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்ட காலத்தில் நெருப்பாகச் சுட்டன. சுதந்திரத்துக்குப் பிறகு சில காலம் தண்ணென்று இதயத்தை வருடின.

குஸுமாக்ராஜின் கவிதைகள் எப்போதும் நம்பிக்கை ஊட்டுவனவாகவே இருக்கும். ஆழ்ந்த சோகம், அநீதி இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டித் துன்பத்தின் ஆழத்தில் வாசகனைத் தள்ளினாலும் கூடவே, இரவின் இருள் தாற்காலிகமானது; சூரியன் உதயமாகும் என்று நம்பிக்கை ஊட்டுவார். சுதந்திரப் போராட்ட காலத்தில் அந்நிய ஆட்சியை எப்படிச் சாடினாரோ, அதே வேகத்தோடு இன்று சமுதாய ஏற்றத் தாழ்வுகள், அநீதிகள், அலட்சியப் போக்கு முதலியவற்றைச் சாடுகிறார்.

மராத்தி இலக்கியத்தின் சிறந்த நகைச்சுவையாளர் தேஷ்பாண்டே, "மகாராஷ்டிரத்தின் கலாசார தெய்வம்" என்று ஷிர்வாட்கரை வர்ணிக்கிறார் — நகைச்சுவையாக அல்ல; நிஜமாக! இதைவிடப் பெரிய பாராட்டை யார் வழங்க முடியும்?


ஆதாரம்: எகனாமிக் டைம்ஸ்.



"என்னப்பா பேப்பரில்என்ன செய்தி...? இன்றைக்கு யாராவது புதுக்கட்சி ஆரம்பிச்சிருக்காங்களா?"

"ஊஹூம். தன்னோட கட்சியைக் காணவில்லைன்னுதான் ஒரு தலைவர் விளம்பரம் செய்திருக்கார்...!"

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா



சினிமா பாணியில்....

# எம்.ஜி.ஆர். போல ராஜீவ் நடிக்கவும் ஆரம்பிப்பாரோ?

பதிலடி ஜெயலலிதா பதிலடி கொடுப்பார். இது தானே இன்றைய அரசியலின் தரம்!



[illegible]



ஆயிரம் வாட்டா? ஜீரோவா?



* அ. ஜமால் மொய்தீன், சென்னை.

? தீபாவளி நன்னாளில் உங்கள் பிரார்த்தனை என்னவாக இருக்கும்?

! நம்முடைய சுதந்திரங்களையும் உரிமைகளையும் பிறரது சுதந்திரங்களுக்கும் உரிமைகளுக்கும் இடையூறு இன்றிப் பிரயோகிப்பதே ஜனநாயகம் என்பதை ஒவ்வோர் இந்தியக் குடிமகனும் உணர வேண்டும் என்பதே.

* கே. கணேஷ், சென்னை — 6.

? எம். ஜி. ஆர். பாணியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள ராஜீவ் காந்தி, எம். ஜி. ஆர். போல நடிக்கவும் ஆரம்பித்து விடுவாரோ?

! விடுவாரோ என்ன? விட்டார்! டி. வி. யில் பார்க்கவில்லையா? டோபா, உடையலங்காரத்தில் ஆரம்பித்து, செட்டுப் போட்டு ஷூட்டிங் நடப்பது வரை எல்லாம் சினிமா பாணியில்தானே நடக்கிறது!

* ஆர். திருநீலகண்டன், வேப்பத்தூர்.

? வருமான வரி கட்டாத நடிகர் — நடிகைகளுக்கு நடிக்கத் தடை விதித்தால் என்ன?

! ஏன் ஸார், வருமான வரி வழக்குகளையும் அதிகாரிகளின் நடவடிக்கைகளையும் தேவையான போது வாபஸ் பெற வைக்கும் "பெரிய இடத்துச் சிபாரிசு," இந்தப் புதிய தடை உத்தரவையும் வாபஸ் பெற வைக்காதா? புதிய சட்டங்கள் எதற்கு? இருக்கிற சட்டங்களை விருப்பு வெறுப்பின்றிப் பிரயோகித்தாலே போதுமே; ஆனால் அந்தளவு நேர்மைக்குத்தானே இங்கு பஞ்சம்!

* வி. அருண், சீரமங்கலம்.

? ஜெயலலிதா, 'நடிகர் சங்கத்தின் தலைவர் ஆகலாம்' என்று நெடுஞ்செழியன் பேசியிருக்கிறாரே?

! நெடுஞ்செழியன், 'மனைவிக்குப் பயந்தவர் சங்கத்தின் தலைவராகலாம்' என்று

* போத்தனூர்புலிச் சோழன், கோவை — 45.

? 'இந்தியாவில் தீண்டாமை உள்ளதைவிட இங்கு நிறத்துவேஷம் குறைவாகத்தான் இருக்கிறது' என்று தென் ஆப்பிரிக்கா, இந்தியாவைக் கிண்டல் பண்ணுகிறதே?

! அங்கே நிறத்துவேஷத்தை அரசே திட்டமிட்டு நிரந்தரமாக்குகிறது; இங்கே தீண்டாமையை ஒழிக்க அரசு சட்டமியற்றியதுடன், மக்கள் மனப்பான்மை மாறச் சகல முயற்சிகளையும் மேற்கொள்கிறது. இம்முயற்சி பெருமளவு வெற்றியும் பெற்றிருக்கிறது. இந்த அடிப்படை வித்தியாசம் புரியாத முட்டாள்கள் ஏதோ உளறியிருக்கிறார்கள் என்று ஒதுக்கிவிட்டுப் போவோம்.

* இடலை சுதா, குளத்தூர்.

? ஜோதிபாசு பெங்கால் லாம்ப்ஸ் விவகாரத்தில் மாட்டிக் கொண்டு விழிக்கிறாரே?

! எரியும் ஊழல் பல்பு, ஜீரோ வாட்டா,

ஆயிரம் வாட்டா என்று புரிந்து கொள்ள முடியாமல், குழப்பம் என்ற கருநிற லாம்ப் ஷேட் போட்டு மூடியிருக்கிறார்கள். அது நீக்கப்பட வங்க மக்கள்தான் முயற்சி எடுக்க வேண்டும்.

*** ஜெயந்திப்பிரியன், திருத்துறைப்பூண்டி.**

**? தூர்தர்ஷன் டைரக்டர் ஜெனரல் பாஸ்கர்கோஷ் வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது குறித்து?**

! டி.வி. ஒளிபரப்பு என்ற விளைநிலத்தில் காங்கிரஸைப் பயிர் செய்து அமோகமான வோட்டு அறுவடை செய்வது எப்படி என்று கற்றுக் கொண்டு வருவதற்காக அனுப்பப்பட்டிருக்கலாம்!

*** இரா. வனையாபதி, தோட்டக்குறிச்சி.**

**? கல்கி தீபாவளி சிறப்பிதழுக்கான சுவரொட்டி தவிர, சென்னை நகரின் சுவரொட்டிகளில் சமீபத்தில் தங்கள் கவனத்தைக் கவர்ந்த ஒன்று?**

! ஒரு குடும்பத் தலைவரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி அவர் பிரிவால் வாடும் மனைவி, மகன் முதலியவர்கள் ஒட்டச் செய்திருந்த போஸ்ட்டர் நூதனமாயிருந்தது.

*** ந. இளங்கோவன், தலைஞாயிறு. ***

**? சமீபத்தில் வெளியிடப்பட்ட எவர்சில்வர் நாணயங்கள் மிகவும் சிறியனவாக உள்ளனவே?**

! இதைவிடப் பெரிதாக வடித்தால் அவற்றின் மதிப்பைவிட அவற்றை உற்பத்தி செய்யும் செலவு அதிகமாகிவிடும்! இன்று விலைவாசியை அந்த நிலையில் கொண்டு நிறுத்தியிருக்கிறார்கள், நம் அரசியல்வாதிகள்!

*** கோ. சு. சுரேஷ், கோவை.**

**? தில்லியில் விவசாயிகள் முற்றுகை குறித்து?**

! பிரதமரின்பேரணி வேறு இடத்தில்நடக்குமாறு நிர்ப்பந்தத்தை உருவாக்கியது திகைத்தின் வெற்றி. சில வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டு அவை நிறைவேற்றப்படவில்லையானால் ஒத்துழையாமை, மற்றும் வரி கொடா இயக்கம், நடத்துவோம் என்று கூறி இடத்தைக் காலி செய்தது புத்திசாலித்தனம். பிரதமரின் பேரணி நடந்த மாற்று இடத்தில் நிகழ்ச்சி நடத்தி வந்த சர்க்கஸ் நிறுவனம் டேரா தூக்க நேர்ந்தது பரிதாபம் மட்டுமல்ல; அநீதி. விவசாயத்தையே தன் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கொண்டுள்ள நாடு, விவசாயப் பொருளாதாரத்தில் கவனம் செலுத்தவில்லை என்பது யதார்த்தம்.

*** மு. செந்தில்வாசன், திருமருகல்.**

**? சமீபத்தில் உங்கள் நெஞ்சை வருத்திய விஷயம்?**

! போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட பதினாறு குழந்தைகளில் மூன்று குழந்தைகளின் மரணம். மேலும் பதினோரு குழந்தைகள் ஆஸ்பத்திரியில். நோயையும் மரணத்தையும் தடுக்க வேண்டிய மருந்து உயிர்ப் பலி வாங்குவதா? கவனம் வேண்டாமா?

*** கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.**

**? டாக்காவில் ஆசியக் கோப்பை கிரிக்கெட்டில் இலங்கையிடம் இந்தியா தோற்றிருக்கிறதே?**

! கபில்தேவுக்கு அவுட் கொடுக்கப்பட்ட விதம் அம்பயர்கள் குலத்துக்கே அவமானம் என்றாலும் இந்தியா இன்னும் திறம்பட ஆடியிருக்கலாம் என்பதில் மறுபேச்சு இல்லை. எப்படியோ, ஃபைனல்ஸை எட்டிப் பிடித்துவிட்டதே நம் அணி. பார்ப்போம் ஒரு கை!

*** அனுஷா, சென்னை — 40.**

**? சமீபத்தில் பார்த்த திரைப்படம்?**

! ஏகப்பட்ட அவார்டுகள் வாங்கியிருக்கிறதே என்பதால் LAST EMPEROR பார்த்தேன். எக்கச்சக்கச் செலவு செய்து பிரமாதமாகத்தான் எடுத்திருக்கிறார்கள். பல காட்சிகள் பிரமிக்க வைக்கின்றன. நடிப்பு, ஒலி — ஒளிப்பதிவு எல்லாம் அற்புதம்தான். ஆனால் மனசுக்கு நிறைவு உண்டாகவில்லை. காரணம், சீனாவின் கடைசி மன்னரின் குழந்தைப் பருவத்திலிருந்து கிழவனாகும் வரை எடுக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் வீழ்ச்சிகளைத்தான் உணர்த்துகிறதேயொழிய, உயர்வுகளை அல்ல. அனுதாபம் கூட ஏற்படவில்லை அந்த மன்னன் மீது. எல்லாம் அவனுடைய முட்டாள்தனத்தால் அவனே வருவித்துக் கொண்டதுதானே என்று தோன்றுகிறது.

*** சாஸ்திரி வெங்கடேஷ், கோழிக்கோடு.**

**? தில்லியில் லைசென்ஸ் இல்லாமல் கார் ஓட்டிய ஐந்து வயதுச் சிறுமிக்கு ஐம்பது ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாமே?**

! உலக சாதனை ஏற்படுத்தி, கின்னஸ் புக்கில் இடம்பெறத் தரப்பட்ட விலை ஐம்பது ரூபாய். கொள்ளை மலிவு!

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

**ந. இளங்கோவன்,**
**அஞ்சலகம்,**
**தலைஞாயிறு அக்ரஹாரம்,**
**— 614 712. (தஞ்சை மா.வ.)**


மலர் என்பார்,
மதி என்பார்,
மயில் என்பார்.
எப்படி
அழைப்பினும்
கண்ணே,
ஈடில்லை எதுவும்
உனக்கு !
யங்
ஸென்ஸேஷன்ஸ்
ஸாரிகள் மற்றும் டிரெஸ் மெட்டீரியல்ஸ்
ம:.பத்லால்
—நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது
ம:.பத்லால்
:.பேப்ரிக்ஸ்
ம:.பத்லால் இண்டஸ்ட்ரீஸ் லிட். (நியூ ஷொர்ராக் மில்ஸ்) மற்றும் ம:.பத்லால் :.பைன் ஸ்பின்னிங் & மேன்யு:.பேக்சரிங் கம். லிமிடெடின் ரெஜிஸ்டெர்டு ட்ரேட் மார்க்.
Location Courtesy: The Taj Mahal Hotel, Bombay.
MF 635 D TAM



# மல்லிகைப்பூ ஆசை

கேசவ்குமார்

**ப**வித்ரா என் மனைவி. புதுவித கம்மல், மற்றும் வளையல் ரகங்கள் மார்க்கெட்டுக்கு வந்திருப்பதாகவும், அந்தத் தெருவில் வாசம் புரியும் அனைத்துப் பெண்களும் அதை வாங்கி விட்டார்கள் என்றும், நாசூக்காகச் சொல்லி, இந்த ஒரு வாரம் முழுதும் என்னைத் தூங்க விடாமல் அவள் செய்த தொல்லை இருக்கிறதே.....! அது மட்டுமில்லை. இரண்டாம் வகுப்பு படிக்கும் என் மகள் ப்ரியா, சல்வார் கமீஸ் செட் வாங்கித் தர வேண்டுமென்று மொட்டை மாடிக்குப் போய்க் கதவை வெளிப்பக்கம் பூட்டிக் கொண்டு அடம்பிடித்து என் உயிரை எடுத்து விட்டாள். மனுஷன் எவ்வளவு நாட்கள் தான் இதைப் பொறுத்துக் கொண்டு ஜடம் மாதிரி இருப்பது...? அதனால், அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுத்து விடலாம் என்று அலுவலக வேலைகள் முடிந்ததும் நாராயண முதலித் தெருவின் டிராபிக்கில் நனைந்து, பேன்ஸி ரகங்களையும், சல்வார் கமீஸ் செட்டையும் வாங்கிக் கொண்டேன்.. வழக்கம் போல இரண்டு ரூபாய்க்கு மல்லிகைப் பூவும் வாங்கிக் கொண்டேன்.

சீதக்காதி நகர் சுரங்கப் பாதை வழியாக, பீச் ஸ்டேஷனை அடைந்தபோது மணி ஏழு. கூட்டத்தில் நீந்திமுன்னேறினேன். மின்சார ரயிலின் ஒரு காலியான பெட்டிக்குள் ஏறி உட்கார்ந்தேன். பைக்குள் கைவிட்டு, கர்ச்சீப்பை எடுக்கும்போது 'சட்'டென அதிர்ந்தேன்... வழக்கமாக நான் அங்கே வைத்திருந்த, என் புகைப்படத்துடன் கூடிய சீசன் டிக்கெட்டைக்காணவில்லை...பரபரப்புடன் சட்டை, மற்றும் பேண்ட் பாக்கெட்டுகள் அனைத்தையும் நன்றாய்த் துழாவிப் பார்த்தேன். சீசன் டிக்கெட் இல்லை. ஒருவேளை ஜவுளிக் கடையில் மறந்து போய் வைத்து விட்டு வந்துவிட்டேனா...? ஆங்... ஞாபகம் வந்துவிட்டது. பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கருதி எனது மேஜையின் கீழ் ஷெல்ஃபில் அதை வைத்தவன், அலுவலகம் முடிந்தபோது அதை எடுத்துக் கொள்ளாமல் விட்டு விட்டேன்.

ஒரு நடை அலுவலகத்துக்குப் போய் விட்டு வரலாமா என்று யோசித்தவன் மனத்தை மாற்றிக் கொண்டேன். இந்நேரம் அலுவலகத்தில் ஓர் ஈ, காக்கை கூட இருக்காது.

யோசித்தேன்... மாம்பலத்துக்கு டிக்கெட் வாங்குவதுதான் சரி என்று தோன்றியது. கூடவே வயிறு எரிய ஆரம்பித்தது. கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைபவன் போல் சீசன் டிக்கெட்டை வைத்திருந்தும் இரண்டு ரூபாய் செலவழித்து டிக்கெட் வாங்க வேண்டியிருக்கிறதே என்று என் மனம் முனகியது.

பயண டிக்கெட் வாங்காது பயணம் செய்வது சட்டப்படி குற்றம் என்பது ஒரு குழந்தைக்குக் கூடத் தெரியும். நானென்ன டிக்கெட் இல்லாமலா பயணம் செய்யப்



"அந்த ஹோட்டல்ல சாப்பிட்டதாலே... கைல காயமா...? எப்படி...?"

"மாவாட்டும்போது... கையையும் சேர்த்து அரைச்சுண்டுட்டேன்!"

— வி. சுந்தரராமன்.

போகிறேன்? ஏற்கெனவே காசு கொடுத்து சீசன் டிக்கெட் வாங்கி அதை மறந்து வைத்து விட்டேன். பிறகெதற்கு வீணாக டிக்கெட் வாங்க வேண்டும்...? — இப்படி என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

'இருந்தாலும் பயணம் செய்யும் போது டிக்கெட் இல்லாமல்...' என்று எச்சரித்த மனச்சாட்சியை உதாசினப்படுத்தினேன்.

**நீ**ளமான ஒரு ஹாரனை வெளிப்படுத்திய பிறகு மின்சார ரயில் புறப்பட்டது. எழும்பூர் வந்ததும் பிளாட்பாரத்தில் கேட்ட அந்த ஓசைகள் என் பார்வையை நிமிர்த்தின. பிளாட்ஃபாரத்தை நோக்கினேன்...

"அம்மா... இங்கே குண்டு. குண்டா மல்லிகைப்பூ இருக்கு. வெளியில வாங்கித் தரச் சொன்னதுக்குப் பூவெல்லாம் மலர்ந்து போயிருக்குன்னு சொல்லித் தட்டிக் கழிச்சுட்டே... இப்ப என்னை ஏமாத்த முடியாது. வாங்கிக் கொடு..."

— பத்து வயதிருக்கும் அந்தச் சிறுமிக்கு.. பக்கத்தில் வந்து கொண்டிருந்த அவள் அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு பிளாட்பாரத்தில் கால்களைத் தேய்த்தவாறு கத்தினாள். ஆனால், அம்மாக்காரியோ அவள் புலம்பலை அலட்சியப்படுத்தி விட்டு அவளைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்தாள்...

"வாங்கிக் கொடும்மா... அந்த பங்கஜத்துக்கு அவ அம்மா ரோஜாப்பூ கொண்டையெல்லாம் போட்டு விடறா... நான் என்ன உன்னை அம்புட்டுக் காக கொடுத்தா வாங்கச் சொல்றேன்... ஒரே ஒரு முழம் பூ மட்டும்மா..." அந்தச் சிறுமி மேலும் கத்தியதைப் பொருட்படுத்தவில்லை அவள் அம்மா.

அவர்கள் இருவரும் நான் உட்கார்ந்திருந்த பெட்டிக்குள் ஏறினார்கள். எனக்கு எதிரே வந்து உட்கார்ந்தார்கள். அம்மாக்காரி ஒரு கூடை வைத்திருந்தாள். ஈச்ச நாரைக் கொண்டு ஆங்காங்கே ஒட்டுப் போடப்பட்ட கூடை அது. கூடைக்குள் ஒரு பை நிறைய எதையோ நிரப்பி முடிச்சுப் போடப்பட்டிருந்தது.

அம்மாக்காரி வெற்றிலை போட்டிருந்தாள். அவளின் கிழிந்த சேலையும், சலிப்பும், அவள் அன்றாடம் சாப்பாட்டிற்குப் போராடும் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதை அப்பட்டமாய்க் காட்டின. சிறுமியும் அவளைப் போலவே கலைந்த, எண்ணெய் காணாத தலையுடன், கிழிந்த சட்டைப் பாவாடை அணிந்திருந்தாள்.

ரயில் மீண்டும் புறப்பட்டதும் "அம்மா... அம்மா..." என்று கைவிரல்களால் அம்மாக்காரியின் கையைச் சுரண்டி, அந்த மல்லிகைப்பூ விற்கும் கடையை நோக்கிக் கை காட்டியவாறே அழும் அந்தச் சிறுமியின் ஆற்றாமை பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

**மா**ம்பலம் வந்ததும் அவசரமாய் எழுந்தேன். பெட்டியை விட்டு இறங்கினேன். "ஸார்... ஸார்..." என்று அச்சிறுமி ஜன்னல் வழியே அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினேன்.

"ஸார்... இந்தாங்க. இந்தப் பார்சலை அப்படியே உங்க சீட்ல மறந்து வச்சிட்டு வந்திட்டீங்க..." என்று அவள் ஜன்னல் வழியே நீட்டியது — அந்த மல்லிகைப்பூப் பொட்டலத்தைத்தான். பையிலிருந்து எப்படியோ நழுவிப்போய் சீட்டில் விழுந்து விட்டிருந்தது.

எனக்குச் சிறுமியின் 'மல்லிகைப்பூ ஆசை' ஞாபகத்திற்கு வர அவளிடம் சிறிது விளையாடலாம் என்று நினைத்தேன்...

"பாப்பா, இந்தப் பார்சல் என்னுடையது இல்லை..." என்றேன்.

"அட... வேறே யார் வச்சிட்டுப் போயிருப்பாங்க...? சார் நீங்க டிக்கெட் கலெக்டர் கிட்டே டிக்கெட் கொடுத்துட்டுத்தானே போவீங்க...? அப்ப இந்தப் பார்சலையும் சேர்த்துக் கொடுத்துடுங்க. இது யாருக்குச் சொந்தமானதோ அவங்ககிட்டே கொடுக்கச் சொல்லிடுங்க..." அந்தச் சிறுமியின் களங்கமில்லாத பதில் என்னைக் கலங்கச் செய்தது.

"இங்கே பாரு. நீ உங்கம்மாகிட்டே பூ வாங்கித் தரச் சொல்லிச் சண்டை பிடிச்சேயில்லே...? இந்த மல்லிகைப்பூ பார்சலை நீயே வச்சிக்கயேன்...?" என்றேன்.

சிறுமி சற்றும் யோசனையில்லாமல் பட்டென்று சொன்னாள்... "ஸார்... இது இன்னொருத்தங்க பொருள். இதுக்கு நாம ஆசைப்படக் கூடாது. எங்கம்மா அப்படித்தான் சார், வாங்கித் தர்றேன்னு சொல்லிட்டுக் காசு எல்லாத்துக்கும் அரிசி வாங்கிடும்... என்னைக்காவது ஒருநாள் அது வாங்கித் தராமயா போயிடப் போகுது..." — அவள் சொல்லிக் கொண்டே இருக்கையில் ரயில் நகர ஆரம்பித்துவிட்டது.

என் மூளைக்குள் எதுவோ தாக்கியது போல் ஓர் உணர்வு.

அடுத்தவர் பொருள் என்பதற்காக, வலியக் கிடைத்த, தான் நீண்ட நாட்களாக ஆசைப்பட்ட பொருளைப் புறக்கணித்தாளே, அந்தக் குழந்தை! நானோ, எவ்வளவு முறை இருக்குறள் படித்தும் டிக்கெட் இல்லாமல் ரயிலில் பிரயாணம் செய்யத் துணிந்து விட்டேன்!

இரண்டு ரூபாய் டிக்கெட் எடுப்பதற்காகக் கையில் அந்த மல்லிகைப்பூ பார்சலுடன், கவுண்டரை நோக்கி நடக்க ஆரம்பித்தேன், நான்.

# "வாழும் கடவுள் என்.டி.ஆரை வணங்கு!"

ஆந்திராவில் இண்டர்மீடியட் தேர்வில் வழிபாடு என்ற வார்த்தையை வாக்கியத்தில் அமைக்கச் சொல்லிக் கேட்ட போது ஒரு மாணவர் எழுதிய பதில்: "நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் கடவுளான முதல்வர் என்.டி.ஆரை வழிபடுவதில் தவறு ஒன்றுமில்லை."

* * *

கண் நோய்களைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர் ரமேஷ் திரிபாதி. இவர் மனைவி, விஞ்ஞானி பிரெண்டா. இருவரும் அமெரிக்காவில் வசிக்கிறார்கள். இவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளுக்காக இதுவரை பெற்றுள்ள மான்யத் தொகை இரண்டு மிலியன் டாலர்கள்! சமீபத்தில் மேலும் ஒரு சர்வதேசப் பரிசு இவர்களை வந்தடைந்தது. அதன் மதிப்பு ஐம்பதாயிரம் டாலர்கள். இலினாய்ஸ் மாநில சட்ட மன்றம் இரண்டு முறை இவர்களது பணியைப் பாராட்டி தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. இருவரும் சிகாகோ பல்கலைக் கழகத்தில் பணியாற்றி ஆராய்ச்சிகளை நடத்துகின்றனர்.

* * *

விமானமேறி அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்த விமானிகளுள் மிகவும் இளையவர் பதினோரு வயதான கிரிஸ் தக்பர் வீ மார்ஷல். ஒரே இஞ்சின் உடைய விமானத்தில் பறந்த சிறுவனுடன் ஒரு கடற்படை தளபதி தவிர அவனுடைய கரடி பொம்மையும் பயணம் செய்தது!

* * *

பூனாவில் ஒரு விசித்திர சவ ஊர்வலம். தலையை மொட்டை அடித்துக் கொண்டு ஒருவர் முன்னால் போக பின்னால் நாலு பேர் ஒரு ஸ்கூட்டரைப் பாடையில் வைத்துக் கட்டித் தூக்கி வந்தார்கள். எதற்கு இந்த ஸ்கூட்டர் சவ ஊர்வலம்? 'சாலைகள் அவ்வளவு மோசமாக உள்ளன. இந்தச் சாலையில் ஓடும் ஸ்கூட்டர்களின் கதி இதுதான் என்று நகராட்சிக்கு உணர்த்துவதற்காகத்தான்! நகராட்சி அலுவலகம் முன் ஈமச் சடங்கு நடந்தேறியது!

* * *

அமெரிக்காவில் மாஸசூஸெட்ஸ் நகர் ஆட்சிக் குழு உறுப்பினர் தேர்தலில் ஹெர்பர்ட் கொனோலி ஒரே ஒரு ஓட்டில் தோற்றுப் போனார். பரிதாபம் என்னவென்றால் அவர் தமது வாக்கைத் தமக்கே போட்டுக் கொண்டிருந்தால் தோல்வி கண்டிருக்க மாட்டார்! ஆனால் இவர் வோட்டுச் சாவடிக்கு வரத் தாமதமாகி விட, மூடிவிட்டார்கள்!

* * *

பம்பாயில் மூன்று வருஷங்களாக மூடிக் கிடந்தது கமானி டியூப்ஸ் என்ற நிறுவனம். அறுநூற்றைம்பது தொழிலாளர்களும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து நிறுவனத்தைத் தாங்களே ஏற்று நடத்த உரிமை பெற்றார்கள். தொழிற்சாலையின் பங்குகளைத் தொழிலாளர்களே வாங்கி நடத்துவது இதுவே இந்திய சரித்திரத்தில் முதல் தடவை!

* * *

நெப்போலியன் பயன்படுத்திய டூத்-பிரஷ் ஒன்று சமீபத்தில் மேற்கு ஜெர்மனியில் ஏலம் விடப்பட்டது. வெள்ளியில் செய்து தங்க முலாம் பூசப்பட்ட இந்த பிரஷ் மூன்று லட்சம் ரூபாய்க்கு விலை போயிற்று!

* * *

விசைப்படகு போல் நீரில் விரையும்; அப்படியே மேலேறி காற்றில் பறக்கும்! இதாலி நாட்டைச் சேர்ந்த ஐம்பது வயதான மஸின்கிரி தயாரித்துள்ள படகு விமானம் ரப்பராலானது. தேவையில்லாத போது ரப்பர் படகில் சிறைப்பட்டிருக்கும் காற்றை வெளியேற்றி மடித்து வைத்து விடலாம்!

— ஜூலி; சித்தார்த்.



# முன்னோடி மாநிலம்!

* மலையாளச் சிறுகதை "மாற்றம்" மனத்தை உலுக்கி விட்டது. மனத்தில் சலனமின்றி உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல் வாழும் ஓர் (அப்பாவி) இளைஞனின் வாழ்வில் ஒரு பெண் குறுக்கிடும் போது அவனுடைய இயல்பான வாழ்வில் நேரும் பெரு மாற்றங்களை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் கதையாசிரியர் ஜோஸப் வெண்ணூர்.

இடையகோட்டை, எஸ். சையது ஆரீஃப்.

* நாயகி '88 சிறுகதையின் நாயகி டைரக்டரை அசத்தி விட்டார் என்றால், கதையை எழுதிய ராஜசேகர் நம்மை அசத்தி விட்டார்....!

மயிலாடுதுறை, வி. மாணிக்கம்.

* 'அடுத்த விபத்து எப்போது?' தலையங்கம் முக்கியமான விஷயங்களைச் சுட்டிக் காட்டி எச்சரித்தது. இதுவே லால்பகதூர் சாஸ்திரி காலமாக இருந்தால், நிச்சயம் இவ்வளவு பெரிய விபத்துக்கள் ஏற்பட்டவுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி விலகி இருப்பார்.

சென்னை — 5, எஸ். வி. ராஜசேகர்.

* பெருகி வரும் விபத்துக்களையும் அதனால் ஏற்படும் இன்னல்களையும் சொல்லும் போது 'அடுத்த விபத்து எப்போது?' எனத் தலைப்பிட்டிருந்ததுதான் சற்று உறுத்தலாக இருந்தது.

சென்னை — 91, ஐயாறு எஸ். வாசுதேவன்.

* "ரிஷ்ய சிருங்கர்" கதையை படம் எடுத்ததற்கு ஆச்சரியப்படுகிறீரே? 40, 45 வருடங்களுக்கு முன்பே தமிழில் வசுந்தரா, ரஞ்சன், பட்டு ஐயர், பால சுந்தர் நடித்து வெளிவந்த ரிஷ்ய சிருங்கர் எவ்வளவு நன்றாக எடுக்கப்பட்டிருந்தது என்று யாராவது உங்களுக்குச் சொல்லியிருக்கக் கூடாதோ!

திருநெல்வேலி, எஸ். ராமனாதன்.

* மலையாளப் பட இயக்குநர் அரவிந்தன் 'ஆர்ட் பிலிம்' பற்றிய தங்களின் கேள்விக்கு 'ஜேசுதாஸின்' கர்நாடக இசை பற்றி ஒப்பிட்டிருந்த விதத்தை ரசிக்க முடிந்ததோடு... மக்களின் ரசனையில்தான் மாசுள்ளதாகக் கூறித் திரியும் சிலரைக் கோடிட்டுக் காட்டியிருந்த விதமும்... பிறமொழிப் படங்களை இயக்கும் போது ஏற்படக்கூடிய சிக்கலையும் தெளிவாய்ப் பேசிய அவரது பேட்டி 'கேரள சிறப்பிதழ் I—ன் மணிமகுடமாக அமைந்திருந்தது.

போடிநாயக்கனூர், டி. அனு.

* கல்கியின் கேரளச் சிறப்பிதழ் —I கண்டேன். வெகு அற்புதம் போங்கள்! 'அதெப்படி இந்தியாவிலேயே கேரளாவில் மட்டும் அதிகமாகக் கல்வியறிவு படைத்த மக்கள் இருக்கிறார்கள்?' என்ற எனது சந்தேகத்தைக் 'கல்கி'க்கு செயிண்ட் தாமஸ் கல்லூரியின். பேராசிரியர் ஆண்ட்ரூஸ் அளித்த பேட்டி நிவர்த்தி செய்தது.

தக்கோலம், ஆ. புகாரி.

* கோவளம் கடற்கரை வண்ணப்படம் ரியலி சூப்பர் சார்!

அடுத்த பக்கத்தைத் திருப்பவே மனம் வரவில்லை. பாராட்டுக்கள்!!

சீர்காழி, சண்பை. சிவ. சண்முகம்.

* கேரள மாநிலத்தில் பள்ளி, கல்லூரிகளில் சேர அதிக செலவில்லை, அட்மிஷனுக்கும் அவ்வளவாகச் சிரமமில்லை, பேருந்து மற்றும் படகுகளில் அதிக அளவு கட்டணச் சலுகைகள்... போன்ற பல வசதிகளோடு பெற்றோர்களுக்குக் குழந்தைகளின் கல்வியறிவில் உள்ள ஆர்வம் போன்ற முன்னோடியான தன்மைகளை உங்கள் கட்டுரைகளில் படித்த பின்னர் தான் கேரள மக்களால் கல்வியில் மற்ற மாநிலங்களுக்கு எப்படி முன்னோடியாக விளங்க முடிகிறது என்பதை உணர முடிந்தது.

மதுரை — 7, மதுரை எஸ். செல்வன்.

* ஓங்கி உயர்ந்திருந்த தென்னை மரங்களும், தும்பிக்கையை உயர்த்தியபடியிருந்த யானையும் இடம் பிடித்திருந்த 'கல்கி' அட்டைப்படம், கேரளாவைப் போன்றே மிகவும் பசுமையாயிருந்தது. பாராட்டுக்கள்.

கோவை, உமார்த்தி.

* 'அழகு கொஞ்சும் கேரளம்...' அப்பப்பா! இயற்கை கொஞ்சும் கட்டுரை! உங்கள் கட்டுரையைப் படிக்கும் பலருக்கும் கேரளா செல்ல வேண்டும் என்ற எண்ணம் எழாமல் இருக்காது!

குத்தாலம், எஸ். ராஜா

## வட்டமேஜை

* செல்வி. ஜாய்ஸியின் பேட்டி ஆங்கில மோகம் பிடித்து அலையும் தமிழர்களுக்கு — குறிப்பாகக் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு ஒரு சவுக்கடி.

சென்னை — 40, நா. மாதவன்.

* அரவிந்தன் பேட்டி அருமை. மனசாட்சியோடு ஒரு மனிதர் சினிமா உலகில் நீடிக்கிறார்; வெற்றி காண்கிறார் என்பது அற்புதமான விஷயம். சினிமா என்பது சக்தி வாய்ந்த மீடியா. இதனின் தாக்கம் சமூகத்தைப் பெருமளவில் பாதிக்கக் கூடியது. ஆகவே, நல்ல விஷயங்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியது மிக அவசியம். ஆனால் அரவிந்தன் கூறுவது போல இன்றைய சினிமா உலகம் ஒரு சூதாட்டக் களம்தான். அதிலிருந்து விலகி, மனசாட்சிக்கு மதிப்புத் தருகின்ற அரவிந்தன் போன்றோர் சமூகத்தின் மதிப்புக்குரிய மனிதர்கள். இவர்களின் நிலை மகிழ்ச்சி தரக் கூடியது மட்டுமல்ல; மனநிறைவைத் தரக் கூடியதுமாகும்.

சென்னை — 56, பூவை. விமலன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.




# பிறந்த நாள் இன்று... அரும்பெரும் பரிசு ஒன்றை மீனுவுக்கு அளித்துவிட்டது ஃபேர் அண்ட் லவ்லி.

இந்த நாளுக்காகவே மீனா அரு முயற்சி எடுத்திருக்கிறாள். இரு மாத முன்னேற்பாடுகள் — அதில் முக்கியமானது ஃபேர் அண்ட் லவ்லி ஒத்துழைத்த மகிமை. அவள் மேனிமீது வெண்ணிலவைப் பொழிந்துள்ளது இதமாக, இயல்பாக. பரிசுப் பெட்டகத்தை அவளிடம் நீட்டும் ரவி, பால்நிலா முகத்தழகை பருகுகிறான் சக்கரவாகப் பறவை போல. அதை வாங்கும் மீனாவின் இதயம் பாடுகிறது நன்றிக் கீதம் — ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமுக்கு!

மீனாவைப் போலவே நீங்களும், கவனிக்கத் தக்க சிகப்பழகை அடைந்திட முடியும் ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.

## ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...

ஃபேர் அண்ட் லவ்லி, இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா — இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில் செயல்பட்டு, உடல்



கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது — வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை.

மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்கீன் ஆற்றல், உடல்கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் வெளுமையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி — நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகி விடும்.

## உபயோக முறை:

கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள் மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்ட பின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி, செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.


எளிதில் உள் உறிஞ்சப்படும் குழைவு குணமேோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி, ஒரே சீராகப் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது.

உடலார உணருவீர் இம் மாறுதலை... பிறகு காண்பீர் கண்ணார.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு:
திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி ஆட்வைசர், பி.ஓ. பாக்ஸ் 758, பம்பாய்-400 021.



ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்

ஃபேர் அண்ட் லவ்லி
சிகப்பழகு க்ரீம்




## கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்... இயற்கைக்கே உரிய இதமான வழியில்

NTAS FAL 59 2517 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka

